


கல்கி
KALKI 10-8-1958
30 நயா பைசா


ஆரோக்கியத்தை
விரும்புவோர்
எப்பொழுதும் லைப்பாய்
உபயோகித்தே நீராடுவார்
விளையாடும்போதும்சரி, வேலை
செய்யும்போதும் சரி, அழுக்கி
லிருந்து நாம் தப்ப முடியாது.
நம் ஆரோக்கியத்திற்கு நிரந்
தரமாக ஆபத்து விளைவிக்கும்
நோய்க் கிருமிகள் அழுக்கில்
இருக்கின்றன. அக் கிருமி
களைக் கழுவிக் களைந்து உங்கள்
ஆரோக்கியத்தைப் பாதுகாப்
பது லைப்பாய் சோப்.
LIFEBUOY
SOAP
அன்றுடம் லைப்பாய் சோப்
தேய்த்துக்குளித்து உங்கள்
ஆரோக்கியத்தைக் காத்
துக் கொள்ளுங்கள்.

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



டி. வி. எஸ். ஸின் புது நிலையம்— புதுக்கோட்டை

இப்போது புதுக்கோட்டையில்

உங்கள் கார், டிரக், பஸ் ஆகியவற்றைக் கவனித்து செப்பனிடும் சகல பணிகளையும் 'டி. வி. எஸ்.' ஸிடம் பெறலாம

மோட்டார் வாகனம் வைத்திருப்பவர் யாரானாலும் அவருக்கு இப்போது எண்ணெய் விலை, பாதுகாப்புச் செலவு, 'செப்பனிடும் செலவு, தனி உறுப்புக்களை மாற்றி அமைக்கும் செலவு இவை மிகவும் அதிகமாக இருக்கின்றன என்பது நன்றாகத் தெரியும். விஞ்ஞான முறைப்படி கவனித்துப் பார்த்தால் தான் இந்தச் செலவுகளை குறைக்க முடியும்.

உங்களுக்கு காரோ, பஸ்ஸோ, டிரக்கோ எதுவாக இருந்தாலும் அதை டி. வி. எஸ். மூலம் செப்பனிடுவதில் மிகவும் லாபம் இருக்கும் என்பது நன்றாகத் தெரிய வரும். டி. வி. எஸ். ஸில் மோட்டார் உறுப்புக்களை சோதனை செய்து பார்ப்பதற்கும், திருத்தி அமைத்துக் கட்டுவதற்கும் உரியவையாக மிகவும் நவீன கருவிகள் இருக்கின்றன. நுட்பமாகவும், பொருத்தமாகவும் வேலை செய்ய விசேஷப் பயிற்சி பெற்றவர்கள் இங்கே, நீங்கள் ஒப்பிக்கும் வேலையைத் திறம்பட கவனிப்பார்கள்.

டி. வி. சுந்தரம் ஐயங்கார் அண்ட் ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட்

மதுரை - திருச்சி - திருநெல்வேலி - புதுக்கோட்டை - சேலம் - கோயமுத்தூர்

TVS 289



மலர் 18
இதழ் 2

தமிழ்த்திரு நாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா—பாரதியார்

விளம்பி௵
ஆடி௴ 26௳

மூன்று விஷயங்கள்

கேரளத்தில் பள்ளிக்கூட மாணவர்களுக்கு இலவசப் படகு சௌகரியம் அளித்து விட்டார்கள். எப்படியாவது ஒரு காரணம் கற்பித்து, தற்போது நடைபெற்று வரும் கேரள சர்க்காரை விழ்த்திவிடவேண்டும் என்று சில போட்டிக் கட்சிகள் முயற்சி செய்து வந்தது பலன் அளிக்காமல் போய்விட்டது. இனிமேல் குழந்தைகளுக்காவது பெற்றோர்களுக்காவது சச்சரவு செய்வதற்கு ஏதொரு சாக்குமில்லை. அரசாங்கத்தின் ஏற்பாட்டை மாணவர்களும் ஒப்புக்கொண்டு விட்டார்கள். அமைதியைக் கெடுத்து வரும் சூழ்ச்சிகள் இனி நிறுத்தப்படும் என்று நம்புகிறோம்.

•• •• ••

இரண்டாவது விஷயம் இலங்கை விசாரம். தமிழ் பேசும் மக்கள் பட்டதொல்லைகளைப் பற்றியும் இன்னும் பயத்துக்கிடமான நிலைமை நிலவுவதைப் பற்றியும் கடிதங்களுக்கு மேல் கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன.

இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் இந்தியராயினும் சரி, இலங்கையினராயினும் சரி, க்ஷேம வாழ்க்கைக்கு உரிமை கொண்டவர்கள். இந்தியர்களுடைய சொத்து நஷ்டத்துக்காவது இந்திய சர்க்கார் இலங்கை அரசாங்கத்தாரிடமிருந்து நஷ்டஈடு பெறத் தாட்சண்யமின்றி வற்புறுத்தி உதவ வேண்டும். நஷ்டத்துக்கு ஈடு செய்தால் பட்ட கஷ்டம் ஓரளவு மறையலாம்; நல்லெண்ணம் பரவும்.

இலங்கைப் பிரஜைகள் தமிழராயினும் சரி, சிங்களவராயினும் சரி, ஒன்றுபட்டால்தான் இலங்கை இந்த யுக சரித்திரத்தில் இடம் பெறும். ஒரு சிறு தீவிலுள்ள பழங் குடிகள் வீண் வேற்றுமைக்கும் சச்சரவுக்கும் இடம் தந்தால் முன்னேற்றம் தடைப்பட்டுப் போகும் என்பதை வேறொருவர் சொல்ல வேண்டியதில்லை; இலங்கை சர்க்கார் தாமே உணர்ந்து நடந்து கொள்ளலாம். வல்லரசுகளுடன் சினேகம் நாடி நடந்து கொள்வது சாமர்த்தியமே. அதைப் போல் இலங்கையிலுள்ள பெரும் பகுதியினரையும், அன்பு வலைக்குள் பிடித்துப் போட்டுக் கொள்வதும் சாமர்த்தியமாகும். வாதங்களை விட்டு ராஜநீதியை அனுசரிப்பார்களாக.

அமெரிக்க சர்க்காரும் கானடா சர்க்காரும் எவ்வளவு சினேகமாக இருந்து வருகிறார்கள், எவ்வளவு சாமர்த்தியமாக பரஸ்பரம் பிரச்னைகளைத் தீர்த்து வருகிறார்கள் என்பதையெல்லாம் ஆராய்ந்து பாடம் கற்று அண்டை தேசங்களாகிய இலங்கை சர்க்காரும் இந்திய சர்க்காரும் சாமர்த்தியமாகவும் நீதி முறையிலும் இரு தேசத்து மக்களின் க்ஷேமத்தைக் கவனிக்க வேண்டும்.

நியாயம் பெறுவதின், தமிழர் தைரியத்தைக் கைவிடலாகாது. ஊரை விட்டு, அந்நிய நாட்டுக்குப் போய்விடலாம் என்று யோசிப்பது முற்றிலும் தவறாகும். "நாம் பிறந்து வளர்ந்த ஊர்; நாம் முன்னுக்குக் கொண்டு வந்த தேசம்; நம தாய் நாடு" என்று இலங்கையைப் பிடிவாதமாகவும் விடா முயற்சியுடனும் பற்றி எந்த நஷ்டத்துக்கும் கஷ்டத்துக்கும் தயாராக அஹிம்சை முறையில் உரிமைகளுக்காகப் பாடுபடவேண்டும். சிலர் பயப்பட்டு ஊரைவிட்டு வெளியேற ஆரம்பித்தால் தமிழர் சமூகத்துக்குத் தோல்வி நிச்சயம்.

•• •• ••

மூன்றாவது விஷயம் மிகப் பெரிதாகத் தோன்றி மிகச் சிறிதாகிப்போன மேற்கு ஆசிய சிக்கல். பாக்தாத் பிரதேசத்தில் அரசியல் முறையில் புரட்சி நடந்தது. அனேகமாகப் புரட்சி சமாதான முறையிலேயே முடிந்து விட்டது. ராஜாவைக் கொன்றவர்களை நீதி விசாரணைக்குக் கொண்டு வருவதாகவும் பாக்தாத் புது அரசாங்கத்தார் சொல்வ

தாகத் தெரிய வருகிறது. கொல்லப்பட்டவர்கள் வெகு யோக்கியமாக இருந்தவர்கள் என்றும் சொல்வதற்கில்லை. பொது மக்களுடைய கோபத்துக்கு ஆளாகும் முறையில் நடந்து வந்தனர் என்பதும் வெளியாகி வருகிறது. இவையெல்லாம் எவ்வாறாயினும் ஈராக்கின் புது அரசாங்க நிர்வாகத்தை உலகப் பெருநாடுகள் எல்லாம் அங்கீகரித்து விட்டன.

லெபனான் என்னும் சிறு பிரதேசத்தில் தேர்தல் நடைபெற வேண்டியிருந்தது. அதில் அமெரிக்க சர்க்கார் ஈடுபட்டு ஒரு உத்தியோகஸ்தரைத் தூதராக அனுப்பிப் பல கட்சிகளுடனும் பேசி ஒரு முடிவுக்குத் தேர்தலைக் கொண்டு வந்து விட்டனர். அனாவசியமாக, அந்தத் தூதருக்குப் பக்கபலமாக ராணுவத்தை அமெரிக்க சர்க்கார் லெபனானில் இறக்கி ஒரு பயனற்ற கலகலப்பை யுண்டாக்கினர். அமெரிக்காவின் இந்த நடவடிக்கையைப் பாரபட்சமற்ற அனைவரும் கண்டித்தனர். அந்தப் படையும் சீக்கிரமே திரும்பிப் போய்விடலாம். மீசை மண்ணாகாமலிருப்பதற்காகத்தான் இப்போது கொஞ்சம் தாமதம் போல் தோன்றுகிறது.

அமெரிக்காவுக்குத் துணையாக பிரிட்டனும் ஒரு படையை ஜோர்டானில் கொண்டு போய் வைத்துவிட்டு, தற்போது என்ன செய்வது என்று தெரியாமல் திண்டாடுகிறது. ஜோர்டான் என்பது ஒரு உண்மையான ராஜ்யமல்ல. கர்ணனை, துரியோதனன் ஒரு அரசனாக்குவதற்காக ஒரு ராஜ்யத்தை நிர்மாணித்ததைப் போல் இது ஒரு புது துரியோதன நிர்மாணம். சீக்கிரமே பிரிட்டிஷ் படைகள் திரும்பிப் போகலாம். பெரிய விஷப் பாம்பாகக் கருதிய ஈராக் புரட்சியை அங்கீகரித்து விட்ட பிறகு இந்தச் சில்லறை ஆர்ப்பாட்டங்களுக்குச் சிறிதும் இடமுமில்லை; வேறு காரணமும் இல்லை.

ருஷ்ய அரசாங்கத்தாருக்குப் போரைத் தொடங்குவதில் கொஞ்சமும் விருப்பமில்லை. ஆகையால் முதலில் தோன்றிய அபாய நிலை இப்போது கலைந்து விட்டது.

மேற்கு ஆசிய விஷயத்தைப் பற்றி அந்திய வல்லரசுகள் கூடிப் பேசுவதற்கு இப்போது அத்தியாவசியம் ஒன்றுமில்லாமற் போய் விட்டது. மற்ற விஷயங்களோ, என்றும் தீராத விஷயங்கள். தாம் செய்துவிட்ட பிழைகளைப் பிறர் எடுத்துக் காட்டினால் யாருக்குமே பிடிக்காது. அமெரிக்க சர்க்காருக்கு ''ஸம்மிட் கான்பரன்ஸ்'' பிடிக்கவே இல்லை முதலிலிருந்து ஆட்சேபித்து வந்தார்கள். இப்போதும் பலாத்காரமாகத்தான் வேறு வழி இல்லை என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சில்லறை ஆட்சேபனைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இதற்கிடையில் ஐஸன்ஹோவருடைய உடல் நிலையும் ஒரு சாக்காகும். புது மாப்பிள்ளை டிகாலும், அவருடைய ஆட்சேபனையும் நல்ல சாக்குகளாகும். 'ஸம்மிட் கான்பிரன்ஸ்' அனேகமாக மேகங்களில் மறையும். நம்முடைய பிரதம மந்திரி நேரு அவர்களுக்கு வீண் தொல்லை ஏற்படாது என்றே நம்புகிறோம். அவருக்குப் போகவும் இஷ்டமில்லை; தவிர்க்க முடியாத அழைப்புக்காகத்தான் ஒப்புக் கொண்டார். ஸம்மிட் கான்பிரன்ஸுக்கு அழைக்கப்படுவதே ஒரு பெரிய கௌரவம் என்று நம்மில் சிலர் எண்ணினார்கள். இது முற்றிலும் தவறு. நம்முடைய கௌரவம், இதனால் எல்லாம் பெருகாது. நம் தேசத்தில் நிர்வாகம் நன்றாக நடைபெற்று மக்கள் சுபிட்சமடைந்தால் கௌரவம். சண்டைகள் தீர்க்கும் மத்தியஸ்த பதவிகள் நமக்கு ஒரு கௌரவமும் தராது. நேரு சென்றால் கூடவே பாகிஸ்தானும் செல்ல வேண்டும். எந்தக் காரியத்திலும் இந்தியாவுக்குச் சமமாக பாகிஸ்தானுக்கும் பதவி தர வேண்டும் என்ற கொள்கையைப் பிரிட்டன் மிக ஜாக்கிரதையாகக் காத்து வந்தது. தற்போது அந்தப் பொறுப்பை அமெரிக்கா ஏற்றுக் கொண்டிருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் நம்முடைய பிரதமர் ஏன் போக வேண்டும்? போகாமலிருப்பதே கௌரவம். நண்பர்களோடு உறவாடுதல் நன்மை தரும். சந்தேகிப்பவர்களோடு உறவாடுவதில் ஒரு நன்மையும் இல்லை.

விசேஷ பிரார்த்தனைக் கூட்டம்

— கிண்டி ராஜபவனம் —

காந்தி மண்டபத்தில்

ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திர பிரஸாத் முன்னிலையில்


ஆகஸ்ட் மாதம் 8-ந் தேதி வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணிக்கு


*

நாகஸ்வர இன்னிசை, தக்கர்பாபா வித்தியாலய மாணவர்கள் சாரதா வித்தியாலய போதனாமுறை பயிற்சிப்பள்ளி மாணவிகள் நாற்புறமும் கீதை பாராயணம், பஜகோவிந்தம், துதி கீதங்கள், ராமநாம பஜனை

★

இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் துதிகீதங்கள் பாடுவார்


லெபனான் புது ஜனாதிபதியைத் தேர்ந்தெடுத்து விட்டது.
அமெரிக்கா லெபனானை விட்டு வெளியேற வேண்டும்
என்பதை இது வலியுறுத்துகிறது.
லெபனானிலிருந்து வெளியேறு


அரசியல் கட்சிகளுக்குக் கம்பெனிகள்
நன்கொடை அளிப்பது சட்டப்படி செல்லும்.
ஆனால் நெறிமுறைக்கும் ஜனநாயகத்துக்கும்
ஒவ்வாது என்று சென்னை உயர் நீதிமன்றம்
தீர்ப்பளித்திருக்கிறது.
கம்பெனிகள்
பங்குதாரர்கள்
பணம்
அரசியல் கட்சிகள்
விஜி

என்ன சேதி?

அரிசிக் கன்ட்ரோல்

பாரதப் பிரதமர் நேரு அரிசி உணவு சாப்பிடுபவர்களுக்கு எச்சரிக்கை செய்திருக்கிறார். மீண்டும் உணவுக் கன்ட்ரோல் வரலாம் என்கிறார்.

நிலச் சீர்திருத்தங்களின் பயன் உணவு உற்பத்தி குறைவது. உணவு உற்பத்தி குறைவதின் பயன் அரிசிக் கன்ட்ரோல். அரிசிக் கன்ட்ரோலின் பயன் யோக்கியமான விவசாயிகள் எல்லாம் திருடர்களைப் போல் வாழ்க்கை நடத்த நேர்வது. அதன் பயன் சொல்ல வேண்டியதில்லை. முந்தியே கண்டிருக்கிறோம்.

நிலத்தை விலை கொடுத்து வாங்கியவனுக்கும், அவன் சந்ததிக்கும் உரிமையில்லாமல் உழவுத் தொழிலுக்காகப் புகுந்தவனை நில உரிமையாளனாகச் செய்து விடுவது உணவு உற்பத்திக்கு வழியல்ல என்பதை இப்போதாவது உணர்ந்து மக்களின் நலன்களுக்கு நல்ல வழி தேடவேண்டும். உழுவதற்காக வந்த ஒவ்வொருவனையும் அவனுடைய தேர்தல் வோட்டை உத்தேசித்து, அவனையே நிலத்துக்கு எஜமானனாகச் செய்து விட்டதன் பயன் பயிர்த் தொழிலுக்கு வேண்டிய முதலீடு இல்லாமல் நிலத்தின் வெள்ளாமை குறைந்து விட்டது. மறுபடியும் அரிசிக் கன்ட்ரோல் வராமல் ஆண்டவன்தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும்.

விலைவாசிகள்

நாளுக்கு நாள் விலைகள் ஏறுமுகமாக இருக்கின்றன. அன்றாடத் தேவைக்கு வேண்டிய அரிசி, பருப்பு, புளி, மிளகாய் முதலிய சாமான்களின் விலை ஏறிக் கொண்டேயிருக்கின்றன; கெட்ட கேடு சீரகம் வி. 8 ரூபாயாகி விட்டது. அரிசி விலை படி ரூ. 1-3-0 ஆக உயர்ந்து விட்டது. இந்த விலை ஏற்றத்தினால் மத்தியதர மக்கள்தான் பெரும் கஷ்டங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இறக்குமதி கன்ட்ரோலினால் ஏற்கனவே பல வர்த்தக ஸ்தாபனங்களும் தொழில் ஸ்தாபனங்களும் மூடப்படும் நிலையில் இருக்கின்றன. சில மூடப்பட்டு விட்டன! சில ஸ்தாபனங்களில் ஆள் குறைப்புப் படலமும் நடந்து வருகிறது. இவற்றினால் பல தொல்லைகளுக்கு உள்ளாகிறவர்கள் மத்தியதர வகுப்பினர்தான். இந்தத் தொல்லைகள் போதாது என்று உள் நாட்டுச் சாமான்களின் விலைகளும் ஏறினால் அவர்கள் எப்படி வாழ்க்கை நடத்த முடியும்? இந்த நிலைமைக்குக் காரணம் என்னவென்பதைக் கண்டு அக் காரணங்களை அகற்றினால்தான் மக்கள் பிழைக்க முடியும்.

வாழ்க திலகர் நாமம்!

சுதந்திர இயக்கத்தில் பல கட்டங்கள் இருந்தன. அதில் மிக முக்கியமானதொன்று திலகர் கட்டம். நியாயமும் நீதியும் பேசி வந்தது முதல் கட்டம். அதற்கு ஆங்கிலேயர் வணங்க மாட்டார்கள் என்றும், நியாயத்துக்குப் பின்பலமாகப் பொது மக்களின் எழுச்சியும் எழவேண்டும் என்று பாலகங்காதர திலகர் சுதந்திர இயக்கத்தைப் பாமர மக்களுக்கு எடுத்து உபதேசித்தார். அது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கடும் கோபத்தைக் கிளப்பிற்று. கடுமையான சிறைத் தண்டனை அடைந்தார். இமயம் முதல் குமரி வரையில் சுதந்திரக் கிளர்ச்சி வேகமடைந்தது. தண்டனைக்கும் ஆபத்துக்கும் பயப்படாமல் தேச பக்தர்கள் முன்வந்தார்கள். வ. உ. சி., சுப்பிரமண்ய சிவா முதலானோர் ஆயுள் தண்டனை அடைந்தது இந்தக் கிளர்ச்சியிலேதான். ஆகஸ்ட் முதல் வாரம் திலகர் ஞாபகார்த்த வாரமாகக் காந்தியடிகள் 1920-ல் மக்களுக்கு வகுத்துத் தந்தார். ஒத்துழையாமை இயக்கத்துக்கு நிதி ஏற்படுத்தியதும் இந்த வாரத்தில்தான். அதற்கு 'திலகர் சுயராஜ்ய நிதி' என்று நாமம் இட்டதும் காந்தியடிகளேதான். லோகமான்ய திலகருடைய சிறந்த பணியை என்றென்றும் மறவாமல் நம் மக்கள் இந்த வாரத்தைக் கொண்டாடுவார்களாக.



அருள்வாக்கு

'புத்தி' என்ற வார்த்தை அடிக்கடி உபயோகிக்கப்படுகிறது. அதனுடைய பொருளைத் தெரிந்து கொள்ளுவது அவசியம். சில இடங்களில் புத்தியையும் ஞானத்தையும் ஒன்றாகவே சொல்லியிருக்கிறது. அங்கெல்லாம் புத்தி யோகமும் ஞானயோகமும் ஒன்று என்று கொள்ளலாம். ஆனால் பலத்தில் இச்சையில்லாமல் கர்மாக்களைச் செய்வதுதான் ஸமத்வ புத்தி, அப்போதுதான் மனம் தூய்மை பெற்று பரமாத்ம விஷயத்தில் ஈடுபடும் என்று சொல்லும்போது, புத்தி என்ற வார்த்தை மனத்தைக் குறிக்கும். 'அவனுடைய புத்தி சலனமற்றிருக்கும்' என்ற வாக்கியம் இதை எடுத்துக் காட்டுகிறது. புத்தியும் மனமும் ஒன்றாகக் கொள்ளப்படுவதிலிருந்துதான் "ஸ்திதப்பிரக்ஞன் என்பவன் யார்? அவனுடைய நடவடிக்கைகள் எப்படி இருக்கும்?" என்ற கேள்விகள் கேட்கப்படுகின்றன. இந்திரியங்களை ஆகர்ஷிக்கும் எந்த விஷயத்தினாலும் ஆகர்ஷிக்கப்படாத மனத்தை உடையவன் ஸ்திதப்பிரக்ஞன். நமக்குக் கெடுதல் ஒன்றும் நேரக்கூடாது என்ற கவலையினால் பயம் உண்டாகிறது. அம்மாதிரி ஏதாவது நேரப்போகிறதென்று உணர்ந்ததும் ஏற்படுவது சோகம். அது நேர்ந்துவிட்டால் சோகம் முதிர்ந்து அழுகை வந்து விடுகிறது. சோகத்துடன் சம்பந்தப்பட்டது பகைமை. இன்பமும் துன்பத்தைப்போல எதிர்பார்க்கப்படுவதுதான். விரும்பியது கிடைக்கப் போகிறதென்றதுமே இன்பம் உண்டாகிறது. அது கிடைத்த பிறகு ஏற்படுவது மதம். இதை டம்பம் என்றும் சொல்லலாம். ராகம் என்பது மனத்தில் தங்கியுள்ள இச்சை. இந்த இச்சை நிறைவேறினால் காமமாக மாறுகிறது. நிறைவேறாவிட்டால் அதுவே குரோதமாக ஆகிறது. இவை எல்லாம் மனத்தில் உண்டாகும் உணர்ச்சிகள், மனவெழுச்சிகள். நாம் எல்லோரும் இவ்வித மனவெழுச்சிகளுக்கு உட்பட்டே வாழ்கிறோம். இம்மாதிரி மனவெழுச்சிகள் அறியாமையால் உண்டாகின்றன. நம்மிடத்தில் ஏதோ ஒரு குறைபாடு இருக்கிறது. அந்தக் குறையை வெளிப்பொருள்களை அடைவதன் மூலம் பூர்த்தி செய்து கொண்டுவிட முடியும் என்ற அறியாமை. அதனால்தான் மனம் சதா சலித்துக் கொண்டே இருக்கிறது. சலிக்காமல் மனம் நிலைத்து நின்றுவிட்டால் உண்மைப் பொருள் நம் உள்ளத்தில் பிரகாசிக்கும். அப்போது வெளி உலகத்திலிருந்து நாம் அடைய வேண்டியது ஒன்றுமில்லை என்பதை உணருவோம். நம்முடைய உள்ளத்துக்குள்ளே இருக்கும் ஆன்மாவிலேயே திருப்தி அடைந்துவிடுவோம். இதைத்தான் "ஆத்மன்யே வாத்மனா துஷ்ட:" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்திரியங்களெல்லாம் தன் வசத்தில் இருந்து, இந்திரிய விஷயங்களில் மனம் செல்லாமலும் இருந்தால், அப்படிப்பட்ட மனிதன் ஸ்திதப்பிரக்ஞனாக ஆகிறான். அவனுடைய "பிரக்ஞை" சலிக்காமல் நிலைபெற்றிருக்கும்.

—ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடி பீடம்.

அவசரகாலச் சட்டம் நீடிக்க வேண்டும்

—கொழும்பு, ஆகஸ்டு 1வ.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அக்கரைப்பற்று என்னுமிடத்தில் தமிழர்களுக்கும் முஸ்லீம்களுக்குமிடையில் வகுப்புக் கலகம் மூண்டதாயும் ராணுவமும் போலீசும் விரைந்து சென்று கலகத்தை அடக்கிவிட்டதாயும் அரசாங்க அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது. கிழக்கு மாகாணத்தில் பல இடங்களிலும் தமிழர்களும் முஸ்லீம்களும் கலந்து வாழ்கிறார்கள். அவர்கள் இருவர் பேசுவதும் தமிழ் மொழியேதான். ஒரு சில முஸ்லீம்கள் தனிச் சிங்களச் சட்டத்தை ஆதரித்த பொழுதிலும் பெரும்பாலான முஸ்லீம்கள் தங்களது தாய்மொழியாகத் தமிழையே கருதித் தமிழுக்குச் சம உரிமை வேண்டுமென்ற கோரிக்கையைப் பலமாக ஆதரித்து வருகின்றனர். தமிழரசுக் கட்சியில் ஏராளமான முஸ்லீம்கள் அங்கத்தினர்களாக இருந்துவருவதே இதற்கு அத்தாட்சி. இது பிடிக்காமல் இவ்விரு சாராருக்குமிடையில் மித்திர பேதம் செய்யச் சில சக்திகள் நெடு நாட்களாக முயற்சி செய்து வருவது பகிரங்க ரகசியம். மொழிப்பிரச்னை தீவிரமடைந்திருக்கும் இத்தருணத்தில் தமிழர்களுக்கும் முஸ்லீம்களுக்குமிடையில் பிணக்கைக் கிளப்பிவிட முயற்சிகள் நடப்பதாகத் தோன்றுகிறது. ஆனால் இந்த முயற்சிக்குப் பலியாவது தற்கொலைக்கு ஒப்பானதென்பதை இரு தரப்பாரும் நன்கு உணருவார்களென்றே எதிர்பார்க்கப்படுகிறது. வகுப்புக் கலகம் நடந்ததாகக் கூறப்படும் பகுதிகளில் சமாதானத்தை நிலைநாட்ட இரு வகுப்புத் தலைவர்களும் தீவிரமாக முயற்சியெடுத்து வருகிறார்கள்.

சிறு சண்டைகள் நடப்பது எங்கும் எப்பொழுதும் சகஜம். சாதாரண சமயங்களில் அவற்றை யாரும் பொருட்படுத்த மாட்டார்கள். இன்று நாட்டில் நெருக்கடியான நிலைமை இருந்துவருவதனால் சிறு தகராறுகளும் மலையளவு வகுப்புச் சண்டைகளைப்போலக் காட்சியளிக்கின்றன. மக்கள் மனத்திலிருந்து இன்னும் பீதி முற்றாக நீங்கவில்லையென்பதையே இது எடுத்துக் காட்டுவதாக உள்ளது. நாட்டில் மேலெழுந்தவாரியாகச் சமாதானம் நிலவுவதைப் போலத் தோன்றிய பொழுதிலும் ஜனங்கள் மனத்தில் வெறியும் உணர்ச்சிகளும் இன்னும் முற்றாகத் தணியவில்லையென்பதை எல்லோரும் நன்கு அறிந்திருக்கிறார்கள். அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டால் என்ன நடக்குமோ என்ற கவலை எல்லோருடைய மனத்திலும் இருந்து வருகிறது. இதை நன்கறிந்த அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடித்து வைத்திருக்கிறது. பலமாதிரியான இடைஞ்சல்கள் இருந்தபோதிலும் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட வேண்டுமென்று யாரும் கருதவில்லை. பொறுப்பு வாய்ந்த பல பத்திரிகைகளும் அவசரகாலச் சட்டம் நீடிக்க வேண்டுமென்பதையே வற்புறுத்தியுள்ளன.

—ரஜனி

ஆடிமாதத்தின் ஆனந்தம்!

மலரைப் பார்க்கவோ—அன்றி
மலர் முகத்தைப் பார்க்கவோ?

எங்கும் பசுமை. எங்கும் மலர்ச்சி. எங்கும் மகிழ்ச்சி. இதுவே ஆடிமாதத்தின் தனிப்பெரும் தகைமை.

காவிரியாற்றிலே ஆடி பதினெட்டில் வெள்ளம் பெருகி வரும். மக்கள் குதூகலமாக ஆற்றங் கரையிலே கூடிக்குலாவி மகிழும் காட்சி தமிழகத்துக்கே தனிச் சிறப்பளிப்பது.

புதுமணம் புரிந்த காதலர்கள் ஆடி ஆறு மாதம் என்று காதலியின் இல்லத்துக்குச் சென்று முதன் முதலில் காதலியைத் தனிமையில் கண்டு கொஞ்சி மகிழும் காலமும் இந்த ஆடி மாதம்தான்.

அத்தகைய காதல் விளையாட்டொன்றினையே இவ்விதழ் அட்டைச் சித்திரமாக வழங்கியிருக்கிறார் ஓவியர் விஜு.

காதலியின் கூந்தலிலே ரோஜா மலரைச் சூட விரும்பும் காதலனின் ஆர்வம் எல்லாம் காதலனின் மலர்க்கரமே எடுத்துக் கூறுகிறது!

சித்திரத்தில் காதலியைக் காண்கிறோம்; காதலனைக் காணவில்லை. அதனால் என்ன? உருவமற்ற காதல் இந்தச் சித்திரத்தில் தெளிவாகக் காண்கிறோம்!

பாரத நாட்டின் இன்றையப் பொருள் நிலையும்
அதன் முக்கிய அம்சமாகிய
அந்நியக் கடன்களும் அவற்றின் விளைவும்
என்ற விஷயம் பற்றிய இந்த ஆராய்ச்சி அரங்கத்தில்
அடுத்த வாரம் கலந்து கொள்ளும் அறிஞர்கள்
டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ், திரு க. சந்தானம்



42

கலைகள் பல வகைப்படும். கல்லில் பதுமை செதுக்கல், சங்கீதம், நாட்டியம், சித்திரம் எழுதுதல், இலக்கணம், வைத்தியம், கணிதம், மாளிகை கட்டுதல், ரசாயனம் முதலிய எண்ணற்ற வகை. இவற்றுள் எல்லாம் தலையாய கலை எதுவென்றால், தீமை செய்தவர்களுக்குத் தீமை செய்யத் தோன்றுகிற அந்த எண்ணத்தை விடுத்துத் தீமை செய்யாமல் பொறுத்தல். இந்த ஞானமே ஒரு மிகப் பெரிய கலையாகும். அதைக் கற்றுப் பயில வேண்டும். பழி வாங்குவதற்காகச் செய்யும் தீமையும் தீமையே ஆகும்.

தீய செயலுக்குத் தீய செயல் மாற்றல்ல என்பதை அறிந்து பிறர் இழைத்த துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளும் ஞானமே எல்லா வகை அறிவிலும் சிறந்த அறிவு. கலைகளுக்குள் பெரிய கலை.

**அறிவினுள் எல்லாம்
தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்.**

தலையென்ப — சிறந்தது என்று நல்லோர் மதிப்பர்.

துன்பம் இழைத்தவர்களுக்குத் துன்பம் இழைக்கலாம் என்று வைத்துக் கொண்டால் பாபத்தின் மேல் பாபம் விளைந்து வளர்ந்து முடிவில்லாத பாபத் தொடர் ஆகும். துன்பம் இழைத்தவர்களைப் பொறுத்தலே பாபத்தின் மேல் பாபம் விளைந்து வளரக் கூடிய முடிவில்லாத தொடரை அறுத்து அழிப்பதற்கு வழியாகும்.

சங்கிலி கோத்தாற்போல் தீச் செயலின்மேல் தீச் செயல் வளர்ந்து கொண்டே போகும். தீமைக்குத் தீமை என்கிற தவறான முறையை விட்டு விட்டுப் பிறன் இழைத்த தீமையை நீ பொறுத்துக் கொண்டால், தீமையின் சந்தானம் அத்துடன் தீர்ந்துபோகும். மற்றொருவன் செயலை நீ அடக்கியாள முடியாது. உன் செயலை நீ தடுத்து ஆள முடியும். இந்தப் பேருண்மையை உணர்ந்து நடப்பதே சிறந்த அறிவு.

* * *

**மறந்தும் பிறன்கேடு
சூழற்க: சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு.**

பிறர் நன்மையையும் க்ஷேமத்தையும் கவனிக்காமல் மறதியின் காரணம் சில காரியங்களைச் செய்து விடுகிறோம். அதனால் அவர்களுக்குத் துன்பம் நேரிடுகிறது. மறதி என்பது இங்கே பிறருடைய நலத்தை மறப்பது. இப்படிச் செய்தால் தெய்வமும் நம்முடைய நலத்தை மறந்து விடும். மறந்துவிட்டு நமக்குத் துன்பம் உண்டாக்கும் நிகழ்ச்சிகள் நடக்கச் செய்யும்.

'அறம்', 'தெய்வம்' என்றால் இயற்கை நியதி. பிறருக்குத் துன்பம் இழைக்கும் செயல்கள் நமக்குத் துன்பம் விளைவிக்கும். இந்த நியதியிலிருந்து தப்ப முடியாது. ஒருவனைக் கெடுத்தால் நாம் கெடுவோம்.

பிறருடைய க்ஷேமத்தை நினைவில் வைப்பது கடமை. மறதி குற்றமாகும். அந்தக் குற்றத்தின் விளைவிலிருந்து தப்ப முடியாது.

'மறந்தும்' என்று சொன்னபடியால், தெரிந்தே செய்தால் என்னவாகும் என்பதைச் சொல்லவேண்டியதில்லை.



நான் பீ. ஏ. பரீக்ஷையில் அதிக மார்க்குகளுடன் தேர்ச்சி பெற்றேன்

போர்ன்-விடாவுக்கு எனது நன்றி

படிப்பில் என்னால் கவனமே செலுத்தமுடியாமலிருந்தது. உற்சாகமற்று களைப்புடன் இருந்தேன். நான் பீ. ஏ. பரீக்ஷையில் பாஸ் செய்யமாட்டேன் என்று எனது உபாத்தியாயர் சொன்னார். எனக்கு வாழ்க்கையே வெறுத்துப்போய்விடும் போல் இருந்தது. அதுசமயம்தான் என் தாய் போர்ன்-விடாவைப் பற்றி என்னிடம் சொன்னாள். தினந்தோறும் இரவில் படுக்கப் போகுமுன் போர்ன்-விடா சாப்பிட்டு வந்தேன். வெகு சீக்கிரத்தில் என் உடம்பில் சக்தி ஊற ஆரம்பித்தது. நான் பீ. ஏ. பரீக்ஷையில் அதிக மார்க்குகளுடன் தேர்ச்சி பெற்றேன். அத்துடன் வெளிநாட்டுக்கு சென்று மேல் படிப்புக்கான ஸ்காலர்ஷிப்பையும் பெற்றேன். போர்ன்-விடாவுக்கு எனது நன்றி.

எங்கள் குடும்பத்தில் எல்லோரும் தினமும் இரவில் படுக்கப் போகுமுன் போர்ன்-விடா சாப்பிடுகிறோம்—உங்களுக்கும் பலத்தையும், வலிமையையும் போர்ன்-விடா கொடுக்கும் என்பதை நாங்கள் நிச்சயமாக அறிவோம்.



For Strength and Vigour

BOURN-VITA

MADE BY *Cadbury's*



தென்னிந்தியாவின் தொழிலதிபர்கள் வரிசையில் முதலில் நிற்பவர் திரு எஸ். அனந்தராமகிருஷ்ணன். ''அமால்கமேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்'' என்னும் ஸ்தாபனத்தின் நிர்வாகஸ்தர் என்ற முறையில் ஸிம்ஸன் கம்பெனியைச் சேர்ந்த எல்லா கம்பெனிகளையும் நிர்வகிக்கிறார். தென்னிந்தியத் தொழில் அபிவிருத்தியில் அவருக்கு ஆழ்ந்த அக்கறை உண்டு. பரந்த அனுபவமுண்டு. அவர் கூறும் கருத்துக்கள் கவனிக்கத் தக்கவை.

—ஆசிரியர்

வரி முறை மாற வேண்டும்

எஸ். அனந்தராமகிருஷ்ணன்

நமது இந்திய அரசாங்கத்தின் நிதி நிலைமை, பொதுவாகக் கவனிக்குமிடத்து, நல்ல நிலையிலேயே இருக்கிறது. எனினும் நாட்டுப் பொருளாதாரம், தற்போதைக்கு, தாறுமாறாகவே இருக்கிறது. வரிகள் விஷயமாக மத்திய நிதி இலாகா புரிந்த சர்க்கஸ் நடவடிக்கைகள் பொதுமக்களுக்கு உற்சாக மூட்டுவதை விட அலுப்பைத்தான் உண்டாக்கி இருக்கின்றன. புதிய மத்திய வரவு செலவு மந்திரி திரு மொரார்ஜி தேசாய், மத்திய சர்க்காரின் வருமானத்தை இப்போதிருக்கும் ரூ 700 கோடியிலிருந்து ரூ 1000 கோடிக்குப் புது வரிகள் விதித்து உயர்த்த வேண்டும் என்று கோருவது இவ்வித சலிப்பைத்தான் உண்டாக்கியிருக்கிறது.

இந்தச் சலிப்பு ஏற்பட்டிருக்கிறதென்பதற்கு மூன்று அறிகுறிகள் காணப்படுகின்றன. முதலாவது, தேசிய சேமிப்பு விகிதத்தில் குறைவு ஏற்பட்டிருக்கிறது. இரண்டாவது, நாட்டின் தொழில் அபிவிருத்திக்கு முதலீடு செய்வதில் குறைவு தோன்றியிருக்கிறது. மூன்றாவது, நாட்டின் அன்னியச் செலாவணி நிலைமையில் பயங்கரப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது.

1957-58-ம் ஆண்டின் முதல் பத்து மாதத்தில் நாட்டில் சிறு சேமிப்புத் தொகை ரூ.37.6 கோடியாக இருந்தது. அதற்கு முந்திய வருஷத்தில் (1956-57) இதே பத்துமாத காலத்தில் சேமிப்பு ரூ. 44·8 கோடியாக இருந்தது. இத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது தனியார் தொகுதி முதலீடு அதிகமான விகிதத்திலிருந்தது என்று சொல்லலாம். ஆனால் இதுகூட இப்போது குறைந்து வருகிறது. சமீப ஆண்டுகளில் தொழில உற்பத்தி கணிசமான அளவுக்குப் பெருகி விட்டது. தொழில் உற்பத்திக் குறியீட்டு எண் 1951 - ஆம் ஆண்டில் 100 என்ற அடிப்படையில், 1952-ம் ஆண்டில் 103·6 ஆகவும் 1956-ம் ஆண்டில் 133·0 ஆகவும் உயர்ந்தது. இதே காலத்தில் கம்பெனிகளில் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 606 கோடியிலிருந்து ரூ. 724 கோடியாக உயர்ந்தது. ஆனால் அதிகப்படியாக முதலீடு செய்யப்பட்ட இந்த 118 கோடி முழுதும் புதிதாகப் போடப்பட்ட மூலதனம் அல்ல. ஏற்கனவே செயல் புரிந்துகொண்டிருந்த பழைய கம்பெனிகளிலும் தனி முதலாளிகள் தொழிலிலும் கைவசமிருந்த தொகைதான் மூலதனமாக மாற்றப்பட்டது. இந்த அதிகப்படியான முதலீட்டுக்கு எதிர்மறை போன்று, 1953-ல் 12,413 ஆக இருந்த கம்பெனிகள் எண்ணிக்கை 1957-ல் 9,640-க்குக் குறைந்து விட்டது. இதையே வேறுவிதமாகச் சொல்லுவதானால் மூலதன உற்பத்தி மூலம் புதிதாகச் செலுத்தப்பட்ட முதலீடு வருஷத்துக்கு 5 கோடி ரூபாய் என்று கணக்கு வரும். செயல் புரிந்து கொண்டிருந்த கம்பெனிகள் மூடப்பட்டதன் மூலம் ஏற்பட்ட மூலதன நஷ்டம் வருஷத்துக்கு ரூ. 8 கோடி ஆகிறது. இதிலிருந்து சேமிப்பு மூலம் மூலதனம் பெருகுவதற்குப் பதில் ஏற்கனவே போட்டிருந்த மூலதனம் அழிந்து வருகிறது என்பது விளங்கும். ஆனால் நமது அரசாங்கம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முன்னேறிச் செல்லும் சுபிட்சப் பாதையில் இது ஒரு சாமான்யச் சறுக்கல் தான், கவலைப்பட வேண்டியதில்லை என்று எண்ணியது போலும்!

ஆனால் அன்னியச் செலாவணி நிலைமையில் ஏற்பட்ட இன்னல்கள் நமது மத்திய அரசாங்கத்தை ஒரு குலுக்குக் குலுக்கித் தங்கள் பாதையில் ஒரு பள்ளம் இருக்கிறதென்பதை உணர்த்திவிட்டது. லண்டனில் நாம் சேமித்து வைத்திருக்கும் ஸ்டர்லிங் நிதி மறைய ஆரம்பித்தபோதுதான் இந்தப் பள்ளம் இருந்ததை அவர்கள் உணர்ந்தனர். 1956, ஏப்ரல் மாதத்தில் ஆரம்பித்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அன்னியச் செலாவணியில் ரூ. 1100 கோடி வரையில் துண்டு விழலாம் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இதை நமது கையிருப்பு நிதியிலிருந்து ரூ. 200 கோடி வரையில் எடுத்தும் (இந்த நிதியில் அப்போது ரூ. 700 கோடி இருந்தது) அயல் நாடுகளிலிருந்தும் தனிப்பட்டவர்களிடமிருந்தும் தொழில் ஸ்தாபனங்களிடமிருந்தும் ரூ. 100 கோடி வரையில் கடன் எழுப்பியும், ரூ. 800 கோடி ரூபாய் வரையில் உலக ஸ்தாபனங்களிடமிருந்தும் அன்னிய அரசாங்கங்களிடமிருந்தும் கடன் வசதி செய்தும், ஈடு செய்து விடுவது என்று திட்டமிட்டனர். ஆனால் இந்தத் திட்டங்களும் உத்தேசங்களும் பஞ்சாகப் பறந்தன.

எச்சரிக்கையும் புறக்கணிப்பும்

இறக்குமதிச் சாமான்கள் எதிர்பார்த்ததைவிட அதிகமாக வந்து குவிந்தன. செலவு அதிகமாயிற்று. ஆலைச் சாமான்களும் மூலப்

பொருள்களும் இவ்வளவு கணிசமான அளவுக்குத் தேவைப்படாது என்றே நமது திட்ட அதிகாரிகள் எண்ணினர். திட்ட காலம் ஆரம்பிப்பதற்கு முன்னம் ஏற்பாடு செய்த இறக்குமதிப் பண்டங்களே நமது அன்னியச் செலாவணியில் பெரும் பகுதியை ஜீரணம் செய்து விட்டன.

இதற்குமேலாக, நமது பாதுகாப்பு இலாகாவின் செலவும் அதிகரித்துவிட்டது. இவற்றின் காரணமாக 1956 ஏப்ரல் முதல் தேதி ரூ. 746 கோடியாக இருந்த நமது ஸ்டர்லிங் நிதி 1957-ம் ஆண்டு இறுதியில் ரூ. 296 கோடியாகக் குறைந்தது. 1957 செப்டம்பர் 30ல் நாம் அயல்நாட்டுச் சாமான்களுக்காக ஏறக்குறைய ரூ. 1000 கோடி வரையில் செலுத்த வேண்டியிருந்தது. இதைத் தவிர, திட்டத்தின் அந்தியாவசியமான "மத்திய பாகம்" என்று கருதப்பட்ட அம்சங்களை நிறைவேற்றி வைக்க மேலும் கணிசமான தொகைக்கு வகை செய்தாக வேண்டும்.

இந்த அன்னியச் செலாவணி நெருக்கடி உருவாவதைத் தொழிலதிபர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர்கள் விடுத்த எச்சரிக்கைகளை அரசாங்கத்தார் புறக்கணித்தனர். அல்லது அவை யெல்லாம் தோல்விமனப்பான்மையினால் ஏற்பட்ட மயக்கம் என்று திட்டத்தை ஆதரித்தவர்கள் இலேசாகப் பேசி விட்டனர். எனினும், திட்ட அதிகாரிகள் கூடச் சில ஆண்டுகளுக்குமுன் காணப்பட்ட நம்பிக்கையை இழந்து, சயலில் நடத்தக் கூடாத அளவு திட்டமிடப்பட்டது என்பதை ஒப்புக்கொள்ளும் நிலைமைக்கு வந்தனர். இன்னும் சிலர் கணிசமான அளவுக்கு அன்னிய உதவி நமக்குக் கிடைத்திருந்தும், இது போதவில்லை, இன்னமும் வெகு தாராளமாக வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்று குறை கூறவும் முற்பட்டனர்.

மத்திய சர்க்கார் 1958-59 வரவு செலவுக் கணக்கில் சொல்லியபடி 1957ம் வருஷ மார்ச் வரையில் அயல் நாடுகளிலிருந்து இந்தியா கடன் உதவி பெற்றது ரூ 463 கோடி. அதில் ரூ. 219 கோடி வரையில் செலவு செய்யப்பட்டு விட்டது. இதைத் தவிர இதர உதவி வகைகள் மூலம் நமக்குக் கிடைக்கவிருக்கும் தொகை சுமார் ரூ. 325 கோடி என்று உத்தேசமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த உதவிகள் சேர்ந்து இரண்டாவது திட்டத்தை நிறைவேற்றி வைக்கப் பெரிதும் பயன்படும் என்று பிரதமர் நேரு அச்சமயம் சொன்னார். அபிவிருத்தித் திட்டங்களுக்காக அயல்நாடுகளிலிருந்து தவணைக் கடன்களுக்கும் ஏற்பாடு செய்ய முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இம்முயற்சிகளும் பலனளித்து வருகின்றன. வெளி நாடுகளிலிருந்து புதியதாகச் சில கடன்களும் கிடைத்திருக்கின்றன. ஆகவே இந்த வருஷத்திலும் அடுத்த வருஷத்திலும் நாம் திருப்பிக் கொடுக்க வேண்டிய தவணைக் கடன்களின் அசலையும் வட்டியையும் சிரமமின்றிக் கொடுத்துவிட முடியும்!

நாட்டின் மொத்த ஆஸ்திகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், நமது தேசிய கடன்கள் அதிகமானவை எனத் தோன்றாது. இந்திய அரசாங்கம் இங்கிலாந்துக்கு வட்டியுடன் கொடுக்க வேண்டிய கடன் 1938—39ம் ஆண்டில் ரூ. 464·94 கோடியாக இருந்தது. 1957ம் ஆண்டில் ரூ. 23·20 கோடிக்குக் குறைந்து விட்டது. மாறாக டாலர் கடன்கள் 1949—50ல் ரூ. 16·77 கோடியிலிருந்து 1957ல் ரூ. 144·94 கோடிக்கு உயர்ந்து விட்டது. இத்துடன் ஸோவியத் ருஷ்யாவிலிருந்தும், மேற்கு ஜெர்மனியிலிருந்தும் இதர நாடுகளிலிருந்தும் ரூ. 29·30 கோடி கடன் நமக்குக் கிடைத்திருக்கிறது. உள்நாட்டிலேயே இதுவரையில் நமது அரசாங்கம் ரூ. 3138·73 கோடி கடன் எழுப்பியிருக்கிறது. இந்தக் கடன்களுக்கு எதிராக நமது மத்திய அரசாங்கத்தின் வட்டி சம்பாதித்துக் கொண்டிருக்கிற ஆஸ்திகளின் மொத்தம் 1943-49-ல் ரூ. 1421·12 கோடியாக இருந்தது, 1957ம் ஆண்டு முடிவில் ரூ. 3395·87 கோடியாகப் பெருகி விட்டது.


திரு எஸ். அனந்தராமகிருஷ்ணன்

தவிர்க்க முடியாத தொல்லை

ஏட்டளவில் நமது மொத்த ஆஸ்தியும் கடன்களும் கவலை தரக் கூடிய வகையில் இல்லை என்றாலும் திட்டத் தொகையை அதிகரிப்பதிலும் மேலும் பெரும் அளவில் கடன் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளுவதிலும் ஜாக்கிரதையாகஇருப்பது அவசியம். நிதி பற்றாக் குறையைப் பூர்த்தி செய்யத் திட்ட கால ஐந்தாண்டில் ரூ. 1200 கோடி வரையில் நோட்டுகள் அச்சடித்து வழங்கத் தீர்மானித்திருக்கிறது திட்டக் கமிஷனும் நமது அரசாங்கமும். இதனால் நாட்டின் பணவீக்கம் மேலும்அதிகமாகும். எனவே இந்தத் தீர்மானத்தைக் கேட்டு நாட்டில் கவலைதான் ஏற்பட்டிருக்கிறது. விலைவாசிகள் இன்னும் உயர ஆரம்பித்தால், தொழிலாளிகள் அதிக சம்பளம் கேட்பார்கள். ஆலை உற்பத்திகளின் விலைகள் ஏறும். அடக்கவிலை ஏற்றத்திலும், உற்பத்தி குறையும். உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய

சமயத்தில் அதைக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவது நல்லதல்ல. நிதிப் பற்றுக்குறையைச் சமாளிக்க நோட்டு அச்சடிப்பது ஓரளவுக்குத் தவிர்க்கமுடியாததுதான். ஆனால் இந்த முறையைப் பொருளாதார அபிவிருத்திகளுக்காக அவசியமான அளவுக்குக் கையாள வேண்டுமே தவிர, கற்பனை நலன்களுக்காக விரயம் செய்யலாகாது.

இந்தியாவுக்கும் இதர ஆசிய நாடுகளுக்கும் மேற்கு ஐரோப்பிய ஜனநாயகங்களிலிருந்து கிடைக்கும் உதவி மிதமாகவே இருக்கும். தொழில் நுட்பங்களிலும் அணுசக்தி ஆயுதங்களிலும் ஸோவியத் ருஷ்யாவுக்குப் பின் வாங்காமல் இருப்பதே அவர்களின் முக்கிய முயற்சியாக இருக்கும்.

அமெரிக்காவில் தற்சமயம் ஏற்பட்டிருக்கும் பொருளாதார மந்தம் விரிவடைந்தால் தற்போது கணிசமான அளவு அமெரிக்க உதவி பெற்று வரும் ஆசிய நாடுகளையும் இந்தியாவையும் பாதிக்கும்.

தொழிலதிபர்கள் வளர வேண்டும்

ஜனநாயக நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு மூலதனம் சுலபமாக வருவதற்கு மற்றெல்லாவற்றையும்விட அதிகமான தடையாக இருப்பது நம்முடைய வரிப் பளு. இதனால் இப்போது உள்நாட்டில் மூலதனம் சேராமல் போனதுடன், தனியார் முயற்சிக்கும் பீதி ஏற்பட்டிருக்கிறது. நாடுகளிடையே வர்த்தகப் பரிவர்த்தனைகளில் செல்வந்தான் செல்வத்தை ஆகர்ஷிக்கும். லாபகரமான முதலீடுதான் மேலும் முதலீடு செய்யத் தூண்டும். இந்தியாவில் அரசாங்கத் தொகுதி மேன்மேலும் அபிவிருத்தி அடைவதைக் காட்டிலும் தனியார் தொகுதியின் தன்னம்பிக்கையும் அபிவிருத்தியுமே நாட்டின் முன்னேற்றத்தின் அறிகுறியாக அயல் நாட்டுத் தொழில் அதிபர்கள் மதிக்கின்றனர். உள் நாட்டுப் பொருளாதாரம் ஸ்திரமாக நிலைக்கவும் வலுவடையவும் தொழிலதிபர்களின் வர்க்கம் வளர வேண்டியது மிக அவசியம். ஆனால் உயர்ந்த அளவு கம்பெனி வரியும், உபரிலாப வரியும், பங்கீடு லாப வரியும், செல்வ வரியும், இன்னும் இவைபோன்ற பலவகை வரிகள் தொழிலதிபர்களின் உற்சாகத்தையும் வளர்ச்சியையும் கட்டுப்படுத்துகின்றன.

இம்மாதிரி வரிகள் சோஷலிஸ சமுதாய அமைப்புக்குப் பொருத்தமானவை என்று சொல்லப்படுகிறது. ஆனால் தனியார் தொழில்பகுதியைப் பலவீனப்படுத்தி அரசாங்கத் தொகுதியைப் பலப்படுத்துவதாக இவ்வரி முறைகள் இருப்பதால் அந்த அளவுக்கு ஒரு ''சர்வாதிகார ஆட்சி'' முறையை நோக்கியே இவை நாட்டை அழைத்துச் செல்லுகின்றன. இது வருந்தத்தக்கது. இந்தியாவின் தொழில் வர்க்கத்தினர் முன்னேற்றமடைந்துள்ள மற்ற நாட்டுத் தொழில் வர்க்கத்தினர்களைப் போலவே தொழில் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டியுள்ளனர். நம் நாட்டின் விசேஷ சூழ்நிலையில் தமக்குக் கிடைத்த வாய்ப்புக்களையும் சந்தர்ப்பங்களையும் அவர்கள் பூரணமாகவே உபயோகப்படுத்தி வருகின்றனர். இங்கும் அங்குமாக வர்த்தக நெறியில் வழுவி விட்டதாகச் சில குறைபாடுகள் கூறப்படுகின்றன. இவற்றில் உண்மையும் இருக்கலாம். சிலர் திறமைக் குறைவாக இருக்கலாம். நெறி முறையிலும் தவறி இருக்கக் கூடும். அரசாங்கத் தொகுதித் தொழில்களில் இவ்வாறு தவறுகளே இல்லை என்று சொல்லிவிட முடியுமா? ஆனால் வியாபார முறைகளும் தொழில் முறைகளும் போட்டி இருக்கும் போதுதான் திறம் பெறும். இது அவசியம். அரசாங்கத் தொகுதிக்கு லாபகரமாக இல்லாத, சௌகரியமில்லாத தொழில் வகைகளை மட்டுமே தனியார் தொகுதிக்கு அபிவிருத்தி செய்யும்படி விட்டு விட்டு, அவர்களைத் தங்களுடன் சம அந்தஸ்துள்ளவர்களாகப் பாராட்டாமல், ஏழைப் பங்காளிகளைப் போல் நடத்துவதைத் தவிர்த்து, அவர்களுக்குரிய கூட்டாளி ஸ்தானத்தை அவர்களுக்கு அளித்தால், நம் நாடு பொருளாதாரத்திலும் தொழில் அபிவிருத்தியிலும் முன்னேற்றமடையும் என்பதில் சந்தேகமில்லை. இம்மாதிரி சம அந்தஸ்தை அளிப்பதற்கு நமது வரிவிதிப்பு முறையை மாற்றி வமைக்க வேண்டும். தொழில்கள் மீது உள்ள வரிப் பளுவைக் குறைக்க வேண்டும்.

ஸ்ரீ மினு மஸானி இந்திய லோக சபை அங்கத்தினர். அகில இந்திய காங்கிரஸ் சோஷலிஸக் கட்சியை ஆரம்பித்து வைத்தவர். பம்பாயின் முன்னுள் முனிசிபல் மேயர். ஐ. நா. அமைப்பில் ஒரு பகுதியில் சிறப்பாகப் பணியாற்றியிருக்கிறார். பல புத்தகங்களை எழுதியிருக்கிறார். எல்லாம் சோஷலிஸக் கொள்கைகளைத் தழுவியவை. "நமது இந்தியா", "உங்கள் உணவு" "வளரும் நமது மானிட குடும்பம்" என்று பல நூல்கள் இயற்றியிருக்கிறார். மக்களுக்கு விளங்கும் படியாகக் கருத்துக்களை எடுத்துச் சொல்லுவதில் திரு மினு மஸானி தனிச் சிறப்பு வாய்ந்தவர். அன்னியச் செலாவணியைப் பற்றி அவர் தமக்கே உரிய சுவையுடன் எழுதுகிறார்.

—ஆசிரியர்

அன்னிய மூலதனம் வேண்டியதே!

மினு மஸானி

மனித உழைப்பு, மூலதனம் அல்லது நிலம் இவை இரண்டும் இணைந்து செயல் புரிந்தால் தான் பண்டங்களை உற்பத்தி செய்ய முடியும். ஆலைப் பொருள் உற்பத்திக்கும், விவசாயப் பண்டங்கள் உற்பத்திக்கும் கூட இந்த உண்மை பொருந்தும். ஆலைத் தொழிலுக்கு மூலதனம் முக்கியம். விவசாயத்துக்கு நிலப் பரப்பு அவசியம். ஆகையால் இரண்டையும் மூலதனமாகச் சொல்லப்பட்டது. எங்கெங்கே அதிகமாக முதலீடும், நிலமும் இருந்து மக்கள் குறைவாக இருக்கிறார்களோ அங்கெல்லாம் உழைப்பாளிகளுக்குக் கிராக்கி ஏற்படும். எங்கெங்கே உழைக்கும் மனிதர்கள் அதிகமாக இருந்து நிலப்பரப்பிலோ மூலதனத்திலோ குறைவு காணப்படுகிறதோ அங்கெல்லாம் முதலீட்டில் பற்றாக்குறை ஏற்பட்டு அதற்குக் கிராக்கி உண்டாகும். இந்த இரண்டாவது வகை நாடுகளைச் சேர்ந்தது நமது பாரத நாடு.

இது ஒரு நீண்டகாலப் பிரச்னை. இந்தியாவின் நிலப்பரப்பு நிலையாக உள்ளது. விரிவடையாதது. மூலதனமோ கொஞ்சம் கொஞ்சமாக மெதுவாக அதிகரிக்கும் தன்மையுடையது. ஜனத்தொகை பெருகிக் கொண்டே செல்லுகிறது. குடும்பக் கட்டுப்பாடு முறைகள் ஜனப் பெருக்கத்தைச் சீக்கிரத்தில் குறைக்கும் என்று தோன்றவில்லை. இப்போது நமது ஜன சங்கியை அபாயகரமான விகிதத்தில் உயர்ந்து கொண்டு போகிறது. இந்த விகிதத்தைச் சற்றுக் குறைத்துக் கொண்டாலே அதிருஷ்டந்தான். அவ்வளவு மட்டுமே எதிர் பார்க்கக் கூடியது. எனவே மனித சக்திக்கும் மூலதனம் இவ்விரண்டுக்குமுள்ள இந்த ஏற்றத் தாழ்வு ஒரு நீண்ட காலப் பிரச்னை. எவ்வளவு காலம்? இப்போதுள்ள போக்கின்படியே விட்டுவிட்டால், இன்னும் ஒரு நூற்றாண்டு காலத்துக்கு இந்த ஏற்றத்தாழ்வு இப்படியே தான் இருக்கும்.

ஆனால் நிலைமையை அதனுடைய போக்கிலேயேதான் விடவேண்டுமா? அதைப் பார்த்துக் கொண்டு நாம் பேசாமல்தான் இருக்க வேண்டுமா? சுருங்கிக் கொண்டே வருகின்ற இந்த உலகத்தில், உலகப் பொருளாதார சமூகத்தில் நாமும் ஒன்றி இணைந்து வருகிறோம். உலகத்தின் மற்றப் பாகங்களில் பொருள் துறையிலும் தொழில் முறையிலும் பிரமிக்கத் தக்க முன்னேற்றத்தை அடைந்து, அவரவர்களுடைய நாட்டு மக்களின் உழைப்புக்குத் தேவைப்படும் மூலதனத்துக்கும், அதிகமான உபரி மூலதனத்தை வைத்துக் கொண்டுள்ள சில நாடுகள் அதிர்ஷ்டவசமாக இருக்கின்றன; அம்மாதிரி நாடுகளில் முதன்மையாக இருப்பது அமெரிக்க ஐக்கியநாடு. அதுவும், அதைப் போலவே மேற்கு ஜெர்மனியும், ஸ்காண்டிநேவிய நாடுகளும் நமது தொழிலாளிகளை உற்பத்தி வகைகளில் ஈடுபடச் செய்வதற்கு இன்றியமையாத யந்திரத் தளவாடங்களை நமக்கு ஏராளமாக அனுப்பி வைக்கக் கூடிய நிலைமையில் இருக்கின்றன. இவ்வாறு கிடைக்கக்கூடியயந்திரச்சாமான்களுக்கு நாம் பணம் கொடுத்தாக வேண்டும். இதற்குப் பணம் தேவை. இந்தப் பணம் இப்போது நம்மிடம் இல்லை. இன்னும் கொஞ்ச காலத்துக்குக் கிடைக்கவும் கிடைக்காது. அன்னியச் செலாவணி நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்று நாம் சொல்லும்போதெல்லாம் இதைத்தான் குறிப்பிடுகிறோம்.

பொருள் நிலையில் பின்னடைந்துள்ள நாடுகளுக்கும் தொழில் வளம் பெற்று முன்னேற்றத்தில் நாக்கம் கொண்டுள்ள



திரு மினு மஸானி

நாடுகளுக்கும் இம்மாதிரி நிலைமை ஏற்படுவது சகஜமே. ஆனால் நம் நாட்டைப் போல், வெகு வேகமாக மிதமிஞ்சிய அளவில் முன்னேற்ற மடைய முயற்சி செய்யும் நாட்டில் இந்தப் பிரச்னை அதிக முக்கியத்வம் அடைகிறது. நம்முடைய இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் இம்மாதிரி குறைபாட்டுடன் கூடியது என்று நம்மிடையே பலர் எண்ணுகின்றனர். நம்முடைய நாட்டிலேயே இந்தத் திட்டத்தின் அம்சங்களை நிறைவேற்றி வைக்கப் போதிய வசதிகள் நம்மிடம் குறைவு என்று தெரிந்திருந்தும், ஐந்து வருஷக் குறுகிய காலத்தில் செய்து முடிக்க வேண்டும் என்று பல பெரிய திட்டங்களை ஏற்றுக் கொண்டது உண்மை நிலைமையை உணரவில்லை என்பதைக் காட்டுகிறது. இந்தத் திட்ட காலத்தில் நம்மிடமுள்ள பொருள் வசதிகள் இரண்டு உருக்குச் சாலைகளுக்கு மட்டுமே போதுமானது என்ற நிலைமையில், நாம் நான்கு உருக்கு ஆலைகளை நிறுவ வேண்டுமானால், அன்னியச் செலாவணியில் பற்றாக்குறை ஏற்படத்தான் செய்யும் என்பது வெளிப்படை. இதற்காக யார் யார் நமக்குக் கடன் கொடுக்க முன்வருகிறார்களோ அவர்களிடமிருந்தெல்லாம் நாம் கடன் வாங்கத்தானே வேண்டும்.

எவ்வளவு கடன் வாங்கலாம்?

இம்மாதிரி அயல் நாடுகளிலிருந்து செலாவணி சம்பாதிக்க எப்படிக் கடன் ஏற்பாடு செய்வது என்பதைப் பற்றித்தான் நாம் தற்காலம் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறோம். இந்தக் கடன்களில் சில அயல் நாட்டு அரசாங்கங்களிலிருந்து கிடைத்திருக்கின்றன. சில சமயம் உலக பாங்கியைப் போன்ற சர்வதேச ஸ்தாபனங்களிடமிருந்து கிடைக்கக் கூடும். சில சமயங்களில் நாம் அயல் நாட்டிலிருந்து சாமான்கள் தருவிக்கும் தனியார்த் தொழில் ஸ்தாபனங்களிடமிருந்தும் கிடைக்கக்கூடும். எப்படியிருந்தாலும் இந்தக் கடன்களை யெல்லாம் நாம் திருப்பிக் கொடுத்தாக வேண்டும் என்பது வெளிப்படை. அதற்கு வட்டியும் கொடுக்க வேண்டும். குறைந்த அளவுள்ள நம்முடைய ஆஸ்திகளைக் கொண்டு ஓரளவுக்குத்தான் நாம் கடன் வாங்கலாம். அதற்கு அதிகமாக வாங்கினால் நாம் திவாலாகி விடுவோம். ஏனெனில் நாம் வட்டி கொடுக்க முடியாமல் கஷ்டப்படுவதோடு, தவணைத் தேதியில் முதலையும் கொடுக்க முடியாமல் வருந்துவோம். இம்மாதிரி ஒரு நிலைமைக்கு நாம் இப்போது நெருங்கி வந்துகொண்டிருக்கிறோம். அதனால்தான் அடிக்கடி பத்திரிகைகளில் நமது அன்னியச் செலாவணி நிலைமையில் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்று பொதுவாக விவரிக்கப்படுகின்றன.

இதைச் சமாளிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அநேகமாகப் பறைசாற்றப் பட்டாலும் இந்தப் பிரச்னையில் தீர்வு காண அவை பயன்படுவதில்லை. உதாரணமாக, இறக்குமதிக் கட்டுப்பாடுகள் போன்ற முறைகளால் நமது பிரச்னை தீராது என்பது மட்டுமல்ல. இப்போது இயங்கி வரும் தொழிற்சாலைகளுக்குப் பாதகம் விளைவிக்கும். பொது மக்களுக்குத் தேவையான பண்டங்களும் கிடைக்காது.

துரதிருஷ்டவசமாக அகப்பட்டுக் கொண்டுள்ள இந்த நிலைமையிலிருந்து வெளிவர வேறு ஒன்றும் வழி இல்லையா? இதற்கு ஏதாவது மாற்று முறைகள் இருக்குமேயானால், அவை என்ன? இதற்கு மாற்று உண்டு என்றுதான் நான் சொல்லுவேன். இதைச் சமாளிக்க இரண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். முதல் நடவடிக்கை, நமது வசதிகளுக்கேற்ப திட்ட அம்சங்களை மாற்றி அமைப்பது. துணி எவ்வளவு இருக்கிறதோ அதை அனுசரித்துத் தானே உடை செய்ய வேண்டும்! ஆனால் இதை நம்மால் இப்போது செய்ய முடியாது. உண்மை நிலைமையைப் புறக்கணித்துத் தயாரிக்கப்பட்ட இரண்டாவது திட்டத்தின் பாதகங்களை இனி தவிர்க்க முடியாது. ஆனால், இப்போது செய்துவிட்ட தவறுகளை மூன்றாவது திட்டம் தயாரிக்கும்போது மறுபடியும் செய்யாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் எப்படியும் மூன்றாவது திட்டத்தில் கணிசமான பாகம் இரண்டாவது திட்டக் கடன்களைக் கொடுக்கத்தான் பயன்படும். மூன்றாவது திட்டத்தை இரண்டாவது திட்டத்துக்கு அடகு வைத்தாகி விட்டது.

இரண்டாவது நடவடிக்கை முதலாவதைக் காட்டிலும் முக்கியமானது. அயல் நாடுகளிலிருந்து எந்தெந்தத் தொழில் ஸ்தாபனங்கள் நம் நாட்டுத் தொழில் வளர்ச்சியில் முதலீடு செய்ய வசதியுள்ளனவோ அவைகளிடமிருந்து அவ்வித முதலீடுகளுக்கு வகை செய்வதே அது. இதையே நேரிடையாகச் சொல்ல வேண்டுமானால் நம் நாட்டில் தொழிற்சாலைகளை நிர்மாணிக்கவும், யந்திரத் தளவாடங்களை அமைக்கவும், அவ்விதம் முடியாவிட்டால் தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் ஆலைகளிலேயே பங்கு கொண்டு அவற்றை விஸ்தரிக்க மூலதனம் வழங்கவும் அயல்நாட்டுத் தொழில் அதிபர்களையும் தொழில் ஸ்தாபனங்களையும் நாம் அழைக்க வேண்டும்.

இதைச் சொல்லிவிடுவது சுலபம். செய்வது அவ்வளவு எளிதல்ல. ஏனெனில் 'முதலீடு செய்யுங்கள். மூலதனம் போடுங்கள்' என்று அழைக்கும் நாடுகள் உலகத்தில் பல பாகங்களிலும் இருக்கின்றன. நாம் ஒருவர்தான் என்று எண்ணவேண்டாம். அன்னிய மூலதனத்தில் நமக்குப் போட்டியாக ஆசியா கண்டத்தில் பல தேசங்களும், ஆப்பிரிக்கா கண்டத்தில் பல நாடுகளும், தென் அமெரிக்கா முழுதுமே இருக்கின்றன. எனவே, எங்கே அதற்கு உகந்த வரவேற்பு கிடைக்கிறதோ அங்கே தான் மூலதனம் செல்லும் என்பது இயற்கையே.

அன்னிய மூலதனத்துக்கு வரவேற்பு

உகந்த வரவேற்பு என்று மூலதனத்தைப் பற்றிச் சொல்லும்போது, அயல் நாட்டவருக்கு நல்வரவு கூறுவதையும், அவர்களுக்குத் தேவையான வசதிகளைக் கொடுப்பதையும், அவர்கள் கூடுமான அளவுக்கு லாபம் சம்பா

டுக்க அனுமதிப்பதையும், அவர்களுக்கு இஷ்டமானபோது அவர்கள் போட்ட மூலதனத்தைத் தங்கள் நாட்டுக்குத் திருப்பி எடுத்துச் செல்ல வசதி யளிப்பதையும் தான் குறிப்பிடுகிறோம். நம் நாட்டில் அன்னிய நாட்டு மூலதனத்துக்கு இவ்விதமான உகந்த வரவேற்பு அளிக்கும் சூழ்நிலையை உண்டாக்கி இருக்கிறோமா?

இந்தக் கேள்விக்குத் துக்கத்துடன் 'இல்லை' என்ற பதிலைத்தான் சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட நட்புச் சூழ்நிலையை உண்டாக்க நமது அரசாங்கத்தின் கொள்கைகளில் எவ்வித மாறுதல் ஏற்பட வேண்டும், நம்முடைய மனப் பான்மையிலேயே எம்மாதிரி திருப்பங்கள் உண்டாக வேண்டும் என்பன பற்றி விவரிக்க இங்கே இடமில்லை. ஒரு உதாரணத்தை மட்டும் இங்கே சொல்லுகிறேன். மத்திய சர்க்கார் நிதி இலாகாவிலிருந்து பொருளாதார ஆராய்ச்சி தேசிய கௌன்சிலுக்குச் சில மாதங்களுக்கு முன்பு விடுத்த வேண்டுகோளுக் கிணங்கி, அவர்கள் ஒரு யாதாஸ்தைத் தயாரித்தனர். இதில் அன்னிய மூலதனத்தை நம் நாட்டுக்கு வரவழைக்கச் சிறியனவும் பெரியனவுமாகப் பல சிபார்சுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றில் எனக்குத் தெரிந்தவரையில் ஒரு சிபாரிசுகூடச் செயல் முறையில் மேற்கொள்ளப்படவில்லை. இது வருந்தத்தக்க விஷயம்.

நம் நாட்டில் தொழில் வளர்ச்சியில் பங்கு கொள்ளும் அன்னிய மூலதனத்தைப் போல் நாம் வரவேற்கக்கூடிய அயல் செலாவணி வேறொன்றுமே இருக்க முடியாது. அம்மாதிரி முதலீட்டினால் நமக்குத் தேவையான தொழிற்சாலைகள் கிடைத்துவிடுகின்றன. வேலையற்றுக் கிடக்கும் நம்முடைய தொழிலாளிகளுக்குத் தேவையான யந்திர சாதனங்களும் கிடைத்துவிடுகின்றன. அயல் நாட்டுத் தொழிலதிபர்களுடைய கூட்டுறவினால், நமக்கு இப்போது தெரியாத தொழிற் நுட்பங்களெல்லாம் தெரியவரும். மூலதனத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தமும் கிடையாது. வட்டி கொடுக்கவேண்டிய அவசியமும் இல்லை. இதர அரசாங்கங்களிலிருந்தும் சர்வதேச ஸ்தாபனங்களிலிருந்தும் வாங்கும் கடன்களுக்கு இந்த இருவகை நிர்ப்பந்தமும் உண்டு. மற்றுமொரு சௌகரியமும் இதில் உண்டு. அன்னிய அரசாங்கக் கடன்களில் மறைமுகமான சலுகைகள், ஷரத்துக்களுக்கு இடம் உண்டு. சமீபத்தில் ருஷ்யா யூகோஸ்லேவியாவுக்கு வழங்கிய கடன் இதற்கு உதாரணம். தொழில் ஸ்தாபனத்தில் முதலீடு செய்யப்பட்ட மூலதனத்துக்கு இம்மாதிரி மறைமுகமான ஷரத்துக்கள் கிடையாது. ஏனெனில் ஆலையிலும், தொழிற் கூடங்களிலும் தான் அவர்கள் முதல் முடங்கிக் கிடக்கிறதே.

ஜீவாதாரமான இந்த அடிப்படை உண்மைகளை நாம் சரிவரப் புரிந்துகொண்டு நம்முடைய கொள்கைகளை அவற்றுக்கேற்ப மாற்றிக் கொண்டாலொழிய நம்முடைய அன்னியச் செலாவணிப் பற்றாக்குறையைச் சமாளிக்க முடியாது. இதை நமது அரசாங்கம் உணர வேண்டும்.


வருமானக் குறைவை




பழைய லாரிகளுக்கு டி.வி.எஸ். சர்விஸ் புத்துயிரளிக்கிறது

விலக்க டி. வி. எஸ். பணி

பஸ் அல்லது லாரி ஓட ஓட உருப்புகள் தேய்ந்து நலிந்துவிடும். உடனடியாக புதிய உருப்புகள் வாங்க வேண்டிய அவசியமில்லை. தேய்மானத்தை உரிய இயந்திர சாதனங்கள் மூலம் கண்டு பிடித்து வேண்டியன செய்து, நாங்கள் புதுப்பிக்கிறோம். உடைந்த உருப்புகளைக்கூட சீர்செய்து கூடியமட்டும் உருவாக்குகிறோம். புதுப்பிக்கப்பட்ட பாகங்கள் புத்தம் புதியன போலவே உழைக்கும். இத்தேர்ச்சிக்கு அடிப்படையாக இருப்பவை 46 வருட அநுபவமும், தொழிலில் நாங்கள் கையாளும் முன்னேற்ற முறைகளுமே. பஸ், லாரி ஓடாமலிருந்தால் வருமானம் குறையும். அக்குறைவை நிச்சயம் தவிர்க்கும் டி. வி. எஸ்.



கிராங்க் ஷாப்ட் புதுப்பிக்கும் இயந்திரம்



கோணலுள்ள கிராங்க் ஷாப்டை சீர்படுத்தும் இயந்திரம்

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ் பிரைவேட் லிட்.

மதுரை - திருச்சி - திருநெல்வேலி - புதுக்கோட்டை - சேலம் - கோயமுத்தூர்

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிட்.

மதராஸ்

TVS/309 a

பாரதத்தின் இன்றையப் பொருள் நிலை - ஆராய்ச்சி அரங்கம் கட்டுரை—15

இக்கட்டுரை ஆசிரியர் ஸ்ரீ முரார்ஜி ஜே. வைத்யா அயல் நாட்டு வர்த்தக விஷயமாக விசேஷ கவனம் செலுத்தியுள்ளார். பரந்த தொழிலனுபவமும் உள்ளவர். யுனைடெட் பாங்க் ஆப் இந்தியாவிலும் இதர தொழில் ஸ்தாபனங்களிலும் நிர்வாகஸ்தராகப் பணியாற்றி வருகிறார். இந்திய வர்த்தகச் சங்கம், அகில இந்திய உற்பத்தியாளர் ஸ்தாபனம், இந்தியத் தொழிற் சங்கம் முதலிய ஸ்தாபனங்களுக்குத் தலைவராக இருந்து பணிபுரிந்திருக்கிறார். தற்போது இந்திய வெளிநாட்டு வர்த்தகக் கௌன்ஸிலின் தலைவராகப் பணியாற்றி வருகிறார். —ஆசிரியர்

மனப்பான்மை மாறுமா?

முரார்ஜி ஜே. வைத்யா

அன்னியச் செலாவணி நெருக்கடி நம் முன் மலைபோல் குறுக்கிட்டிருப்பதால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு வேண்டிய நிதி திரட்டும் பிரச்னை எப்போதையும் விட அதிக முக்கியமாக வளர்ந்து விட்டது. நிதி என்பதைச் சுருக்கமாக விளக்க வேண்டுமானால் நமது சேமிப்புத் தொகையும் அயல் நாட்டு வர்த்தக வரவு செலவுக் கணக்கில் மிச்சப்படும் செலாவணியும் சேர்ந்ததுதான் அது. ஏற்றுமதிப் பொருள்களுக்கும் நாம் செய்து கொடுக்கும் வசதிகளுக்காகவும் (கப்பல் வசதி, இன்ஷ்யூரென்ஸ் முதலியன) நமக்குக் கிடைக்கும் அன்னியச் செலாவணிக்கும், நாம் இறக்குமதி செய்யும் பொருள்களுக்கும் அயல் நாட்டினர் நமக்குச் செய்து தரும் கப்பல் வசதி இன்ஷியூரன்ஸ் போன்ற வசதிகளுக்கும் நாம் செலுத்த வேண்டிய அன்னியச் செலாவணிக்குமுள்ள வித்தியாசந்தான் வர்த்தக சம்பந்தமான வரவு செலவில் காணப்படும் மிச்சம். நமக்குக் கிடைக்க வேண்டியது அதிகமாக இருந்தால் நமக்கு அது சாதகமான நிலை. நாம் கொடுக்க வேண்டியது அதிகமாக இருந்தால் அது நமக்குப் பாதகமான நிலை. நமக்குக் கிடைக்கும் தொகையில் அன்னியக் கடன் உதவி, நன்கொடை அளிப்பு, மானியங்கள், அன்னியர்கள் நம் நாட்டுத் தொழில்களில் முதலீட்டுக்காக வழங்கும் மூலதனம் எல்லாம் சேர்ந்திருக்கின்றன.

இரண்டாவது திட்டத்தையும் அதன் லட்சியங்களையும் கண்டனம் செய்பவர்கள் எல்லாரும் பொதுவாகவே திட்டத்தை எதிர்ப்பவர்கள் என்று அவர்கள் மீது குற்றஞ் சாட்டப்படுகிறது. இது சரியன்று. இந்த நிலைமையைச் சற்று விளக்கமாகச் சொன்னால் தான் உண்மையைப் புரிந்துகொள்ள முடியும். இந்தியாவைப் போல் பொருளாதாரத் துறையில் பின்தங்கியுள்ள ஒரு நாடு வேகமாகவும் பெருவாரியாகவும் முன்னேற்றமடைய வேண்டும் என்று எண்ணும் எவனும் அபிவிருத்தித் திட்டங்களை எதிர்க்கமாட்டான். நாட்டின் முன்னேற்றத்தில் அவனுக்கும் அக்கறை உண்டு. ஆனால் திட்டத்தைக் கண்டனம் செய்பவர்கள் எல்லாம் அபிவிருத்தி லட்சியங்களை நிறைவேற்றி வைக்கத் தேவையான நிதி வசதிகள் நம்மிடம் இல்லையே என்ற உண்மையை உணர்ந்ததினால்தான் கண்டிக்கிறார்கள். நாம் ஒவ்வொரு இனத்திலும் ஏற்படுத்திக் கொண்ட லட்சியங்கள் அனைத்தும் பாராட்டத் தக்கவைதான். ஆனால் நிதி வசதிகளைக் குறைவாக வைத்துக் கொண்டு, லட்சியங்களை மட்டும் உச்சத்தில் வைத்துத் திட்டம் வகுப்பது கலைக்குஉதவாத திட்டம். திட்டப்படி முன்னேற வேண்டும் என்னும் அடிப்படையையே அது தகர்த்து விடும்.

திட்டத்தைக் கண்டித்தவர்கள் சொன்னது சரிதான் என்பது தற்போது ஏற்பட்டிருக்கிற அன்னியச் செலாவணி நெருக்கடியிலிருந்து ஊர்ஜிதமாகிறது. ஆனால் தாங்கள் விடுத்த எச்சரிக்கை உண்மையாக ஆகிவிட்டது. தங்கள் தீர்க்க தரிசனம் கூர்மையானது என்பதற்காக அவர்கள் சந்தோஷப்படவில்லை. அதற்குமாறாக, நமது நாடு இந்த நிலைமையை அடைந்து விட்டதே என்று வருந்தத்தான் செய்கிறார்கள். ஆகையால்தான் இப்போதாவது நமது அரசாங்கம் திட்ட சம்பந்தமான விஷயங்களில் செயல்முறைக்கு ஏற்றவாறு கொள்கைகளை மாற்றிக் கொள்ளட்டும் என்று அவர்கள் வற்புறுத்துகிறார்கள்.

முதலாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சர்க்கார் தொகுதியிலும் தனியார்த் தொகுதியிலும் புதிதாகத் தொழில் அபிவிருத்திக்காக 327·40 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட வேண்டும் என்று லட்சியம் ஏற்படுத்தப்பட்டது. முதலீடு செய்யப்பட்ட நிகர மொத்தத் தொகை 287·74 கோடி. தனியார்த் தொகுதியில் 230·30 கோடி ரூபாய் மூலதனம் சேகரித்து முதலீடு செய்யப்பட வேண்டும் என்ற லட்சியம் முழுதும் நிறைவேற்றப்பட்டது. முதலீடு செய்த தொகை 232·90 கோடி. ஆனால் சர்க்கார்த் தொகுதியில் புதிதாக முதலீடு செய்வதற்கான லட்சியங்களில் 41 கோடி குறைவாகவே செய்யப் பட்டது.

இரண்டாவது திட்டத்தில் சர்க்கார்த் துறை, தனியார்த் துறை இரண்டிலும் புதிதாக 1094·30 கோடி ரூபாய்க்கு முதலீடு செய்ய வேண்டும் என்று லட்சியம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதாவது முதல் திட்ட லட்சியத்தைவிட மூன்று மடங்கு அதிகம். இதே போல் திட்டத்தில் மொத்தச் செலவுகள் முதல் ஐந்தாண்டில் 3200 கோடி தான். இரண்டாவது திட்டத்தில் இது 7200 கோடி.

கடந்த இரண்டு ஆண்டுகளில் நாம் அடைந்த முன்னேற்றத்தையும் நம்முடைய அனுபவத்தையும் கவனித்தால், நமது நிதி வசதிகள் சம்பந்தப்பட்ட வரையில் திட்டக் கமிஷன் எதிர்பார்த்த அளவுக்கு இவை

கிடைக்கவில்லை என்பது தெரிகிறது. திட்டத்தின்படி ஐந்தாண்டு (1956-61) காலத்துக்கு நம்முடைய நிதி வசதிகள் கீழ்வருமாறு பாகுபாடு செய்யப்பட்டிருக்கின்றன :—

வருமானங்களிலிருந்து உபரியாகக் கிடைப்பது	ரூ. 800 கோடி
ரயில்வே வரவு செலவுக் கணக்கில் உபரியாகக் கிடைக்கக் கூடியது	ரூ. 150 கோடி
உள்நாட்டுக் கடன்கள் மூலம் எதிர்பார்க்கப்படுவது	ரூ. 700 கோடி
சிறு சேமிப்புகள் மூலம்	ரூ. 500 கோடி
டிபாஸிட்டுகள் முதலிய இதர இனங்கள் மூலம்	ரூ. 250 கோடி
மொத்தம்	ரூ. 2400 கோடி

திட்டத்தின் மொத்தச் செலவு 4800 கோடி என்று வரம்பு நிச்சயித்துக்கொண்டதால், மேலேசொன்ன வசதியைத் தவிர பாக்கி 2400 கோடிக்கு மூன்று வகையில் ஈடு செய்வதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. முதலாவது 1200 கோடி வரையில் அச்சடித்து நோட்டுகள் வழங்குவது. இரண்டாவது ரூ. 800 கோடி வரையில் அயல் நாடுகளில் கடன் வாங்குவது. மூன்றாவது ரூ. 400 கோடி துண்டு விழுவதைப் போகப் போக வரி விதித்திலுல் மக்களிடமிருந்து வசூல்செய்து கொள்ள வேண்டியது என்று தற்போதைக்கு அப்படியே விடப்பட்டிருந்தது.

இவ்வாறு பாகுபாடு செய்து கொண்ட நிதி வசதிகள் எந்த அளவுக்கு நிறைவேறலாம் என்பதை முதல் ஐந்தாண்டு காலத்தில் ஏற்பட்ட அனுபவத்தைக் கொண்டு பார்த்தால் விளங்கும். சர்க்கார்த் தொகுதியில் மொத்தம் ரூ. 2069 கோடி செலவு செய்வதென்று முதல் திட்டத்தின் லட்சியம். ஆனால் செயல் முறையில் ஐந்தாண்டு காலத்தில் (1951-56) கிடைத்தது ரூ. 1277 கோடிதான். விவரங்கள் கீழ்வருமாறு :—

வருமானங்களிலிருந்து மிச்சப்பட்டது	ரூ. 574 கோடி
ரயில்வே கணக்கில் உபரியாக	ரூ. 115 கோடி
உள்நாட்டுக் கடன்கள் மூலம்	ரூ. 204 கோடி
சிறு சேமிப்பு மூலம்	ரூ. 304 கோடி
டிபாஸிட்டு வகைகள்	ரூ. 80 கோடி
மொத்தம்	ரூ. 1277 கோடி

லட்சியத்துக்கும் செயல்முறைக்குமுள்ள வித்தியாசம் சுமார் 735 கோடி. இதை அயல்நாடுகளிலிருந்து மானியங்களாகக் கிடைத்த 97 கோடியைக் கொண்டும் கடன்களாகக் கிடைத்த 106 கோடியைக் கொண்டும் ஓரளவுக்கு ஈடு செய்து மீதித் தொகை 532 கோடிக்கு நோட்டு அச்சடித்து வழங்குவது என்று அப்படியே விட்டுவைக்கப்பட்டது.

இரண்டு திட்டங்களையும் ஒன்றோடொன்று ஒப்பிட்டுப் பார்த்தால் இரண்டாவது திட்டத்தில் நிதி வசதிகள் எல்லா இனங்களிலிருந்தும் முதல் திட்ட காலத்தில் கிடைத்ததை விட அதிகமாகவே மதிப்பீடு செய்யப் பட்டிருக்கின்றன என்று தெரிய வரும். உள் நாட்டுக் கடன்களின் மூலம் 700 கோடி என்றும் (இது முதல் திட்டத்தில் 204 கோடி) சிறு சேமிப்பு மூலம் 500 கோடி என்றும் (இது முதல் திட்டத்தில் 304 கோடி) கணக்குகள் செய்யப் பட்டிருக்கின்றன. உள் நாட்டு நிதி வசதிகளைப் போலவே அயல் நாட்டு உதவியிலும் கூட 800 கோடி வரையில் கிடைக்கும் என்று (முதல் திட்ட காலத்தில் கிடைத்தது 203 கோடி) அதிகப் படியாகவே மதிப்பீடு செய்யப் பட்டிருக்கிறது. இதற்கு மேலும் ஈடு செய்ய முடியாமல் விடப்பட்ட தொகை 400 கோடி ரூபாய். இந்தப் புள்ளி விவரங்களைப் பார்த்த மாத்திரத்திலேயே, நமது இரண்டாவது திட்டம் ஆரம்பித்த இரண்டு வருஷங்களுக்குள்ளாகவே நிதிப் பற்றாக்குறை தோன்ற ஆரம்பித்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை என்பது எவருக்கும் தெரியும்.



திரு மூரார்ஜீ ஜே. வைத்யா

இந்த நிதிப் பற்றாக் குறையையும் அதனால் தோன்றிய நெருக்கடியையும் தேசிய வருமானத்துக்கும் அபிவிருத்திக்கான முதலீட்டுத் தொகைக்குமுள்ள விகிதத்தைக் கொண்டு மற்றொரு கோணத்திலிருந்து ஆராயலாம். அதுவும் ஒரு விசித்திரமான நிலைமையைத் தான் விளக்கும். முதல் திட்ட காலத்தில் நாம் அபிவிருத்திக்காக முதலீடு செய்யப்படும் தொகை தேசிய வருமானத்தில் வருஷத்துக்கு 7.3 சதவிதம் இருக்க வேண்டும் என்று மதிப்பிட்டிருந்தது. அதாவது நமது தேசிய வருமானத்தில் ஒவ்வொரு வருஷமும் 7.3 சத விகிதம் சேமித்து வைத்து, அதை அபிவிருத்திக்குச் செலவிட வேண்டும். இரண்டாவது திட்டத்தில் இந்த விகிதம் வருஷத்துக்கு 10·7 சதவிதம் இருக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதாவது இரண்டாவது ஐந்தாண்டுகளில் கொள் முதல் தொகையில் 18 சதம் அதிகரிக்கப் பட்டது. ஏட்டளவில் பார்த்தால் இது ஒன்றுமே பிரமாதம் அல்ல. சாத்தியப்படக்கூடியதே. ஏனெனில் நமது பாரதத்தில் ஒவ்வொருவனுடைய சராசரி வருஷ வருமானம் முதல் திட்டகாலத்தில் ரூ 281. இது

இரண்டாவது திட்டகாலத்தில் ரூ 331 ஆக உயரும் என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இந்த உயர்வு 18 சதவீதம் ஆகிறது. எனவே வருமானம் அதிகரித்திருப்பதால் அதே விகிதத்தில் சேமிப்பும் அதிகரிக்கலாமல்லவா? அப்படித்தான் திட்ட கமிஷன் கணக்கும் போட்டிருக்கிறது.

ஆனால் இதில் ஒரு தவறு இருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் பண வீக்கம் காரணமாக மக்களின் வருமானம் பெருகியிருந்தாலும் அதற்கு ஏற்றவாறு சேமித்து வைக்க அவர்களால் முடியவில்லை. உணவுப் பண்டங்களின் விலைகளெல்லாம் அதிகமாக உயர்ந்து விட்டன. அதேபோல் வாழ்க்கைச் செலவுகளும் ஏறிவிட்டன. மக்களால் சேமிக்க முடியவில்லை என்பது சிறு சேமிப்பு மூலம் எதிர்பார்த்த அளவு நிதி திரட்ட முடியாமல் இருப்பதிலிருந்து தெரிகிறது. வருஷத்துக்கு ரூ. 100 கோடி சிறு சேமிப்பு மூலம் நிதி திரட்ட வேண்டும் என்று திட்டமிட்டிருந்தாலும், இரண்டாவது திட்ட முதல் ஆண்டில் ரூ. 65 கோடியும் இரண்டாவது ஆண்டின் முதல் பத்து மாதத்தில் ரூ. 37 கோடியுந்தான் வசூல் செய்ய முடிந்தது. கனரகத் தொழிற்சாலைகள் விஸ்தரிப்பில் அதிகமான கவனம் செலுத்தியதாலும் பற்றுக்குறைக்கு நோட்டு அச்சடித்துப் பெருவாரியாக வழங்கியதாலும் பணப்பெருக்கம் ஏற்பட்டது.

மக்களின் சேமிப்புக்கும் முதலீட்டுத் தொகைக்குமுள்ள வித்தியாசத்துக்கு ஒரு காரணம் சர்க்கார்த் தொகுதியில் அரசாங்கம் அபரிமிதமாகச் செலவு செய்ததைச் சொல்ல வேண்டும். 1954-55ம் ஆண்டில் நமது வருமானத்தில் 99.4 சத விகிதம் தனியார்த் தொகுதியிலிருந்தும், 0·6 சத விகிதம் சர்க்கார்த் தொகுதியிலிருந்தும் கிடைத்தன. நமது தேசிய செலவு கணக்கைப் பார்த்தால் தனியார்த் தொகுதிக்காக 89.3 சத விகிதமும், 2.6 சத விகிதம் அரசாங்கத் தொழில்களிலும் செலவழிந்தன. மேலும் அரசாங்கத் தொகுதியின் நிர்வாகத்துக்கு மட்டும் 8.1 சத விகிதம் செலவாயிற்று. அவர்கள் வருமானம் 2.6 சத வீதந்தான். எனவே, சர்க்கார்த் தொகுதியில் காணப்பட்ட பற்றுக்குறையைத் தனியார்த் தொகுதியினரின் நிதி வசதிகளிலிருந்து ஈடு செய்யப்பட்டது.

மற்றொரு முக்கியமான அம்சம் சர்க்காரின் நிர்வாகச் செலவில் காணப்பட்ட கணிசமான உயர்வு. 1950-51-ம் ஆண்டில், அதாவது முதல் திட்டத்தின் முதல் ஆண்டில் சர்க்காரின் நிர்வாகச் செலவு 49 கோடியாக இருந்தது. 1957-58-ம் ஆண்டில் இது 191 கோடியாக உயர்ந்து விட்டது. அதாவது ஆறு வருஷ காலத்தில் இந்த ஒரு இனத்தில் மட்டும் செலவு நான்கு மடங்கு பெருகி விட்டது. இந்தச் செலவில் எந்தப் பாகமும் அபிவிருத்தித் திட்டத்துக்காகவோ, நாட்டின் உற்பத்தியைப் பெருக்கவோ செலவாகவில்லை. உதாரணமாக,சிறுபாசனத் திட்டங்களுக்குச் செலவழிக்கும் நிதி விவசாயங்களுக்குப் பயன்படும். உணவு உற்பத்தியைப் பெருக்க அது உதவும். ஆனால் அரசாங்க மாளிகைகளுக்காகச் செலவு செய்யப்படும் பணம், கட்டடங்கள் பார்வைக்கு எவ்வளவு அழகாக இருந்தாலும், அயல்நாட்டினர் அவற்றை எவ்வளவு வியந்து பாராட்டினாலும், வீண் செலவுதானே. தேசீய வருமானம் இதனால் ஒரு நயா பைசாகூடப் பெருகுவதில்லை. இம்மாதிரி செலவினங்களுக்கு நமது அரசாங்கம் முன்னமிருந்ததை விட அதிகமான வரிகள் மூலம் நிதி திரட்டியிருக்கிறது. உதாரணமாக, உற்பத்தி வரிகள் (எக்சைஸ் வரிகள்) எல்லாம் சாதாரணமாகவே பொதுமக்களைத்தான் பாதிக்கின்றன. முக்கியமாக, மண்ணெண்ணெய், ஜவுளி இந்த இரண்டு இனங்களிலும் உற்பத்தி வரி பெரும்பாலும் சாதாரண மக்கள்தான் கொடுக்க வேண்டி வருகிறது. 1950-51-ம் ஆண்டுகளில் இந்த இரண்டு வகைகளிலும் உற்பத்தி வரி வசூல் 68 கோடி. 1957-58-ம் ஆண்டில் இது 258 கோடிக்கு ஏறி விட்டது. இம்மாதிரி நான்கு மடங்கு அதிகமாகப் பொதுமக்கள் சர்க்காருக்கு நிதி வழங்கியதனால் அவர்களுக்கு என்ன அனுகூலங்கள் கிடைத்தன என்று கேட்கத்தான் தோன்றுகிறது.

இது சம்பந்தமாக, மற்றொரு விஷயத்தையும் இங்கே சொல்லவேண்டும். உலகத்தில் எல்லாப் பாகங்களிலும் சாதாரணமாகவே தொழிற்சாலைகளைத் திறமையுடன் நிர்வாகம் செய்ய அரசாங்க ஸ்தாபனங்களால் முடியாது என்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. அரசாங்க அதிகாரிகளிடமோ சிப்பந்திகளிடமோ தகறுதல் ஒன்றுமில்லை. அதிகாரமெல்லாம் ஓர் மூலையில் சேர்ந்து குவிந்திருப்பது, படிப்படியாக உத்தரவுகள் மேல்மட்டத்திலிருந்து கீழ் மட்டத்துக்கு இறங்குவது, மிதமிஞ்சிய ஒழுங்கினால் நிர்வாக மந்தம், பொதுமக்களிடமிருந்து பாராட்டுக்கள் இல்லாவிடினும், திறமைக்கேற்ற ஊதியம் இல்லை என்றாலும், பொதுஜனத்தின் கண்டனங்கள் வருமோ என்ற பயம் — இவைகள்தாம் அரசாங்க ஸ்தாபனங்களின் நிர்வாகத் திறமைக் குறைவுக்குக் காரணங்கள்.

இந்தக் கஷ்டமான நிலைமையிலிருந்து வெளியேற ஒரு வழி கண்டு பிடிப்பது கஷ்டமில்லை. தேசம் அபிவிருத்தியடைய வேண்டும். சுபிட்சமான நிலைக்கு நாம் உயர வேண்டும் ; ஒவ்வொருவனுக்கும் தான் முன்னேறச் சமவாய்ப்புகள் இருக்க வேண்டும் ; வாழ்க்கைத்தரம் உயர வேண்டும் ; உழைக்க முடியாத காலங்களில் பாதுகாப்பு வேண்டும் ; — என்ற லட்சியங்களில் விவாதமே இல்லை. பின் என்னதான் தேவை? தற்போதைய நிலைமையைச் சமாளிக்க மனப்பான்மையில்தான் மாறுதல் வேண்டும். தனிப்பட்டவர்களின் ஊக்கத்தையும், உற்சாகத்தையும், தொழில் அனுபவத்தையும் ஒருங்குசேர்த்து நாட்டின்முன்னேற்றத்துக்குப் பயன்படுத்த வேண்டும். இப்போது இதற்குத் தடையாக உள்ள நிர்ப்பந்தங்களை அகற்றித் திட்டத்தின் பொதுக் கொள்கைகளுக்கும் சட்டத்துக்கும் உட்பட்டு, பாரதத்தின் முன்னேற்றத்துக்கு அவர்களையும் பாடுபடும்படி செய்ய உற்சாகம் அளிக்க வேண்டும். தங்களுடைய முன்னேற்றத்துக்கும் வாய்ப்புகள் இருக்கின்றன என்று தனிப்பட்டவர்கள் உணர ஆரம்பித்து விட்டால், தங்கள் முன்னேற்றத்துக்காகவும் உழைத்து, அத்துடன் நாட்டின் பொது நலனுக்காகவும் அவர்கள் உழைப்பார்கள்.

பேராசிரியர் வி. எல். கேவாலா பொருளாதார விஷயங்களில் விரிவாக ஆராய்ச்சிகள் நடத்தியவர். தத்துவ நோக்கில் மட்டுமின்றிச் செயல் முறையிலும் பயனளிக்கக் கூடிய ஆலோசனைகள் பலவற்றை இக்கட்டுரையில் கூறுகிறார். ஒரு ஆசிரியருக்குரிய முறையில் விஷயங்களைத் தெளிவுடன் சொல்லுகிறார். — ஆசிரியர்

அன்னியச் செலாவணி நெருக்கடி

வி. எல். கேவாலா

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை மீண்டும் பரிசீலனை செய்து அதன் எதிர்காலம் எவ்வாறாக இருக்கும் என்று ஆராய்ந்து திட்டக் கமிஷன் சமீபத்தில் அதன் முடிவுகளை ஒரு யாதாஸ்தில் வெளியிட்டது. அதில் நமது அன்னியச் செலாவணிக் கையிருப்பு எப்படி வேகமாகக் குறைந்து போய் விட்டது என்பதையும், எப்படி இது அரசாங்கத்துக்கும் பொதுமக்களுக்கும் கவலை கொடுக்கும்படி ஆகிவிட்டது என்பதையும் எடுத்துக் காட்டியிருக்கிறது. திட்டத்தைப் பற்றி ஆராய்ந்த போது, அன்னிய வர்த்தக வரவு செலவுக் கணக்கில் நீடித்துக் கொண்டு வரும் பெருவாரியான யந்திரச் சாமான்களின் இறக்குமதியின் அளவு எவ்வளவு என்பதைப் பற்றியும் சொல்லியிருக்கிறது. 1956ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து 18 மாத காலத்தில் யந்திரச் சாமான்களின் இறக்குமதி 821 கோடிக்கு உயர்ந்துவிட்டது என்பதைக் குறிப்பாக எடுத்துக் காட்டியிருக்கிறது. இதன் காரணமாக நமது அன்னியச் செலாவணிக்கையிருப்புவெகு வேகமாகக் கரைந்து இந்த ஆண்டு மே மாதத்தில் கையிருப்பில் 248 கோடி ரூபாய் இருந்த ஸ்டர்லிங் நிதி வாரத்துக்குச் சராசரி 5·5 கோடி அளவில் செலவாகிக் கொண்டே வந்திருக்கிறது. எனவே நமது அன்னியச் செலாவணி சம்பந்தமாக ஒரு நெருக்கடியான கட்டத்தை நாம் அடைந்திருக்கிறோம்.



திரு வி. எல். கேவாலா

ஆரம்பத்திலிருந்து நமக்குத் தேவைப்படும் அன்னியச் செலாவணித் தொகையை நாம் குறைத்தே மதிப்பிடு செய்து வந்திருக்கிறோம். இது ஒரு தவறு. இந்த மதிப்பீடுகள் உணவுப் பண்டங்களின் இறக்குமதி விஷயத்திலும் திட்டத்தின் பல இனங்களுக்குத் தேவைப்பட்ட அயல் நாட்டுச் சாமான்கள் விஷயத்திலும் தவறிப் போயின. மேலும், ஒரே வருஷ காலத்தில் மிதமிஞ்சிய இறக்குமதிச் சாமான்கள் வந்து குவிந்ததையும் இங்கே குறிப்பிட வேண்டும். இது ஏற்கனவே நெருக்கடியான நிலைமையிலிருந்த செலாவணிப் பிரச்னையை மேலும் கடுமையாக ஆக்கிற்று. இவற்றைச் சமாளிக்க எடுத்துக் கொண்ட மாற்று நடவடிக்கையான இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் விளைவை நாம் இப்போது அனுபவிக்க ஆரம்பித்திருக்கிறோம். இந்த நெருக்கடியான நிலைமையும் அதன் விளைவாகக் காணப்படும் சீர்கேடான நிலைமையும் தாற்காலிகமாகப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள தாரதம்யங்களால் உண்டானவை. எனவே கொஞ்ச காலத்துக்குப் பின் இவை மறைந்து நிலைமை சீராக ஆகிவிடும் என்று நினைக்க வேண்டாம். இது ஒரு நீண்டகாலப் பிரச்னை.

திட்டத்தின் எதிர்காலத்தைப் பற்றி மேலே சொல்லப்பட்ட திட்டக்கமிஷனின் யாதாஸ்தில் இந்த ஐந்தாண்டு இறுதி காலத்தில் ரூ. 1100 கோடிக்கு நிதிப் பற்றாக்குறை ஏற்படும் என்று முதலில் செய்திருந்த மதிப்பீடு, ரூ. 1700 கோடி என்று மாறிவிடும் என அபிப்பிராயம் சொல்லியிருக்கிறது. ஸ்தூலமாகச் செய்த கணக்கீட்டின்படி அன்னியச் செலாவணித் தேவை முதல் மதிப்பீட்டைக் காட்டிலும் ரூ. 500 கோடி அதிகரிக்கலாம் என்று தெரிகிறது. இப்போது நிலைமை படிப் படியாகச் சீர்கெட்டுக் கொண்டே வருவதால் இந்தத் தொகையை விடவும் இன்னும் உயரக்கூடும் என்று எண்ண வேண்டும்.

இதற்குப் பல காரணங்கள் உண்டு. கண்மூடித்தனமான இறக்குமதிக் கொள்கைகள் ஒருபுறமிருக்க, திட்டத்தில் சேர்க்கப்படாத இனங்களுக்காக நமது நிதி வசதிகள் திருப்பப்பட்டுச் செலவு செய்யப்பட்டன. இந்த இனங்களுக்குக்கூட ஓரளவுக்கு அன்னியச் செலாவணி தேவைப்பட்டது. இதைத் தவிர, அபிவிருத்தி இல்லாத இனங்கள் என்றவகையில் ராணுவச் செலவுகள் முக்கிய இடம் பெறுகின்றன. இதற்கு ஒரு உதாரணம் மட்டும் எடுத்துக் காட்டலாம். விமானப் படைக்கு மட்டும் 1955—56ஆம் ஆண்டில் 35·11 கோடி செலவு செய்யப்பட்டது. இது இப்போது 104 கோடிக்கு உயர்ந்து விட்டது. இந்த ஒரு இனத்தினால் மட்டும் நமது அன்னியச் செலாவணியில் 50 கோடி ரூபாய் அதிகம் செலவாயிற்று. நெருக்கடி கடுமையானதற்குச் சர்க்கார்த் தொகுதியில் மேற்கொண்டுள்ள தொழில் அபிவிருத்தி

இனங்களுக்கு அன்னியச் செலாவணி அதிகமாகத் தேவைப்பட்டது மற்றொரு காரணம். இது 305.91 கோடியிலிருந்து 406 கோடியாக உயர்ந்து விட்டது. அதாவது மொத்தத்தில் ரூ. 100 கோடி ரூபாய் அதிகப்படிச் செலவு ஏற்பட்டது.

இப்படிப்பட்ட நிலைமையில் தனியார்த் தொகுதி இந்த நெருக்கடியால் எப்படிப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கவனிக்கலாம். திட்டத்தில் தனியார்த்தொகுதிக்கு விதிக்கப்பட்டுள்ள லட்சியங்களை அவர்களால் நிறைவேற்ற முடியுமா? அன்னியச் செலாவணி நெருக்கடியால் அவர்களுடைய அபிவிருத்தித் திட்டங்களும் தொழில்களும் எவ்வாறு பாதிக்கப்படும்? சர்க்கார்த் தொகுதியாக இருந்தாலும் தனியார்த் தொகுதியாக இருந்தாலும், இரண்டுக்கும் தேவைப்படும் நிதி ஒரே கஜானாவிலிருந்துதான் கிடைக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. இதிலிருந்து கிடைக்கும் நிதியையும் நிதி வசதியையும் பூராவாகச் சர்க்கார்த் தொகுதி அபிவிருத்தித் திட்டங்களுக்கே பயன்படுத்திக் கொண்டால் தனியார்த் தொகுதிக்கு அவர்கள் லட்சியங்களை நிறைவேற்ற அதிகமாக ஒன்றும் மிஞ்சாது. இரண்டாவது திட்டத்தில் தனியார்த் தொகுதிக்கு ரூ. 840 கோடி அளவுக்கு முதலீடு செய்து, அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று வகுக்கப்பட்டிருக்கிறது. இதில் அன்னியச் செலாவணி அம்சம் ஏறக்குறைய 440 கோடி ரூபாய். திட்டத்தின் அத்தியாவசியமான இனங்கள் என்று கருதப்பட்டவைகளுக்கு மட்டும் கிடைக்கக்கூடிய எல்லா அன்னியச் செலாவணியையும் வழங்கி விட்டால், தனியார்த் தொகுதி அபிவிருத்திக்குப் பாக்கி நிற்கும் தொகை மிக, மிகக் குறைவாகத் தானே இருக்கும்? எனவே, அவர்களால் அபிவிருத்தி அம்சங்கள் எதையும் மேற்கொள்ள முடியாத நிலையில்தானே இருப்பார்கள்? இதனால் நமது முன்னேற்றம் எப்படித் தடைப்படுகிறது என்பது விளங்கும்.

மேலும், அன்னியச் செலாவணிக் குறைவால் சில பிராந்தியங்களில் மின்சாரத் திட்டங்கள் தடைப்பட்டு, அதனால் மின்சார சக்தி சப்ளையில் குறைவு ஏற்படலாம் என்றும் அதனால் தொழில் அபிவிருத்தி பின்னடைந்துவிடும் என்றும் எண்ண இடமிருக்கிறது. அலுமினியம், இரும்பு—மாங்கனீஸ், காஸ்டிக் சோடா, சிமிண்ட், சாய வகைகள் முதலிய பலவகை தொழில்களில் லட்சியங்கள் எட்டிப் பிடிக்க முடியாமல் போகக் கூடும். உற்பத்தி குறையும். ஆலை நிர்மாணத்துக்கு வேண்டிய எஃகு உருக்குக் கட்டடச் சாமான்கள் தயாரிப்பதும் பாதிக்கப்படலாம். மோட்டார்கார்கள், பஸ்கள் உற்பத்தியும் திட்டப்படி நிறைவேறாது போய்விடும். பல்வேறு தொழில்களில் உற்பத்தி லட்சியங்கள் இம்மாதிரி நிறைவேறாது போவதுடன் செயல் புரிந்துகொண்டு வரும் தொழிற் கூடங்கள் தங்களது விஸ்தரிப்புத் திட்டங்களையும் யந்திரங்களைப் புதுப்பிக்கும் திட்டங்களையும் மேற்கொள்ள முடியாமற் போகலாம். இவற்றுக்கெல்லாம் அதிகப்படியாகச் சுமார் 35 கோடி அன்னியச் செலாவணி வழங்கப்பட்டால்தான் அபிவிருத்தித் திட்டத்தை மேற்கொள்ள முடியும்.


சுருங்கச் சொன்னால், இதுவரையில் நாட்டுத் தொழில் வளர்ச்சியில் பெருமளவில் ஊக்கமும், உற்சாகமும் காட்டி முன்னேற்றத்துக்கு வகை செய்துள்ள தனியார்த் தொகுதி இப்போது இந்தச் செலாவணி நெருக்கடியால் சிறகு ஒடிந்த பறவைபோல் நிற்கிறது.


இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி ஆண்டில் மட்டும் அன்னியக் கடன் அசலுக்காகவும் வட்டிக்காகவும் ரூ. 110 கோடி வரையில் நாம் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. மூன்றாவது திட்ட ஐந்தாண்டு காலத்தில் நாம் திருப்பிக் கொடுக்க வேண்டிய தொகை மொத்தம் ரூ. 556 கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது. எனவே நமது கடன் பொறுப்புகளை நிறைவேற்ற இப்போதிருந்தே அன்னியச் செலாவணி நிதியைப் பெருக்கிக் கொண்டே போவதா என்ற பிரச்னை முக்கியமாகிறது. இல்லாவிட்டால் மூன்றாவது திட்டத்தை ஆரம்பிக்கும்போது நாம் கடன் சுமையைத் தாங்கிக் கொண்டுதான் ஆரம்பிக்க வேண்டும்.

இதற்குப் பரிகாரம் என்ன? முதன் முதலாகச் செய்ய வேண்டியது திட்டத்தில் அவசியத்துக்கு ஏற்றவாறு எந்தெந்த அம்சங்களை முதலில் நிறைவேற்ற வேண்டுமோ, அவற்றை வரிசையாக நிர்ணயிக்க வேண்டும். இதைச் செய்வதில் வறட்டுக் கௌரவத்தை உதறித் தள்ளிவிட்டு, செயல் முறையில் நடக்கக் கூடிய மாதிரித் திட்டத்தைக் குறைத்துக் கொள்ளுவதுடன் அதன் கிரமங்களையும் மாற்ற வேண்டும். நாட்டின் பொருளாதாரம் பாதிக்காமலிருக்க வேண்டுமானால் இதைச் செய்வது முக்கியம். ''நம்மால் எந்த அளவுக்கு அன்னியச் செலாவணி வர்த்தக மூலமும், அயல் நாட்டு உதவி மூலமும் சம்பாதித்துக் கொள்ள முடியுமோ அந்த அளவுக்கு நமது செலவுகளை மாற்றி அமைத்துக் கொள்ளுவதை விட நமக்கு வேறு வழி இல்லை'' என்று திட்டக் கமிஷன் கூடச் சொல்லியிருக்கிறது. இதிலிருந்து இந்த உண்மையை அவர்கள் கூடப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்றே எண்ண வேண்டும்.

இரண்டாவதாக நாம் செய்ய வேண்டிய காரியம் ஏற்றுமதியைப் பெருக்க வகை செய்வது. ''ஏற்றுமதி செய்யவேண்டும் இல்லையேல் அழிந்து போக வேண்டும்'' என்ற கோஷம் அடிக்கடி காதில் விழுகிறது. அதில் உண்மை இருக்கிறது. உள்நாட்டுக் கொள்கைகளில் தேவையான மாறுதல்களையும் வர்த்தகர்களுக்கு ஊக்கமளிக்க வரி முறைகளில் திருத்தங்களையும் அரசாங்கம் செய்து ஏற்றுமதி வர்த்தகத்தைப் பெருக்க வகை செய்ய வேண்டும். அங்ஙனம் செய்தாலொழிய, போட்டி வலுத்துக் கொண்டு வரும் உலகச் சந்தையில் நம்மால் நிலைக்க முடியாது.

மூன்றாவதாக, நம்முடன் நட்புக் கொண்டு பழகும் அயல் நாடுகளில் வழங்கும் அன்னிய உதவி. அவர்கள் ஏற்கனவே பலவிதத்திலும் நமக்கு உதவி அளித்திருக்கிறார்கள். அவர்களுடைய உதவியை மேலும் நாம் பெற வேண்டுமானால் நம்முடைய வரி முறையில் மாற்றம் செய்து அயல் நாட்டு மூலதனம் நம் நாட்டில் குவியச் செய்ய வேண்டும்.




Africa
Indonesia
Persia
Egypt
England
America

பாண்டிமாதேவி



அத்தியாயம் 11

ஒற்றர் மூவர்

எழுத்தாணி கொண்டு மூன்று ஓலைகளிலும் கோடுகளால் சில படங்களை வரைந்து விட்டான் கொடும்பாளூர் மன்னன். சில எழுத்துக்களும் அவற்றில் தென்பட்டன. தன் மனக் கருத்தை அவன் வெளியிட்ட சாமர்த்தியமான முறை அவர்களைப் பிரமிக்கச் செய்து விட்டது.

"இதோ, இவற்றைப் பாருங்கள்! என் கருத்து விளக்கமாகப் புரியும்" என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே அந்த ஓலைகளை அவர்களிடம் நீட்டினான் அவன். கொடும்பாளூர் மன்னனின் முரட்டுக் கையில் அவ்வளவு நளினம் மறைந்து கொண்டிருக்குமென்று அரசூருடையானோ, அல்லது பரகேசரியோ கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

அவர்கள் இருவரும் அவன் கொடுத்த அந்த ஓலைகளையெல்லாம் ஒவ்வொன்றாகப் பார்த்தனர்.

முதல் ஓலையில் மகாராணி வானவன்மா தேவியைப் போல ஒரு உருவம் வரையப் பட்டிருந்தது. அந்த உருவத்தின் கழுத்துக்கு நேரே ஆறு முரட்டுக் கைகள் ஒரு கூர்மையான வேலை எறிவதற்குக் குறி வைத்துப் பிடித்துக் கொண்டிருப்பது போல் சித்திரிக்கப்பட்டிருந்தது. உருவத்தின் கீழே வான





வன்மா தேவியார் என்றும் எழுதி யிருந்தது. இரண்டாவது ஓலையில் கடலின் மேல் ஒரு பாய்மரக் கப்பல் வேகமாகச் செல்வதுபோல் வரைந்திருந்தது. அதன் அருகில் குமார பாண்டியன் இராச சிம்மனைப் போல் ஒரு இளைஞனின் உருவம் சித்திரிக்கப்பட்டு முதல் ஓலையில் கண்டபடியே கப்பலிலிருந்து ஆறு கைகள் நீண்டு ஒரு வேலை அந்த இளைஞனின் நெஞ்சில் பாய்ச்சுவதற்குத் தயாராக இருப்பதுபோல் வரையப்பட்டு உருவின் கீழே 'பாண்டிய குமாரன் இராசசிம்மன்' என்று எழுதியிருந்தது.

எதையும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியாத மனக் குழப்பத்தோடு மூன்றாவது ஓலையைக் கையிலெடுத்துப் பார்த்தனர் அரசூருடையானும், கோப்பர கேசரியும். அந்த மூன்றாவது ஓலையில் அவர்களுடைய இதயத்தைக் குழப்பும் மூன்றாவது புதிர் மறைந்திருந்தது. அதையும் பார்த்துத் திகைத்து விட்டனர் இருவரும்.

மூன்றாவது ஓலையில் இரண்டு ஆறுகளுக்கு இடையே ஒரு சிறிய தீவு போலவும், அதில் ஒரு மாளிகை போலவும் வரையப்பட்டிருந்தன. மாளிகை வாசலில் இடையாற்றுமங்கலம் நம்பி என்று பெயர் எழுதப்பட்ட ஒரு உருவமும் வரையப்பட்டிருந்தது. இந்தப் படத்திலும் ஆறு கைகள் இருந்தன. ஆனால் முன் ஓலைகள் இரண்டுக்கும் இந்த ஓலைக்கும் மிகப் பெரிய வேறுபாடு ஒன்றும் இருந்தது.

இந்த ஓலையில் கொல்வது போலவோ, குத்துவது போலவோ கைகள் வரையப்படவில்லை. ஆறு கரங்களும் தனித்தனியே சமரச பாவத்தோடு மகாமண்டலேசுவரர் இடையாற்றுமங்கலம் நம்பியைத் தழுவிக்கொள்ள முந்துவது போல் படம் அமைந்திருந்தது.

மூன்று ஓலைகளிலும் கொடும்பாளூர்க் குறுநில மன்னன் அவசரம் அவசரமாகக் கிறுக்கியிருந்த சித்திரங்களையும், எழுத்துக்களையும் பார்த்துவிட்டு அரசூருடையானும், பரகேசரியும் தலைநிமிர்ந்தனர். எதையும் விளக்கமாகப் புரிந்து கொண்டாற் போன்ற தெளிவு அவர்கள் முகத்தில் துலங்கவே இல்லை.

அதுவரையில் அவர்களையே கவனித்துக் கொண்டிருந்த கொடும்பாளூரான் 'என்ன? புரிந்து கொண்டீர்களல்லவா?' என்று மிகுந்த ஆர்வத்தோடு வினவினான்.

''கொடும்பாளூர் வேந்தர் இவ்வளவு பெரிய ஓவிய வல்லுநராக இருப்பார் என்று இதுவரையில் எனக்குத் தெரியவே தெரியாது'' என்றான் அரசூருடையான்.

''ஓவியம் மட்டுமா? சொல்ல வேண்டிய செய்திகளைக் குறிப்பாக அறிவுறுத்த முயன்றிருக்கிறீர்கள். ஆனால் எங்கள் இருவருக்கும் அது அவ்வளவாகப் பொருள் விளங்கவில்லை. நீங்களே எங்கள் சந்தேகத்தைப் போக்கிவிட்டால் நல்லது!'' என்று சந்தேகத்தை மனம் விட்டுக் கேட்டான் பரகேசரி.

உடனே கொடும்பாளூர் மன்னன் அந்த ஓலைகளைக் கையில் எடுத்துக் கொண்டு அவர்களுக்கு நடுவில் வந்து நின்றவாறு ஒவ்வொன்றாக விளக்கிக் கூறலானான். கால் நாழிகை நேரம் அவனுடைய விளக்கவுரை தொடர்ந்தது. அந்த விளக்கவுரையிலிருந்து அரசூருடையானும், கோப்பரகேசரியும் புரிந்து



கொண்ட விவரங்கள் வருமாறு: நாஞ்சில் நாட்டு மகாமண்டலேசுவரரின் ஆதரவில் புறத்தாய நாட்டுக் கோட்டையில் தங்கியிருக்கும் மகாராணி வானவன்மா தேவியைக் கொலை செய்து விடுவது முதல் திட்டம். இலங்கைத் தீவுக்கு ஓடியிருப்பதாக எண்ணப்படும் குமார பாண்டியன் இராச சிம்மனையும் சில அந்தரங்கமான ஆட்களைக் கப்பலில்



அனுப்பி அங்கிருந்து திரும்பவோ, திரும்பக் கருதவோ அவகாசமின்றி அங்கேயே யாருமறியாது தீர்த்துவிட வேண்டுமென்பது இரண்டாவது திட்டம்.

யாரை வேண்டுமானாலும் பகைத்துக் கொள்ளலாம். ஆனால் இடையாற்று மங்கலம் நம்பியைப் பகைத்துக் கொண்டால் ஒரு காரியமும் நடக்காது. புறத்தாய நாட்டுப் பகுதியைக் கைப்பற்றவோ, ஆளவோ அந்த மனிதரின் தயவு நிச்சயமாக வேண்டும். மகாராணியாரையும், குமார பாண்டியனையும் கொலை செய்த பின்னரும், மகா மண்டலேசுவரரைத் தங்கள் மனிதராக்கிக் கொண்டு தன்மையாகத் தழுவி வைத்துக்கொண்டாலொழியத் தாங்கள் மூவரும் அந்தப் பிரதேசத்தில் காலடி யெடுத்து வைக்க முடியாது என்று உணர்ந்திருந்தனர். ஆகவே, இடையாற்றுமங்கலம் நம்பியைய மட்டும் தங்களுடைய பாராட்டு வலையில் வீழ்த்தித் தொடர்ந்து மண்டலேசுவரராக இருக்கச் செய்ய வேண்டும் என்பது மூன்றாவது ஓலையில் கண்ட திட்டம்.



இப்படி மூன்று ஓலைகளிலும் கண்ட திட்டங்களை நிறைவேற்றுவதில் மூன்று பேருடைய பங்கும் இருப்பதனால் ஆறு கைகளை ஒவ்வொரு படத்திலும் வரைந்திருப்பதாகத் தன் திட்டங்களைக் காரண காரியங்களோடு அவர்களுக்குச் சொன்னான் கொடும்பாளூர் மன்னன்.

"எல்லாம் சரிதான்! ஆனால் மகாராணியையும், குமார பாண்டியனையும் கொலை செய்ய வேண்டுமென்பதுதான் நம்முடைய பெருந்தன்மைக்குப் பொருத்தமான காரியமாகப் படவில்லை எனக்கு" என்று அலுத்துக் கொள்வது போன்ற குரலில் மற்ற இருவரின் முகத்தையும் பார்த்துக்கொண்டே சொன்னான் அரசூருடையான்.

"அரசூருடையார் கூறுவது போலத்தான் எனக்கும் தோன்றுகிறது. இடையாற்றுமங்கலம் நம்பியை வேண்டுமானால் நம்முடைய சூழ்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். அவரே நமக்கு ஒத்துழைக்க இணங்கி விட்டாரானால் எங்கோ கண்காணாதஇடத்தில் மறைந்து கிடக்கும் பயந்தாங்கொள்ளி இராசசிம்மனும், வானவன்மா தேவியும் நம்மை என்ன செய்துவிட முடியும்? உயிரோடிருந்தாலும் அவர்கள் நடைப்பிணம் போன்றவர்களே. அப்படியிருக்கும் போது அவர்களைக் கொலை செய்வதற்காக நாம் நம்முடைய நேரத்தை வீணாகச் செலவழிப்பானேன்?" என்று பரகேசரியும் கொடும்பாளூர் மன்னனைப் பார்த்துக் கேட்டான்.

அரசூருடையான், பரகேசரி இருவரையும் பார்த்துக் கொடும்பாளூரான் சிரித்தான். "நண்பர்களே! காரியத்தைச் சாதித்துக் கொள்ள விரும்புகிறவர்களுக்கு இந்த அநாவசியமான கருணையெல்லாம் இருக்கக் கூடாது. மேலும் நாம் நினைப்பதைப்போல இடையாற்று மங்கலம் நம்பி அவ்வளவு விரைவில் நம்முடைய சூழ்ச்சிக்கு வசப்பட்டு விடமாட்டார். இராச சிம்மனும், மகாராணியும், தொலைந்து மகாமண்டலேசுவரரான இடையாற்று மங்கலம் நம்பியைக்கூடப் பொருட்படுத்தாமல் காரியங்களைச் செய்கிற துணிவு நமக்கு ஏற்பட்டு விடும்" — என்று மேலும் வற்புறுத்திக் கூறினான்.

அரசூருடையானும், பரகேசரியும் எத்தனையோ விதங்களில் விவாதித்தனர். மறுப்புக் கூறினர். புறத்தோற்றத்தைப் போலவே அகத்தோற்றத்திலும் முரட்டுத் தன்மையும், பிடிவாதமும் உள்ள கொடும்பாளூர் மன்னன் தன்னுடைய கருத்தையே நிலைநிறுத்திப் பேசினான். அவனுடைய பேச்சின் போக்கைப் பார்த்தால் விட்டுக் கொடுக்கும் தன்மைக்கு அணுவளவும் இடம் இருப்பதாகப் படவில்லை.

அரசூருடையானும், பரகேசரியும், தங்களுக்குள் எப்போதும் ஒத்துப் போகும் தன்மை யுடையவர்கள். கொடும்பாளூரானின் பிடிவாத குணம் அவர்களுக்கு முன்பே தெரிந்ததுதான். கேவலம், இந்தச் சிறிய விஷயத்துக்காக மனம் வேறுபட்டுப் பிரியவோ; ஒற்றுமைக் குலைவை ஏற்படுத்திக் கொள்ளவோ, அவர்கள் விரும்பவில்லை. விந்திய மலைக்குத் தென்பால் குமரிக் கடல் ஈறாகவுள்ள சகலப் பிரதேசங்களிலும் தங்கள் மூவருடைய கொடிகள் பறக்க வேண்டுமென்பதுதான் அவர்களுடைய ஆசை. அந்த மாபெரும் ஆசையை எந்த வழியில் பூர்த்தி செய்துகொள்ள வேண்டுமானாலும் அதற்கு அவர்கள் தயாராகத்தான் இருக்கிறார்கள். "என்ன சொல்கிறீர்கள்? இந்த ஏற்பாட்டுக்கு நீங்கள் ஒத்து வந்தால்தான் நான் உங்களோடு சேர்ந்தவன். இல்லையானால் என்னுடைய வழியை நான் தனியே வகுத்துக் கொண்டு போக வேண்டியதுதான்" என்றான் கொடும்பாளூர் மன்னன்.

அரசூருடையானும், பரகேசரியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு பேசாமல் இருந்தனர் சிறிது நேரம். "நீங்கள் கற்சிலைகளைப் போல வாய் திறவாமல் இப்படி மௌனமாக உட்கார்ந்திருப்பதற்காகவா நான் சிரமப்பட்டு இந்த ஓலைகளை எழுதினேன்? எனக்கு விடை வேண்டும்!"

உள்ளங் கைகளைத் தட்டிப் புடைத்து மீசை துடிதுடிக்க ஆத்திரத்தோடு இரைந்து கத்தினான் முன்கோபியான கொடும்பாளூர் மன்னன்.

"கொடும்பாளூர் மன்னரே! கவலைப் படாதீர்கள். எதற்காக ஆத்திரமடைகிறீர்கள்? உங்களுடைய யோசனையை எதற்காகவேனும், எப்பொழுதேனும் நாங்கள் மறுத்திருக்கிறோமா? உங்கள் திட்டப்படியே செய்வோம்" என்று பரகேசரி கூறியபின்புதான் கொடும்பாளூரானின் முகத்தில் தோன்றிய கடுகடுப்பும், ஆத்திரமும் மறைந்தன.

"மிகவும் நல்லது! உங்கள் திட்டப்படியே யாவும் நடைபெறட்டும். நானும் பரகேசரியும் மனப்பூர்வமாக ஒத்துழைக்கிறோம். இப்போது மேலே செய்ய வேண்டிய காரியத்தைச் சொல்லுங்கள். குமார பாண்டியனையும், வானவன்மா தேவியையும் ஒழிப்பதற்கு என்ன செய்யப்போகிறீர்கள்?" அரசூருடையானின் இந்தக் கேள்வி சற்றுத் தணிந்திருந்த கொடும்பாளூர் மன்னனின் கோபத்தை உடனே மீண்டும் கிளப்பி விட்டுவிடும் போலிருந்தது.

"'என்ன செய்யப் போகிறீர்கள்?'— என்று என்னை மட்டும் பார்த்துக் கேட்கிறீர்களே? யோசனையை நான் சொல்லி விட்டேன். இனிமேல் செய்யவேண்டியதை மூன்று பேர்களுமாகச் சேர்ந்துதான் செய்யவேண்டும். அரசூருடையார் என்னை மட்டும் 'நீங்கள் நீங்கள்' என்று சுட்டிக்காட்டிப் பேசுவதில் பயனில்லை!" என்று சீறி விழுவதுபோல் இரைந்தான் கொடும்பாளூர் மன்னன்.

அதன் பின்னர் அவனைச் சுய நிலைக்குக் கொண்டு வந்து பேசி முடிப்பதற்குள் ஒரு மத யானையை அடக்குவதற்குப் படவேண்டிய அவ்வளவு சிரமங்களையும் அனுபவித்து விட்டனர் சோழன் பரகேசரியும் அரசூருடையானும்.

• • •

உறையூரில் மந்திராலோசனைக் கூட்டம் நடந்த அதே தினம் மாலை நாகைப்பட்டினத்துக் கடல் துறையில் ஓர் காட்சியைக் காண்கிறோம். கரையில் ஒரு பெரிய பாய்மரக் கப்பல் ஈழநாட்டுக்குப் புறப்படுவதற்குத் தயாராக நிற்கிறது. பாய் மரத்தின் கூம்பில் கப்பலுக்கே அழகு செய்வது போலப் புலி, பனை ஆகிய சின்னங்கள் ஒன்றாகப் பொறிக்கப்பட்ட கொடி ஒன்று காற்றில் பறந்து கொண்டிருக்கிறது.

கரையில் கொடியிலே கண்ட அந்தச் சின்னங்களுக்குரிய மாபெரும் வேந்தர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். ஆம்! நாம் காலையில் உறையூர் அரண்மனையில் சந்தித்த மூவரும்தான். அவர்களுக்கு எதிர்த்தாற்போலச் சிவப்புத் தலைப்பாகை அணிந்த ஆறு வீரர்கள் அடக்க ஒடுக்கமாக நின்று கொண்டிருந்தனர். கொடும்பாளூர் மன்னன் அந்த வீரர்களிடம் உபதேசம் செய்வது போலக் கைகளை ஆட்டியும், கண்களைச் சுழற்றிப் புருவத்தை வளைத்தும் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான். அவன் அப்படி என்னதான் முக்கியமான செய்தியை அவர்களுக்குக் கூறிக் கொண்டிருக்கிறான்? அருகில் நெருங்கிச் சென்று நாமும்தான் அந்தச் செய்தியைக் கேட்டுத் தெரிந்து கொள்வோமே!



"அடே! நீங்கள் மூவரும் பரம ஜாக்கிரதையாக இந்தக் காரியத்தை முடித்து விட்டுத் திரும்பி வரவேண்டும். மூத்தரையா! இரும்பொறை! செம்பியா! நீங்கள் ஏறிச் செல்லுகிற இந்தப் பாய்மரக் கப்பல் நேரே மேல் கடற்கோடியிலுள்ள விழிஞம் துறைமுகத்தில் கொண்டு போய் உங்கள் மூவரையும் இறக்கி விட்டு விட்டு அப்புறம்தான் ஈழத்துக்குப் போகும். உங்களோடு வருகின்ற மற்ற மூவரும் கப்பலோடு அப்படியே ஈழ நாட்டுக்குச் சென்றுவிடுவார்கள். உங்களைப்போலவே அவர்கள் ஈழத்தில் போய் ஒரு செயலை முடித்துக் கொண்டு வெற்றிகரமாகத் திரும்ப வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் உங்கள் செயலை முடிப்பதற்கு முன் நான் கொடுத்த ஓலையை இடையாற்று மங்கலம் நம்பியிடம் சேர்த்து விடக்கூடாது" என்று எச்சரித்தான் கொடும்பாளூர் மன்னன்.

அந்த வீரர்கள் அவன் கூறியவற்றைக் கவனமாகக் கேட்டுக் கொண்டு மரியாதை செலுத்துகிற பாவனையில் தலை வணங்கினர்.

அப்போது அந்தப் பாய்மரக் கப்பலைச் செலுத்தும் மாலுமிவந்து கும்பிட்டான். "பிரபூ! கடலில் காற்று அதிகமாக

இருக்கும்போதே புறப்பட வேண்டும். இல்லையானால் எத்தனை பாய்களை விரித்தாலும் பயனில்லை. நேரமாகிறது. இவர்களை ஏற்றிக் கொண்டு புறப்படுகிறேன். எங்களுக்கு விடை கொடுங்கள்'' என்று கொடும்பாளூர் மன்னரிடம் பணிவான குரலில் அவன் வேண்டிக் கொண்டான்.

சற்றுத் தள்ளித் தங்களுக்குள் ஏதோ பேசியவாறு நின்று கொண்டிருந்த அரசூருடையானும், சோழன் பரகேசரியும் நெருங்கி வந்தனர்.

கிங்கரர்களைப் போலத் தோற்றமளித்த அந்த ஆறு வீரர்களும் பாய்மரக் கப்பலின் முதல் தளத்தில் ஏறி நின்று கொண்டனர். கரையில் நின்று தங்களையே பார்த்துக் கொண்டிருந்த அரசர்கள் மூவரையும் கடைசி முறையாக வணங்கினர்.

அதே சமயத்தில் தேர்வடம் போல் இழுத்துக் கட்டியிருந்த நங்கூரக் கயிறு அவிழ்க்கப்பட்டது. சிகரத்தில் அசைந்தாடும் கொடியுடனே மிகவும் பெரிய வெண்ணிறப் பறவை ஒன்று தண்ணீர்ப் பரப்பை ஒட்டினாற் போலச் சிறகுகளை அடித்துக் கொண்டு பறப்பது போல் கப்பல் கடலுக்குள் நகர்ந்தது.

''நண்பர்காள்! இன்னும் பதினைந்தே தினங்கள்தான். நம்முடைய மனோரதம் நிறைவேறி விடும்!'' என்று கொடும்பாளூர் மன்னன் அரசூருடையானையும், பரகேசரியையும் பார்த்துக் கூறினான்.

அத்தியாயம் 12

முன்சிறை அறக்கோட்டம்

செல்வச் செழிப்பும், வேளாண்மை வளமும், மிக்க அந்நாளைய நாஞ்சில் நாட்டில் மூலைக்கு மூலை, ஊருக்கு ஊர், இடத்துக்கு இடம், அறக்கோட்டங்களும், ஆலயங்களும் வழிப்போக்கர் தங்கக்கூடிய மன்றங்களும் இருந்தன.

'அறத்தால் விளங்கி ஆன்ற கேள்விப் புறத்தாய நாடு' என்று புலமைவாணர்கள் புகழ்ந்த பெருமை அதற்கு உண்டு. மகாமன்னர் பராந்தகச் சக்கரவர்த்திகளின் காலத்தில் அவருடைய தர்ம சிந்தனை மிகுந்த உள்ளத்தினாலும், மகாமண்டலேசுவரரின் நிர்வாகத்திறமையினாலும் புதிய தர்மசாலைகள் பல தென்பாண்டி நாடு முழுதும் உண்டாயின.

அப்போது தென்பாண்டிப் பகுதியிலேயே முதன்மையானதும், பெரியதுமான அறக்கோட்டமொன்று முன்சிறையில் அமைக்கப்பட்டது. துறைமுகப் பட்டினமான விழிஞத்தில் பல தேசத்துக் கப்பல்களில் வரும் வணிகர்கள் தங்குவதற்கு முன்சிறை அறக்கோட்டத்துக்கு வந்து சேர்வது வழக்கம். கீழப் புறத்தாய நாட்டையும், மேலப் புறத்தாய நாட்டையும் இணைக்கும் காந்தளூர் இராஜபாட்டையில் விழிஞத்துக்குக் கிளை வழி பிரிகின்ற ஓர் திருப்பத்தில் முன்சிறை நகரம் இருந்ததால், கடல் வழியே கப்பலில் வருவோர், தீர்த்த யாத்திரைக்காக வடபால் நாடுகளிலிருந்து வருவோர், புனிதம் நிறைந்த குமரிக் கடலில் நீராடிப் போக வருவோர், யாவருக்கும், எப்போதும் தங்குவதற்கு வசதி நிறைந்ததாக முன்சிறை அறக்கோட்டம் கேந்திரமான இடத்தில் வாய்த்திருந்தது.

நாகைப்பட்டினத்துத் துறைமுகத்தில் பாய்மரக் கப்பல் புறப்பட்ட மறுநாள் இரவு மூன்றாம் யாமத்தில் முன்சிறை அறக்கோட்டத்தில் ஓர் அதிசயமான சம்பவம் நடந்தது. சத்திரத்து மணியகாரனான அண்டராதித்த வைணவனும் அவன் மனைவியும் அங்கேயே ஒரு பகுதியில் குடியிருந்து வந்தனர். சாதாரணமாக, முதல் யாமம் முடிவதற்கு முன்பே மணியகாரன் பிரதான வாசலை அடைத்து உட்புறமாகத் தாழிட்டுக் கொண்டு தன் வீட்டுக்குப் போய் விடுவான். அவனுடைய குடியிருப்பு வீடும் உட்புறமே கட்டிக் கொடுக்கப் பட்டிருந்தது.

முன்சிறை அறக் கோட்டத்தின் அமைப்பை மானசீகக் கண் நோக்கினால் பார்த்தால்தான் நேயர்களால் இவற்றையெல்லாம் நன்றாக விளக்கிக் கொள்ள முடியும். வாருங்கள். 'இரவு நேரமே' என்று தயங்காமல் முன்சிறைக்குப் போவோம். இப்போது நாழிகை என்ன? நாழிகையைப் பற்றி நமக்கு என்ன பயம்? இன்னும் முதல் யாமம் முடியவில்லையாதலால் அறக்கோட்டத்தின் கதவை இதற்குள் அடைத்திருக்க மாட்டார்கள்.

ஆ! இதோ வந்து விட்டோம். எதிரே தெரிகிறது பாருங்கள். உயரமான மருத மரக் கூட்டத்துக்கு நடுவே, காவிநிறக் கட்டடங்கள். கோட்டை வாசல் கதவுகளைப் போன்ற அந்த முன்வாசல் கதவருகே யாரோ திவட்டியும் கையுமாக நின்று கொண்டிருப்பது தெரிகிறதே! நிற்பது யார்? சற்று அருகில் நெருங்கிப் போய் அவர்களைப் பார்ப்போம்.

அடாடா! முதல் யாமம் முடிகிற நேரம் நெருங்கி விட்டது போலிருக்கிறது. நிலைவட்டியோடு நிற்பவன் வேறு யாருமில்லை. மணியகாரனான அண்டராதித்த வைணவன்தான் கதவுகளை அடைப்பதற்காக வந்து நின்றுகொண்டிருக்கிறான். ஆகா! இந்த மாதிரி கட்டை குட்டையான தோற்றத்தையுடைய ஆளை இதற்கு முன்பே பல தடவைகள் பார்த்திருப்பதைப் போல் ஒரு பிரமை உண்டாகிறதே!

ஆமாம்! இப்போது நினைவு வருகிறது. கையில் தீப்பந்தத்தோடு கதவைச் சாத்துவதற்காக நிற்கும் இந்த மனிதன் அசைப்பில் நமக்கு ஏற்கெனவே அறிமுகமான நாராயணன் சேந்தனைப் போல் அல்லவா இருக்கிறான்? அதே போலக் குடுமி. அதே போல நெற்றியில் கீற்றுத் திலகம். அகத்திய வடிவம்!

இங்கே மணியகாரனாகஇருக்கும் இந்த அண்டராதித்த வைணவன் வேறு யாருமில்லை. நம்முடைய சாட்சாத் நாராயணன் சேந்தனின் சொந்தத் திருத்தமையன்தான். முன்சிறைத் தர்மசாலையின் எல்லா நிர்வாகப் பொறுப்புக்களும் இவன் கையில்தான். ஆனால் இவனையும், இவனுடைய நிர்வாகங்களையும் மொத்தமாகச் சேர்த்து மேய்க்கும் பொறுப்பு இவனுடைய மனைவியான கோதை நாச்சியாரிடம் இருந்தது.

தன் தம்பி மகாமண்டலேசுவரரிடம் மிக முக்கியமான பதவியை வகிக்கிறான் என்று மற்றவர்களிடம் சொல்லிக்கொள்வதில் அண்டராதித்த வைணவனுக்குத் தனிப்பெருமை. தன் மனைவி எப்போதாவது தன்னைக் கண்டிப்பது போல் இரைந்துபேசினால் அவள் வாயை அடக்குவதற்கு அவன் பிரயோகிக்கும் கடைசி அஸ்திரமும் இதுதான்.

''இந்தா, கோதை! என் தம்பி இந்தத் தென்பாண்டி மகாமண்டலேசுவரருக்கு எவ்வளவு அந்தரங்கமானவன் தெரியுமா? அவன் இல்லாவிட்டால் அவருக்கு ஒரு காரியமும் ஓடாது. அவன் சுட்டு விரலை அசைத்தால் போதும். பெரிய பெரிய காரியங்களைச் சாதித்து விடுவான். அப்படிப்பட்டவனுக்கு மூத்தவனாகப் பிறந்து விட்டு நான் உன்னிடம் மாட்டிக் கொண்டு இந்தப் பாடுபடுகிறேன்'' என்று தன் மனைவியிடம் கூறுவான் அண்டராதித்த வைணவன்.

''ஏன் சும்மா இருக்கிறீர்களாம்? உங்கள் தம்பியிடம் சொல்லிச் சுட்டு விரலை ஆட்டச் செய்து என்னையும் அடக்குவதுதானே?'' என்பாள் அவள்.

இந்த வேடிக்கைத் தம்பதிகளால் அந்தச் சத்திரத்து நிர்வாகம் குறைவில்லாமல் நடந்து வந்தது. இவர்களுடைய பேச்சும், சிரிப்பும் அங்கே வந்து செல்லும் நூற்றுக்கணக்கான யாத்திரிகர்களுக்கு மகிழ்ச்சியளிப்பவை. மூத்தவனான அண்டராதித்த வைணவனுக்கும், இளையவனான நாராயணன் சேந்தனுக்கும் சுபாவத்தில் நிறைய ஏற்றத் தாழ்வுகள் இருந்தன. துணிவும், சாமர்த்தியமும், சூழ்ச்சிகளைப் பழகிய இராஜதந்திரமும் தேர்ந்தவனான நாராயணன் சேந்தன் எங்கே, பயந்த சுபாவம், எளிதில் பிறருக்கு அடங்கிவிடுகிற இயல்பு, ஒளிவு மறைவில்லாத எண்ணம், அப்படியே பேச்சு, அப்படியே செயல், எல்லாம் அமைந்த அண்டராதித்த வைணவன் எங்கே?

இப்படிக் குணரீதியாகப் பார்த்தால் நாராயணன் சேந்தனை மூத்தவனென்றும், அண்டராதித்த வைணவனை இளையவனென்றும் மாற்றிச் சொல்ல வேண்டியதாக நேரிட்டு விடும். போகட்டும், கதை நிகழ்ச்சிக்கு வருவோம்.

முதல் யாமம் முடியப் போகிற தறுவாயில் அண்டராதித்த வைணவன்



கதவைச் சாத்துவதற்காக அறக்கோட்டத்தின் வாசலில் வந்து நின்றானல்லவா? அப்போது தென் கிழக்குத் திசையிலுள்ள கிளை வழியிலிருந்து யாரோ இரண்டு மூன்று ஆட்கள் சத்திரத்தை நோக்கி வருவது போல் தோன்றியதனால்தான் அவன் கதவை அடைக்காமல் தயங்கி நின்றான்.

''கதவை அடைத்து விட்டு உள்ளே வரப் போகிறீர்களா, இல்லையா? குளிர் வாட்டி எடுக்கிறது!'' என்று அதட்டுவது போன்ற தொனியில் வினவிக்கொண்டே ஒரு நடுத்தர வயதுள்ள அம்மையார் உட்புறத்திலிருந்து வெளியே வந்தாள்.

''கொஞ்சம் பொறு, கோதை! கிழக்கே துறைமுகச் சாலையிலிருந்து யாரோ ஆட்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். பாவம்! எவராவது வெளிதேசத்திலிருந்து கப்பலில் புதிதாக வந்து இறங்கியிருப்பார்கள். நாம் கதவை அடைத்துக் கொண்டு போய்விட்டால் தங்குவதற்கு இடமின்றி அவர்கள் திண்டாடப் போகிறார்கள்'' என்றான்.

"ஐயோ! என்ன கருணை? என்ன கருணை? மகாமண்டலேசுவரர் சத்திரத்து மணியகாரர் பதவிக்குச் சரியான ஆளாகப் பிடித்துத் தான் நியமித்திருக்கிறார்" என்று அழகு காட்டினாள் அவன் மனைவி கோதை நாச்சியார்.

"இதோ பார், தாயே! பரதேவதை! உனக்குக் கோடிப் புண்ணியம் உண்டு. வருகிறவர்களுக்கு முன் என் மானத்தை வாங்காதே. தயவு செய்து உள்ளே போ, கோதை!" என்று அவள் அருகே வந்து நின்று கொண்டு தணிந்த குரலில் கெஞ்சினான் அவன்.

"ஆள் இனம் தெரியாமல் கண்டவர்களுக்கெல்லாம் சத்திரத்தில் தங்க இடம் கொடுக்காதீர்கள். சத்திரத்துப்பொருள்கள் அடிக்கடி மாயமாக மறைந்து விடுகின்றன. களவு போவதற்கு இடம் கொடுப்பது உங்களால் வருகிற வினை



தான்!" என்று உரிமையோடு கணவனை எச்சரித்து விட்டு உட்புறம் இருட்டில் மறைந்தாள் கோதை நாச்சியார்.

"ஐயா! இதுதானே முன் சிறை அறக்கோட்டம்?" உள்ளே செல்லும் மனைவியின் தோற்றத்தைப் பார்த்துக் கொண்டு நின்ற அண்டராதித்த வைணவன் இந்தக் கேள்வியைக் கேட்டுப் பரபரப்படைந்து திரும்பிப் பார்த்தான்.

சத்திரத்து வாசற்படியில் பருத்த தோற்றத்தையுடைய மூன்று மனிதர்கள் நின்று கொண்டிருந்தார்கள். கையிலிருந்த தீப்பந்தத்தை அவர்கள் முகத்துக்கு நேரே பிடித்துப் பார்த்த அண்டராதித்தன், "உங்களுக்கு எந்தத் தேசம்? என்ன காரியமாக இங்கு வந்திருக்கிறீர்கள்?" என்று வினவினான்.

"முதலில் நாங்கள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லுங்கள்!"

அதிகாரம், அல்லது அதையும் மிஞ்சிய கடுமை அவர்களுடைய குரலில் ஒலித்ததைக் கேட்டு அண்டராதித்தன் சிறிது சினமடைந்தான்.

முதலாவதாக அவர்களுடைய தோற்றமே அவன் மனத்தில் நல்ல எண்ணத்தை உண்டாக்கவில்லை. காளி கோவில் பூசாரிகள் உடுத்துக் கொள்வது போன்று இரத்த நிறச் சிவப்புத் துணியில் தலைப்பாகையும், அமைதி இல்லாமல் நாற்புறமும் சுழலும் விழிப் பார்வையுமாகச் சத்திரத்து அதிகாரியான தன்னிடமே அதிகாரம் செய்து கேள்வி கேட்கும் அவர்கள் யாராயிருக்கலாம்? என்று எண்ணியவாறே முகத்தைச் சுளித்து அவர்களைப் பார்த்தான் அவன்.

"அடேடே! இவன் என்ன நம்மை இப்படிக் கடுமையாகப் பார்க்கிறான்? காமனையும், நக்கீரனையும், நெற்றிக் கண்ணால் எரித்து வாட்டிய சிவபெருமான் என்று எண்ணம் போலிருக்கிறது இவனுக்கு!" என்று வந்தவர்களில் ஒருவன் தன்பக்கத்திலிருந்த மற்றொருவனிடம் எகத்தாளமாகக் கேட்டான்.

"அட, அது இல்லை அப்பா! இந்த மனிதன் நம்மைப் பார்த்ததும் ஊமையாகி விட்டான்!"

தன் கேள்விக்குப் பதில் சொல்லாமலே தன்னைப் பற்றித் தன் முன்பே அவர்கள் வாய்க்கு வந்தபடி பேசிக் கொண்டு போவதைக் கண்டு அண்டராதித்தனின் கைகள் துடித்தன. கையிலிருக்கும் தீப்பந்தத்தால் அந்த மூன்று முரடர்களையும் அப்படியே மூக்கு, முகம் பாராமல் வாங்கு வாங்கென்று வாங்கி விடலாமா என்று தோன்றியது.

"மரியாதை தெரியாத மனிதர்களுக்கு இங்கே பதில் சொல்கிற வழக்கம் இல்லை" என்று சுடச்சுடப் பதில் கூறினான் அண்டராதித்தன்.


"ஓகோ! இனிமேல் உங்களிடம்தான் அதைக் கற்றுக் கொள்ள வேண்டும்."

"பண்பாடற்ற தடியர்களுக்கு இந்த நாட்டில் யாரும் எதையும் கற்பிக்க விரும்புவதில்லை."

இப்படியே பேச்சு முற்றியது. அண்டராதித்தன் ஒன்று சொல்ல, அவர்கள் ஒன்று சொல்ல அறக்கோட்டத்து வாசலில் ஒரே கூப்பாடாகி விட்டது.

உள்ளே ஒதுங்கிநின்று இந்தக் கூப்பாட்டைக் கேட்டுக் கொண்டிருந்த அண்டராதித்தனின் மனைவி கோதை நாச்சியார் பொறுமையிழந்து, "அது யார் அங்கே வந்திருக்கிறார்கள்? என்ன கூப்பாடு போட்டுக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று இரைந்து கொண்டே வெளியில் வந்தாள். (தொடரும்)





தேடிவந்த செல்வம்

வெள்ளித்திரை விமரிசனம் எழுதுவதில் ங்கடங்கள்தான் அதிகம் என்பதை எல்லோ நம் அறிவார்கள். நானே என் விமரிசனப் பகுதியில் அதைப் பற்றி எழுதி யிருக்கிறேன். ஆனால் அதில் உள்ள ஒரு பெரிய சௌகரி பத்தை இது வரையில் நான் எழுதியதில்லை. எப்பொழுதும் சௌகரியத்தைப் பற்றிப் பேச வதை விட அசௌகரியத்தைப் பற்றிப் பேச பதில் தானே யாருக்கும் சுவாரஸ்யம் அதிகமா யிருக்கிறது?

அந்தச் சௌகரியம் என்ன தெரியுமா? ஒவ்வொரு வாரமும் விமரிசனத்துக்குத் தலைப்பு தேட வேண்டிய அவசியம் இல்லை அல்லவா? படத்தின் பெயரை விமரிசனத் தின் தலைப்பாக 'டக்' கென்று எடுத்துப் போட்டு விட முடிகிறதே: ஆனால் அந்த ஒரே ஒரு சௌகரியத்தை நினைத்துத்தான் சந் தோஷப்பட வேண்டும். படத்தின் பெயர் புதிது புதிதாக வருவது போல் திரைக்கதை யும் புதிதாக இருந்து விட்டால் விமரிசனமும் புதிதாக எழுதலாம். நடிக, நடிகையர்களும் புதியவர்களாக இருந்து விட் டாலோ கேட்கவேவேண்டாம். "உங்கள் பாடு பரவா யில்லை, ஸார்! புதுப் புதுப் படங்களாக, பொது மக்கள் பார்ப்பதற்கு முன்னதாகவே பார்த்து விடுகிறீர்கள்!" என்று என்னை என் நண்பர்கள் பாராட்டுவதுண்டு. ஆனால் உண் மையில் பார்க்கப் போனால், அதில் ஒரு பெரு மையும் இருப்பதாக எனக்குப் படவில்லை.

நான் சின்னப் பையனா யிருந்த போது எங்கள் வீட்டுக்கு எதிர்வீட்டில் ஒரு ரயில்வே கார்டு குடியிருந்தார். அவர், தம் வேலைக்குப் புறப்பட்டுப் போனால் இரண்டு மூன்று நாட்கள் கழித்துத்தான் வீடு திரும்புவார். ரயில்வே உடுப்புடன் அவர் வேலைக்குப் போவ தைப் பார்க்கும் போது எனக்குப் பெருமை பிடிபடாது. அவர் கையைப் பிடித்துக் கொண்டு வாசல் வரையில் குதித்துக்கொண்டு வருவேன். ஆனால் அவருடைய இளம் மனைவி நீர் மல்கும் கண்களுடன்தான் அவரை அனுப்பி வைப்பாள். அதைப் புரிந்து கொள் ளும் சக்தி அப்போது எனக்கு இருக்கவில்லை. பிரிவுத் துயரைப் பற்றி அப்பொழுது எனக் கென்ன தெரியும்?

படத்தையும் பாராமல், பொது ஜனங் களுக்கு முன்னதாக ஸ்டூடியோவில் படம் பார்ப்பதிலுள்ள சிரமங்களையும் உணராமல், என்னை மட்டும் பார்க்கும் என் நண்பர்களுக் குப் பெருமையாய்த்தான் தோன்றும்.

ஒரு நடிகரே கதாநாயகனாக நடித்திருக்கும் படங்கள் இரண்டு மூன்று வந்து விட்டால் சிரமந்தான். திரைக்கதைகளிலும் அதிக மாறுதல்கள் இருப்பதில்லை யாகையினால், விமரிசனம் எழுதுவதில் மட்டும் என்ன மாறு தலைப் புகுத்திவிட முடியும்?

அரசு பிக்சர்ஸ் தயாரித்திருக்கும் "தேடி வந்த செல்வம்" என்னும் படத்தில் புதிய திரைக்கதையோ, புதிய நடிகர்களோ இல்லை. ஆனால், எஸ். எஸ். ராஜேந்திரனின் உணர்ச்சி மிகுந்த நடிப்பினாலும், ப. நீலகண்டன் செய் திருக்கும் நல்ல டைரக்ஷன் காரணமாகவும் படம் விறுவிறுப்பா யிருக்கிறது.

முருகேசம் என்ற நோயாளி தன் குழந் தையை நாலாயிரம் ரூபாயுடன் நண்பன் அமிர்தலிங்கத்தினிடம் ஒப்படைத்து விட்டு ஆஸ்பத்திரிக்குப் போகிறான். அந்தக் குழந் தைக்குச் சிதம்பரம் என்று பெயரிட்டு அமிர்த லிங்கத்தின் மனைவி பாக்கியம் அருமையோடு வளர்க்கிறாள். இரண்டாண்டுகளுக்குப் பிறகு பாக்கியத்துக்கு ஒரு மகன் (அம்பலம்) பிறக் கிறான். அவன் அயோக்கியன். சிதம்பரத் துக்கும் செண்பகத்துக்கும் இருந்த காதலை அமிர்தலிங்கம் அழிக்க முயல்கிறான். கடைசி யில், பேராசையினால், காலொடிந்து அவஸ் தைப் படுகிறான். பலவிதமான கஷ்டங்களுக் குப் பிறகு சிதம்பரமும் செண்பகமும் ஒன்று சேருகின்றனர். சதிகார அம்பலம் அம்ப லத்தில் நிற்கிறான்! மூடியிருந்த அமிர்த லிங்கத்தின் அகக் கண்கள் திறக்கின்றன. சிதம்பரம் தன் தந்தையுடன் சேர்ந்து அவரது திரண்ட செல்வத்துக்கு உரிமையாளனாகிறான்.

தாந்தன்

வயல், வரப்புகளில் காதலனா கவும், தான் 'அமிர்தலிங்கத் தின் வளர்ப்பு மகனென்று அறிந்து கண்ணீர் விட்டுக் கதறவும், காதலியைப் பிரிய வும், வளர்ப்புத் தந்தையின் செஞ்சோற்றுக்கடன் தீர்க்கக் குத்துச் சண் டையில் வெற்றி பெறவும், கடைசியில் காதலி யுடன் சேரவும் ராஜேந்திரனுக்கு நல்ல வாய்ப் புக்கள் கிடைத்திருக்கின்றன. அவர் அந்த வாய்ப்புக்களை நன்றாய்ப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். தான் அமிர்தலிங்கத்தின்



வளர்ப்பு மகனென்று தெரிந்து அவர் கதறும் காட்சி கல்மனத்தையும் கரையச் செய்கிறது. சண்பகத்தோடு காதல் புரியும் காட்சிகளிலும், கடைசியில் தன் உண்மை வரலாற்றைக் கூறி அவளிடமிருந்து விலகியபோதும் ராஜேந்திரன் நன்றாய் நடித்திருக்கிறார்.

ராஜசுலோசனா செண்பகமாக வந்து இப்படத்தில் காதலிக்கிறார்; கண்ணீர் விடுகிறார்; வீட்டை விட்டு வெளியேறுகிறார்; வெளியூரில் தான் தேடி வந்த செல்வம் கிடைக்காமல் தவிக்கிறார், கணவனுடன் ஒன்று சேருகிறார், கடைசியில். எல்லாக் காட்சிகளிலும் நன்றாய் நடித்திருக்கிறார்.

அமிர்தலிங்கம் மிகவும் முக்கியமான பாத்திரம். அவன் மட்டும் இல்லையென்றால், இந்தப் படத்தில் யாருக்கும் ஒரு தொந்தரவும் இல்லை. பட உலகின் பழம் பெரும் நடிகரான டி. எஸ். பாலையா அந்தப் பாகத்தை ஏற்று மிகவும் திறமையோடு நடிக்கிறார். முகபாவங்களும் பேச்சும் அவர் ஏற்ற பாத்திரத்துக்குப் பெருதவியாயிருக்கின்றன. பேராசை பிடித்த மனிதனாக வந்து தன் குடும்ப வாழ்வையே பாழாக்கிக் கொண்ட அமிர்தலிங்கம் பலவிதங்களிலும் சூடுபட்டு, கால் ஒடிந்து, கழிவிரக்கத்தில் தவித்து, இறுதியில் திருந்துகிறான். இந்தக் கட்டங்களிலெல்லாம் பாலையா நன்றாய் நடிக்கவில்லையென்றால் வேறு யார்தான் நன்றாய் நடித்துவிட முடியும்?

அம்பலமாக நடிக்கும் டி. கே. ராமசந்திரன் கேலித்தனமான நடிப்பில் தேர்ந்து விளங்குகிறார். கடைசியில் திருந்தி விடுகிறார்.

வி. கே. ராமசாமி திரைப்படங்களில் ஏற்கும் பாகம் எல்லோருக்கும் தெரிந்ததுதான். ஒன்று, மகனுடைய விருப்பத்துக்கு மாறாக 'வாள் வா'ளென்று கத்துவார். இல்லையேல், மகளின் விருப்பத்துக்கு எதிராக இரைச்சல் போடுவார். இந்தப் படத்தில், பணத்தாசையால் அயோக்கியன் அம்பலத்துக்குப் பெண் கொடுத்து விட்டுச் சத்தம் போடுகிறார்.



வி. ஆர். ராஜகோபால் 'பிளாட்பார'மாக வந்து அம்பலத்தின் நண்பனாயிருந்து கடைசியில் அவனால் வெறுக்கப்பட்டு, அவனுக்கு எதிராக மாறித் திரைக் கதையின் பல மர்ம முடிச்சுகளை அவிழ்த்து விடுகிறார். பணக்காரர் ரங்கநாதம் பிள்ளையின் மகள் நிம்மியாக வரும் பி. சரோஜா தேவி துள்ளிக் குதிக்கிறார்; கொஞ்சிக் கொஞ்சிப் பேசுகிறார்!

எம். லட்சுமி பிரபா அமிர்தலிங்கத்தின் மனைவியாக வந்து நன்றாய்த் தம் பங்கை நிறைவேற்றியிருக்கிறார்.

டி. பி. முத்துலட்சுமி, கருணாநிதி இருவரும் என்னென்னவோ சாகசங்கள் செய்து, சிரிப்பு மூட்ட முயலுகின்றனர்.

எம். எஸ். சோலைமலை கதை, வசனம் அமைக்கும் பொறுப்பை ஏற்று, மிகவும் சிறப்பாய்ச் செய்திருக்கிறார்.

தஞ்சை ராமையா தாஸ், அ. மருதகாசி, பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம், எம். கே. ஆத்மநாதன் ஆகியவர்கள் பாடல்கள் இயற்றும் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள்.

பொழுது போக்குக்குத் தேவையான பல அம்சங்களைக் கொண்ட படம் ''தேடிவந்த செல்வம்''. ஆனால் படத்தில் சில இடங்களில் பிடிவாதமாகப் பொழுது போக மாட்டேனென்கிறது!



மூன்று நாட்களுக்கு முன், வேர்வைக்குத் தலைநகரமும், உஷ்ணத்துக்கு உடன்பிறந்ததும் ஆன சென்னையை விட்டு வெளியேறி, தென்றலும் சாரலும் கூடிக் குளிர்ந்திருக்கும் குற்றாலத்துக்குப் போவது என்று ஒரு திடீர்த் திட்டம் போட்டேன்.

டெலிபோனில் எழும்பூரைக் கூப்பிட்டேன். ஐந்து நிமிஷம் மணி அடித்துக் கொண்டே இருந்தது. பிறகு பேசும் கருவியை எடுத்து அதன் வாயை ஒரு கையால் பொத்திக் கொண்டேன். அப்பொழுது ஒரு பெண் குரல் வேறு ஒரு குரலோடு வாதாடுவதுகேட்டது. ஆனால் முணுமுணுப்பைத் தவிர வேறொன்றும் கேட்கவில்லை. மற்றவர் இரகசியங்களைக் கேட்பதில் அளவிலா விருப்பமுள்ள எனக்கு இது ஒரு பெரும் குறையாக இருந்தது.

இரண்டாவது ஐந்து நிமிஷங்களும் கழிந்தன. எழும்பூர் சமாதான நிலை அடைந்தவுடன் அந்தப் பெண்மணி என்னிடம் பேசினாள். "எஸ்!" என்றாள் ஆங்கிலத்தில்.

"தென்காசிக்கு ஒரு டிக்கெட் வேண்டும்" என்றேன்.

"என்றைக்கு?" என்று வினவினாள்.

"இன்றைக்கு" என்றேன்.


"இன்னும் பத்து நாட்களுக்கு டிக்கட் கிடையாது!" என்று என்னை உதறிவிட்டு, அவள் டெலிபோனைக் கீழே வைத்து விட்டாள்.

ஆனால் நான் பிறந்ததிலிருந்து ரயிலுடன் பழகினவன். ரயிலுக்கு டிக்கெட் வாங்கினவர் ஜாபிதாவானது வோட்டர் ஜாபிதாவைப் போல் இருப்பவர், இல்லாதவர் எல்லாப் பேரும் கலந்தது என்பதை நான் அறிந்தவன். இரவு ஏழு மணிக்கு எழும்பூர் சென்றேன். ஏழு எட்டு இடங்கள் காலியாக இருந்தன. இருப்பிடத்தில் உட்கார்ந்து கொண்டு எதிர் இடத்தில் பெட்டியை வைத்து விட்டு, மேல் இடத்தில் சில்லறைச் சாமான்களை வைத்து என்னுடைய ஏகாதிபத்தியத்தை அனுபவித்தேன். மதுரை வரையில் தனியே சென்றேன். பேசுவதற்குத் துணை இல்லையே, இன்னும் சிலர் ரயிலில் பிரயாணம் செய்யக் கூடாதா என்று வருத்தமாகக் கூட இருந்தது!

குற்றாலத்தில் என்னுடைய நண்பர் வீட்டுக்குச் சென்று "அருவி எங்கு போகப் போகிறது?" என்று ஆறுதல் செய்து கொண்டு, ஆகாரம் செய்து விட்டு, நன்றாக உறங்கினேன்.

நான் எழுந்திருக்கும் பொழுது மணி நாலு. பொதிய மலையின் அழகுதான்

என்ன? தென்றலோடு கலந்து, 'பாம், பாம்' என்று ஐந்தருவிக்குப் போகும் "கம்பெனி" மோட்டார்களுடைய "கொம்பின்" கூக்குரல். சாரலுக்கு இடையே பெட்ரோல் புகையின் நறுமணம். கோவிலுக்கு எதிரே இருக்கும் சிற்றுண்டிச்சாலைகளிலிருந்து "கம்" என்று புகையுடன் கலந்த பழைய பருப்பு வாசனை. சிறிது தூரத்தில் நாம் எதையெல்லாம் வாங்கி மேலே பூசிக்கொண்டால் மலர் போல் மணக்கலாம், எந்தெந்த மருந்துகளை உட்கொண்டு எந்தெந்த ரோகங்களை அகற்றலாம், கூந்தலுக்குத் தடவுவது என்ன, முகத்துக்கு முக்கியமானது எது, தோலுக்கு எது பதம், பல்வலி வந்தால் என்ன செய்வது, ஜலதோஷத்தால் வீணாக மூக்கடைத்துத் தும்மித் திணறுநீர்கள், பல்பொடி, ஜமக்காளம், பாய், சந்தனாதித் தைலம், நெய், பிஸ்கட், கைத்தறிச் சேலை, ஊதுவத்தி, கதர் நிலையம் என்று பலவாறாக ஒரு ஒலிபெருக்கி அலறிக் கொண்டிருந்தது. அதையும் தாண்டிச் சென்றால் மோட்டாரும் மாடும் குளிக்கும் கால்வாய்; அதற்கப்பால் கசாப்புக் கடை; நடுவில் பைத்தியம் பிடித்தோர் குடியிருக்கும் நிலையம். இதைப் பார்க்காமல் இயற்கையே அழிந்து போன சென்னையில் இருப்பவரை எண்ணி வருந்தினேன்.



கதிரவன் மேற்கு மலையில் மறையும் நேரம். ஓயாது கண்ணாடித் தொழிற்சாலை சிதறினாற்போல், வெண் துளியாய்ப் பிரிந்து விழும் அருவியை நினைத்து ஆனந்த வெள்ளத்தில் முழங்கால் வரை இறங்கி நின்றேன். அப்பொழுது டாக்டருடனும் சர்மாவுடனும் எனது நண்பர் வந்தார். நால்வரும் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு மூன்றாவது தரம் காப்பியைக் குடித்தோம். எனது நண்பர் என்னைப் போல் சென்னையை விட்டு ஓடிவந்தவர். டாக்டர் மதுரைவாசி. சர்மா தஞ்சாவூரில் பழைய மராட்டிக் குலத்தைச் சேர்ந்தவர்; சென்னையில் நகை வியாபாரி. பல மருந்துகளைத் தினந்தோறும் சாப்பிட்டு உடம்பைப் பாதுகாத்து வருகிறவர். அப்பொழுதுதான் கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் இம் மூன்றையும் சேர்த்துப் பொடி செய்து இரவில் உட்கொண்டால் வரும் நலத்தையும், கலகலப்பையும் பற்றி வியாக்கியானம் செய்து கொண்டிருந்தார். "அதைவிடச் சமீபத்தில் பம்பாயிலிருந்து 'பியாஸ்குல்' என்று ஒரு லேகியம் வந்திருக்கிறது. வாயுவுக்கு விரோதி என்றால் அதைத்தான் சொல்ல வேண்டும்" என்று மொழிந்து விட்டுப் பெட்டியை எடுப்பதற்கு அவர் உள்ளே சென்றார்.

"அருவிக்குப் போவோமே?" என்றேன் மெதுவாக.

"என்ன அருவி வேண்டியிருக்கிறது? சென்ற வருஷம் ஒரு நாள் நான் பாபநாசத்துக்குப் போய்க் குளித்தேன். குளி என்றால் அதுதான்" என்றார் டாக்டர்.

"பாபநாசத்துக்குப் போகலாமே!" என்றார் என் நண்பர்.

"இருட்டி விட்டதே!" என்றேன்.

"அதனால் என்ன? எனக்கு வழி தெரியும்" என்றார் டாக்டர்.

சர்மா கலகலப்பு மருந்துடன் வெளியே வந்தார். பாபநாசம் வருவதற்கு அவர் தயாராயில்லை. அதை நேரிடையாகச் சொல்லாமல், "மீன் கடிக்கும்" என்றார்.

"பாபநாசம் மீன் அழுக்கை எடுக்கும்" என்று மறுத்தார் டாக்டர்.

"எனக்கு நீந்தத் தெரியாது" என்றார்.

"இடுப்புக்கு மேல் நீர் கிடையாது" என்றார் டாக்டர்.

"பாறை வழுக்கும்" என்றார் சர்மா.

"மணல் பாய்ந்த இடமாயிற்றே" என்றார் டாக்டர்.

"காலையிலிருந்து ஒரே தும்மல்" என்றார் சர்மா.

"தும்மலுக்கு அருவியில் கல்லடி படுவதை விட மூங்கி நீராடுவதுதான் மருந்து" என்றார் டாக்டர்.

சர்மா திகைத்தார். நடுவில் எப்படியாவது இறக்க வேண்டியதுதானே என்று தம்மைத் தேற்றிக் கொண்டு தாமும் வருவதாகச் சம்மதித்தார்.

வழியில் தென்காசியில் தேரோட்டம். பெரிய தேர் முன்னிலையில் ஒரு நாதஸ்வரம், ஒரு ஒத்து, ஒரு ஜால்ரா, ஒரு தவுல் ஆக நாலு பேர்கள். தேர் மீது கடவுளும் பூசாரியும் இருவர். நடுத்தெருவில் நிற்கும் தேருக்கு முன் வீதி முடியத் தரையில் கிடக்கும் தேர் வடம். வேறு ஈ. காக்காய் கிடையாது. வண்டியை நிறுத்தி, ''ஏன் இந்த வேலைநிறுத்தம்?'' என்று ஒரு வீட்டுக்காரரை வினவினேன்.

''ஒன்றும் இல்லை. ஔரங்கசீப் சுப்ரமணியன் இந்த ஊர் சினிமாக் கொட்டகைக்கு வந்திருக்கிறார். அவரைப் பார்க்க அனைவரும் போயிருக்கிறார்கள். அவர் போனதும் தேர் இழுப்பதற்குப் பக்தர்கள் அனைவரும் திரும்புவார்கள்'' என்று கூறினார்.

கடவுளின் கதி இப்படி ஆயிற்றே என்று வருந்திக் கொண்டு, பாபநாசம் போனோம். போகும் வழியெல்லாம் சர்மாவுக்கு டாக்டர் தைரியம் கூறிக் கொண்டு வந்தார். டாக்டருக்கு அம்பா சமுத்திரம் சொந்த ஊர். ஒவ்வொரு இடமும் அவருக்கு நன்றாகத் தெரியும்.

''இந்த இடத்தில் கொள்ளைக்காரர்கள் அதிகம். ஒருவன் சீட்டி அடிப்பான். ஒரு மைலுக்கு அப்பால் சிலர் வந்து மறிப்பார்கள். கொலைக்குக் கூட அவர்கள் அஞ்ச மாட்டார்கள்'' என்றார் டாக்டர்.

''வண்டியை நிறுத்தவே கூடாது. என்ன ஆனாலும் சரி'' என்றார் சர்மா.

இந்த ஆறுதல் மொழிகள் முடிந்த சில நிமிஷங்களுக்கெல்லாம் ஒரு சிறிய கிராமத்தைத் தாண்டினோம். கிராமத்துக்கு வெளியே வண்டி சென்றதும் இரண்டு கட்டைவண்டிகளைப் பாதைக்குக் குறுக்கே வைத்திருப்பதைக் கண்டோம். டிரைவர் காரின் வேகத்தை மெதுவாகக் குறைத்தான்.

''ஓட்டு, ஓட்டு வேகமாக'' என்று அவசரப்படுத்தினார் சர்மா.

''இந்தப் பக்கத்துத் தேவர்கள் எல்லாம் எனக்குத் தெரிந்தவர்கள். அப்படியே ஏதாவது பறித்துக் கொண்டு போனாலும் மூத்துத் தேவனிடம் சொல்லித் திரும்ப வாங்கி விடுவோம். ஃ யத்துக்கு மருந்தெல்லாம் கையிலேயே இருக்கிறது'' என்றார் டாக்டர்.

இதற்குள் குறுக்கே கிடக்கும் வண்டியின் அருகில் வந்து கார் நின்று விட்டது. திடீரென்று பத்துப் பதினைந்து பேர்கள் ஆண், பெண், சிறுவர் உள்பட எங்களைச் சூழ்ந்து கொண்டார்கள்.

''நிறுத்து மோட்டாரை!'' என்ற சத்தம் கேட்டது. இருவர், முன் சன்னல் வழியாகத் தலையை உள்ளே விட்டார்கள். ஒருவர் பின் கதவைத் திறந்தார்.

''நீங்கள் தான் நடிகர் ஔரங்கசீப் சுப்பிரமணியமா?'' என்று கேட்டாள் ஒரு பெண் பணிவுடன்.


''இல்லையே?'' என்றார் டாக்டர், பரிதாபத்துடன்.

''இந்த வண்டிலெ இல்லேடா'' என்றான் ஒரு சிறுவன், வருந்திய குரலில்.

''பாட்டிக்குத்தான் கஷ்டம். பார்க்கணும், பார்க்கணும் என்றிருந்தாள்'' என்றான் மற்றொருவன்.

''வண்டியை நகர்த்தி வையுங்கள். எங்களுக்குப் போக வேண்டும்'' என்று கூறினார் டாக்டர்.

வண்டி ஓரத்தில் இழுத்து வைக்கப் பட்டது. ஆனால் வண்டியில் பின்



''ஸீட்''டில் அமர்ந்திருந்த சர்மாவைக் காணவில்லை.

''சர்மா எங்கே?'' என்று கேட்டார் என் நண்பர்.

''திருடர்கள் போய் விட்டார்களா?'' என்றார் கூனிக் குறுகிக் குலை நடுக்கத்துடன் படுத்திருந்த சர்மா.

''போய் விட்டார்கள்'' என்றேன்.

சர்மா எழுந்து தரையிலேயே உட்கார்ந்து கொண்டார். ஆனால் டாக்டர் நல்ல வேடிக்கை மனிதர். சிறிது தூரம் சென்றதும் அங்கே ஆஸ்பத்திரியொன்றைக் கண்டோம்.

''நான் முதலில் இங்குதான் வேலை செய்தேன். நல்ல ஆஸ்பத்திரி. பக்கத்திலேயே சுடுகாடு'' என்றார்.

நாங்கள் ஹாஸ்யத்தை உட்கொண்டு பலமாக நகைத்தோம். ''ஹா! ஹா!'' என்றார் சர்மாவும், கிணற்றுக்குள் இருந்தாற்போல்.

ஒரு மணியாகக் கார் போய்க் கொண்டிருந்தும் பாபநாசம் வந்தபாடில்லை. வண்டி ஒரு பாலத்தின் மீது சென்றது.

''போன வாரம்தான் ஒரு கார் இங்கு விழுந்தது. அதில் ஐந்து பேர்கள் கோவிந்தா!'' என்றார் டாக்டர்.

"எங்கே?" என்றேன் நான்.

"எனக்குப் பார்க்க வேண்டாம்" என்றார் சர்மா.

பாபநாசம் வந்து சேர்ந்தோம். "கோவில் படித்துறையில் குளிக்க வேண்டாம். அங்கே ஒரே அழுக்கு. மேலே ஒரு இடம் இருக்கிறது. அதைப் போல் பூலோகத்திலேயே நீராடுவதற்கு இடம் கிடையாது" என்றார் டாக்டர்.

"நான் படித்துறையிலேயே ஸ்நானம் செய்கிறேன்" என்றார் சர்மா.

"நான் இருக்கிறேன், உங்களுக்கென்ன பயம்?" என்று சொன்னார் டாக்டர்.

கார் ஒரு காட்டுப் பாதையில் போயிற்று. ஓரிடத்தில் 'டபார்' என்று அடித்துக்கொண்டது. இருள் முற்றியது.

"இவ்விடங்களில் பாம்பு அதிகம்" என்றார் டாக்டர்.

"பா ஆம்பு" என்றுகூடச் சொன்னார் சர்மா. அதற்கு மேல் அவருக்கு நா எழவில்லை.

ஓரிடத்தில் வண்டியை நிறுத்தினோம். "உங்களிடம் 'டார்ச்' இருக்கிறதா?" என்று கேட்டார் டாக்டர்.

"இல்லை" என்றோம்.

"பரவாயில்லை. எனக்கு வழி தெரியும்" என்று ஒருவர் பின் ஒருவராகச் சங்கிலி கோத்துக் கொண்டு, ஆங்காங்கு நின்று காலில் இருந்து நெருஞ்சிமுள்ளை எடுத்து எறிந்துகொண்டு ஆற்றை அடைந்தோம். சர்மா, தாம் கரையில் இருந்து கொண்டே தலையில் தண்ணீரை விட்டுக் கொள்வதாகச் சொன்னார். டாக்டர் இதற்குச் சம்மதிக்கவில்லை. "ஜலதோஷம் போக வேண்டாமா?" என்று கேட்டார்.

முதலில் டாக்டர் நீரில் இறங்கினார். பின் நானும் என் நண்பரும் ஆளுக்கு ஒருவராகச் சர்மாவைப் பிடித்துக் கொண்டு இறங்கினோம். திடீரென்று ஆகாயத்தில் பாய்ந்தார் சர்மா. கையை உதறிவிட்டுக் கரையை நோக்கித் தாவினார். நீரில் பொத்தென்று விழுந்தார். தூக்கி நிறுத்தி என்னவென்று கேட்டோம். "திமிங்கிலம், முதலை!" என்றார்.

"அழுக்கெடுக்கும் மீனுக்கு வேண்டியே இங்கே எல்லாரும் வந்து சேருவார்கள். இதற்கு என்ன பயம்?" என்றார் டாக்டர்.

திரும்பவும் சர்மாவைப் பிடித்துக் கொண்டு நீரில் இறங்கினோம். மணல் என்று கால் வைத்த இடத்தில் பாசி மூடிய பாறை. ஒருவர் நிற்பதும் மற்றொருவர் விழுவதுமாய்க் கூத்தாடிக் கொண்டிருந்தோம். மலேரியா வந்தவன்போல் சர்மாவின் உடம்பு உதறிக் கொண்டிருந்தது. ஒரு முழுக்குப்போட்டார். "போதும், போகலாம்" என்றார்.



பின்னால் வருபவர்: ஏன் சார், இப்பொழுதெல்லாம் ரிக்ஷாவில் போவதில்லை?

பருத்தவர்: ரிக்ஷாவில் இரண்டு பேர்கள் போகக்கூடாது என்று செய்துவிட்டார்களே, சார்!

"இங்கே வாருங்கள், கரும்புச் சாறு போல் இருக்கிறது ஜலம்!" என்ற டாக்டர் குரல் கேட்டது. இருட்டில் ஆள் தெரியவில்லை. மூவரும் குரலை நோக்கிக் கால் வைத்தோம். சில இடங்களில் சர்மா நடந்தார். சில இடங்களில் எங்களைப் பிடித்துக் கொண்டு தொங்கினார். மணல் இருந்த இடத்தில் ஒரு ஒழுக்கு. இரண்டு பாறைகளுக்கு நடுவே டாக்டர் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அணைக்கட்டைப்போல் குறுக்கே படுத்திருந்தார். எங்களைக் கண்டு எழுந்து உட்கார்ந்தார்.

"ஸ்நானம் எப்படி?" என்று கேட்டார் சர்மாவிடம்.

"ஸ்நா... ன...ம்" என்றார் சர்மா நடுங்கிக் கொண்டே.

"ஜில்லென்று இருக்கிறது!" என்றார் டாக்டர்.

"சர்மாவுக்கு ஜன்னியே கண்டிருக்கிறது!" என்றேன் நான்.

மெதுவாகக் கரைப் பக்கம் திரும்பினோம். திரும்பும்பொழுது சர்மாவினுடைய கால் அவர் வசம் இல்லை. தூக்கிக் கொண்டுதான் வந்தோம்.

"பிரமாதமான ஸ்நானம்" என்றார் என் நண்பர்.

"இனிமேல் இந்த உயிர் உள்ளவரையிலும், கார்ப்பரேஷன் குழாயைத் தவிர வேறு எவ்விடத்திலும் நான் ஸ்நானம் செய்யப் போவதில்லை" என்றார் சர்மா.

"இதற்குமேல் முண்டன் துரை என்ற இடம் இருக்கிறது. அங்கே ஜலம் இன்னும் 'ஜில்' என்று இருக்கும்" என்றார் டாக்டர் மிகுந்த உற்சாகத்துடன்.




ஒன்றல்ல 17
மயக்கும் மணங்கள்
உங்களுக்கு கிறுகிறுப்பும்
புளகாங்கிதமும் தரும்!
PALMOLIVE
Talcum Powder
DE LUXE
வெறியூட்டும் 17 செண்டுகளின்
அற்புதக் கலவை சேர்ந்த பாமாலிவ்
டால்கம் டீ லக்ஸின் நறுமணம்
உங்களை மகிழ்வித்து புளகாங்கிதம்
அடையச் செய்யும்...
மணிக்கணக்காக
உங்களுக்கு குளுமையும்
புத்துணர்ச்சியும்
அளிக்கும்!
பாமாலிவ்
டால்கம் டீ லக்ஸ்
உண்மையில் உயர்ந்த டால்க்...
வீட்டிலுள்ள அனைவருடைய சுகத்திற்கும்
சுகாதாரத்திற்கும்... குழந்தைக்குங்கூட!
PTD/G/2



இருமல்!
இதமளிக்கும்
நிரந்தரமான குணத்திற்கு
COUGH SYRUP
பி. ஐ. காப் ஸிரப்
பெங்கால் இம்யூனிடி



புதுமை பெறுக!
இதம் பெறுக!
நளினமாய் இருங்கள்!
மணமுள்ள சார்மிஸ் டால்கம் பௌடர் உபயோகித்த பின் நீங்கள் பெறும் உணர்ச்சிகள் இவை. சார்மிஸ் குளுமையும் புத்துணர்ச்சியும் அளிக்கிறது ... உன்னத மனோ ரம்மிய மணம் கொண்டது.
CHARMIS
சார்மிஸ்
டால்கம் பவுடர்
உன்னத, மனோரம்மிய மணத்துடன்.



நரஸூ காபி
அருந்தி அதன் பிரத்யேகமான ருசியை அனுபவியுங்கள்
நரஸூஸ்
மான்யுபாக்சரிங்
கோ. பிரைவேட் லிட்.
சேலம் & சென்னை

கூஞ் கரைந்தது!

கமல் ஜோஷி   தமிழாக்கம்: ரா.வீ

"கிட்டண்ணா! கிட்டண்ணா!"

நள்ளிரவு நேரம். இருள் சூழ்ந்த அறை. ஒரே படுக்கையில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தார்கள் ராஜுவும் கிட்டனும். ராஜுவுக்கு ஐந்து வயதிருக்கும். கிட்டனுக்கு ஏழு இருக்கும். அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்த அவர்களது செவியிலே, புது மாதிரியான குரல் ஒன்று விழவே, கண் விழித்துக் கொண்டார்கள். செவியிலே விழுந்த அந்தக் குரல் உள்ளத்தோடு உடலையும் தாக்கியது.

ராஜு மெதுவாகத் தமையனைக் கூப்பிட்டான். கிட்டனும் குரலைக் கம்மிப்படுத்திக் கொண்டு, "ஏன்?" என்று கேட்டான்.


"இது என்ன சத்தம்?"

"உஷ்! சத்தம் போட்டுப் பேசாதே. அம்மா அழுது கொண்டிருக்கிறாள்!"

இருளில் ராஜுவின் விழிகள் வியப்பு மேலிட்டால் விரிந்தன.

இதென்ன? பெரியவர்கள் அழுவதில்லையே! குழந்தைகள்தானே அழுவார்கள்!

குஞ்சு மனம் குறுகுறுத்தது.



"ஆமாம், அம்மா அழுவானேன்?" என்று கேட்டான்.

"அண்ணா சதீஷ் செத்துப் போய் விட்டான். அதனால்தான்..." என்றான் கிட்டன்.

விந்தையிலும் விந்தையாயிருக்கிறதே!

ராஜுவின் குழந்தை உள்ளத்திலே பனி மூட்டம் இட்டது. நாற்புறமும் இருள் மண்டிக் கிடந்தது போலவே, அவனுடைய குழந்தை உள்ளத்தையும் கரிய இருள் கப்பிக் கொண்டது. கூரிய கத்தியென அன்னையின் அழுகுரல் இருளைக் கிழித்துக்கொண்டு வெளிப்பட்டது. அறியவொண்ணாத ரகசியத்தை அறிய முயல்வது போல், சிறுவனின் பெரிய விழிகள் விரிந்திருந்தன.

சாவு! அழுகை! அமைதி!

சில நாட்களுக்கு முன் அண்ணன் சதீஷ் நோய்வாய்ப்பட்டான்; படுத்த படுக்கையாளன்: சண்டை-மண்டை, ஆட்டம் பாட்டம், அழுகை-சிரிப்பு எல்லாவற்றையும் ஒரு மூலையில் மூட்டை கட்டி வைத்துவிட்டுப் படுக்கையில் விழித்த நாராகக் கிடந்தான். அம்மா அவன் தலைமாட்டில் உட்கார்ந்து இரவு பகல் கண் கொட்டாமல் கவனித்து வந்தாள். அவன் அருகில் மற்றவர்களை அண்ட விடுவதேயில்லை. சதீஷுக்குச் சிசுருஷை செய்வதில் அவள் ஈடுபட்டுவிடவே, அம்மாவின் பக்கத்திலேயே படுத்துப் பழகிய ராஜுவுக்கும் கிட்டனுக்கும் சிரமமாய்ப் போய் விட்டது. அம்மாவைப் பிரிந்து தனியாகப் படுத்து உறங்கும்படியாகிவிட்டது.

ஆரம்பத்தில் ராஜுவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அம்மாவின் செய்கை அவனுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை.

அவன்தானே வயதில் சிறியவன்! அவனுக்குத்தானே அம்மா சொந்தம்! அவனிடமிருந்து அம்மாவைப் பிரிக்க இந்தச் சதீஷ் யார்? அவனுக்குத்தான் வயது ஏகமாக ஆ விட்டதே! அப்படியிருக்க அவன் ஏன்

அம்மாவை அவனிடமிருந்து பிரித்துப் பிடுங்கிக் கொள்ளப் பார்க்கிறான்?

இப்படியெல்லாம் எண்ணிய பொழுதிலும், ஏனோ தெரியவில்லை, அந்தப் பிஞ்சு உள்ளத்திலே சதீஷை நினைத்தால், தன்னையும் மீறி இரக்கமே பிறந்தது.

ஆம், உடம்புக்கு வந்து விட்டால், பிறகு பெரும் பாடுதான்!

பூவுள்ளம் இதை நன்கு அறிந்திருந்தது.

மூன்று நாட்கள் அம்மா சதீஷிடமே இருந்தாள். அந்தண்டை இந்தண்டை அசையவில்லை. பாவம், சதீஷ் அண்ணாவின் முகம் ஒரேயடியாக உலர்ந்து வற்றி ஓடாகப் போய் விட்டது; வெளிறிப் போய் விட்டது!

ஆனால் உடம்புக்கு வந்தால் மனிதன் செத்துப் போவான் என்பதை அந்தப் பாலகன் புரிந்து கொள்ளவில்லை.

சாவு என்றால் என்ன? மனிதன் எதற்காகச் சாகிறான்? அவன் செத்தால் அழ வேண்டுமா? அம்மாவை யாரும் அடிக்கவில்லை, அதட்டவில்லை. அப்படியிருக்கும்பொழுது அம்மா ஏன் இப்படி அழுகிறாள்?

இந்தக் கேள்வி அவன் மனத்தின் அடித்தலத்தில் அடிக்கடி எழுந்தது. ஆனால் யாரிடமும் கேட்கத்தான் தோன்றவில்லை. இந்த இருளில் அம்மாவின் அழுகைக் குரலைத் தவிர வேறு எந்த ஒலிக்கும் இடமே இல்லையோ?

ராஜுவினால் அதற்குமேலும் பேசாமல் இருக்க முடியவில்லை. பொதுவாகக் கிட்டனைக் கூப்பிட்டு, "ஆமாம்! செத்துப் போனால் அழுவானேன்?" என்று கேட்டான்.

"உனக்குத் தெரியாது? செத்துப் போவதென்றால் ஒரேயடியாகப் போய் விடுவது என்று அர்த்தம். சதீஷ் அண்ணாவும் இனிமேல் திரும்பி வரமாட்டான்!"

"என்ன? திரும்பியே வர மாட்டானா?"

"ஆமாம், பகவான் அழைத்துக் கொண்டால் யாருமே திரும்பி வரமாட்டார்கள்."

அழத் தெரியாவிட்டாலும், மரணத்தைப் பொறுமையுடன் ஏற்றுக் கொண்டிட நீர் வேண்டியிருக்கிறது!

ராஜு ஒருவாறு புரிந்து கொண்டான். எனவே, பேச்சை நிறுத்திக் கொண்டான். ஆனால், அவன் மனம்....?

சதீஷ் அண்ணாவைப் பகவான் அழைத்துக் கொண்டு விட்டாராமே! அப்படியிருக்கும் பொழுது பகவானை நல்லவர் என்று ஏன் எல்லோரும் சொல்கிறார்கள்? அம்மா கூடத் தினம் தினம் இந்தப் பொல்லாத பகவானுக்குப் பூஜை செய்கிறாளே!

சிந்தனையில் ராஜு தூங்கி விட்டான். சதீஷ் அண்ணாவை எப்பொழுது எடுத்துச் சென்றார்கள் என்பது அவனுக்குத் தெரியாது. காலையில் கண் விழித்ததும், அவன் சதீஷ் அண்ணா இல்லாததைக் கண்டான்; பகவான் எடுத்துச் சென்று விட்டார் என்று தீர்மானித்துக் கொண்டான்.

ஆயினும் அவன் மனத்தின் ஆழத்தில் ஏதோ ஒன்று 'சதீஷ் என்றைக்காவது ஒரு நாள் திரும்பி வந்து விடுவான்' என்று கூறிக் கொண்டே யிருந்தது.

ராஜுவின் காற்றாடிக்கு ஒருநாள் கயிறு அறுந்து விட்டது. எல்லாப் பையன்களும் காற்றாடி விடும்பொழுது அவன் மட்டும் அறுந்த காற்றாடியை வைத்துக் கொண்டிருந்தால்...? அவனுக்கு அழுகை வந்து விட்டது. உரக்க அழத் தொடங்கிவிட்டான். அண்ணன் சதீஷுக்கு அவன் அழுவதைக் காணச் சகிக்கவில்லை. தனது காற்றாடியை அவனுக்குக் கொடுத்து விட்டான். அது மட்டுமா? "உனக்கு இன்னும் நிறையக் காற்றாடி வாங்கித் தருகிறேன்" என்று ஆசையோடு கூறிச் சமாதானம் வேறு செய்தான்!

அப்படிச் சொல்லிப் போனவன் திரும்பி வரவேமாட்டான் என்றால், வேறு யார் அவனுக்குக் காற்றாடி வாங்கி வந்து தருவார்கள்? அதனால்தானோ என்னவோ அவன் மனம், 'வருவான், வருவான்' என்று கூறிக் கொண்டிருந்தது. அதோடு அம்மா வேறு விடாமல் பகவானைப் பூஜித்துக் கொண்டு வந்தாள்! சதீஷைத் திரும்பி வராத இடத்துக்கு எடுத்துச்சென்று விட்டாரே என்பதற்காகக்கோபித்துக் கொண்டு பகவானை வழிபடுவதை அவள் நிறுத்தி விடவில்லை. அதனால் பகவான் கட்டாயம் அண்ணனைத் திருப்பித் தந்து விடுவார் என்றே அவன் எண்ணினான்.

இப்படி எண்ணிய ராஜு அருவமான ஆண்டவனிடம் பல முறைகள் சதீஷைத் திருப்பித் தந்துவிடுமாறு முறையிட்டான்.

எதற்காக முறையிட்டான்? அண்ணன் வந்து காற்றாடி வாங்கித் தரவேண்டுமே என்பதற்காகவா? அண்ணன் இல்லாததால் பொழுது போவது சிரமமாயிருக்கிறதே என்பதற்காகவா? பின் எதற்காக? அம்மா அழுவதைக் கண்டால், அவனுக்குத் துயரம் தொண்டையை அடைத்தது. அவள் விசித்து அழும் பொழுது அவள் முகமும் கோணியது. அந்தனை அழுகையிலும் அவள் தன் இரு செல்வங்களையும் சீராட்டிப் பாராட்டத்தான் செய்தாள். என்னதான் முயன்றாலும் அந்தப் பாழும் அழுகை ஒழிந்தால்தானே?

மரணத்தின் ரகசியத்தை ராஜுவினால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் அன்னையின் உள்ளத்திலே பீறிட்டெழும் வேதனையை ஒருவாறு உணர முடிந்தது. அந்த வேதனை பேரலையாக உருப்பெற்று அவனது பிஞ்சு உள்ளத்தில் மோதி ஊமைக் காயத்தை உண்டாக்கியது. அது பொறுக்கமாட்டாமல் இரு கைகளையும் கூப்பி, "ஆண்டவனே! சதீஷ் அண்ணாவை அம்மாவுக்காகவாவது திருப்பித் தந்து விடேன்!" என்று வேண்டினான்.

ஆயினும் அவனுக்கு அம்மாவைப் போல் அழுகை வரவில்லை; வரவே இல்லை.

அக்கம் பக்கத்துப் பெண்கள் துக்கம் விசாரிக்க அவனது அம்மாவிடம் வருவார்கள். அம்மாவோடு சேர்ந்து கண்ணீரைப் பெருக்கி அண்ணன் சதீஷைப் பற்றிப் பேசுவார்கள். 'அந்த மாதிரி நல்ல பிள்ளையை நான் பார்த்ததே யில்லை. ஆயிரத்தில் ஒன்று, லட்சத்தில் ஒன்று, ஏன் கோடியில் ஒன்று கூடக் கிடைக்காது அப்படிப்பட்ட பிள்ளை!' என்பார்கள். அவர்களது அந்தப் பேச்சைக் கேட்டு அம்மாவின் கண்கள் குளம் கட்டும்.

ராஜுவினால் அதையெல்லாம் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்க முடியாது. எழுந்து எங்கேயாவது ஓடி விடுவான். அழுகையை வருவித்துக் கொள்ள முயலுவான், ஆனால்

அழுகை வராது: அதற்குப் பதிலாகச் சதீஷின் நினைவு வந்துவிடும்.

ஒரு முறை அவன் அம்மாவிடம் சதீஷைப் பற்றிக் குறை கூறி அவனுக்கு அடிகூட வாங்கி வைத்திருக்கிறான். பாவம், கோள் சொல்லி அவனுக்கு அடி வாங்கி வைத்தது கொஞ்சம் கூட நியாயமில்லை. சதீஷ் கோபத்தில் படத்தைக் கிழித்துப் போட்டு விட்டான் என்பது உண்மைதான். ஆனால் அது அவனுடைய தப்பு மட்டுமா? அதில் ராஜுவினுடைய தப்பும் இருக்கத்தானே செய்தது! அவன் தானே முதலில் அண்ணனைக் கழுதை என்று திட்டினான்! வயதில் பெரியவனான அண்ணனைப் போய் அவன் அப்படித் திட்டலாமா?

நினைத்துப் பார்த்தால் இன்றைக்குத்தான் நடந்தாற் போலிருக்கிறது. 'தனக்கு இரண்டு சாக்லேட்டு தருமாறு அண்ணன் சதீஷ் அவனை எப்படி யெல்லாம் கெஞ்சினான்! அவன் கொஞ்சமாவது லட்சியம் செய்தானா? ஒரு சாக்லேட்டுக்கு மேல் கொடுத்தானா?'

இம்மாதிரி எத்தனை எத்தனையோ விஷயங்கள் ராஜுவின் நினைவுப் படலத்திலே எழுந்தன. சதீஷைப் பற்றி இப்பொழுது நினைத்துப் பார்த்தால் அவன் உள்ளத்திலே சொல்ல முடியாத ஒரு வேதனை எழுந்து, அவனைக் கசக்கி எடுத்தது. 'இனிமேல் சதீஷ் அண்ணன் திரும்பி வந்துவிட்டால் அவனோடு சண்டையே பிடிக்கக் கூடாது' என்று மனத்துள் உறுதி பூண்டான். ஆயினும் அறியாத பிஞ்சு உள்ளத்திலே துயரத்தின் துடிப்பு எழவில்லை; கண்களிலே நீர் கரை கட்டவில்லை.

என்றைக்காவது அம்மாவின் கண்களில் நீர்ப் பெருக்கு நிற்கவே இல்லை யென்றால், அத்தையோ பாட்டியோ, அவனையாவது கிட்டனையாவது தூக்கிக் கொண்டு போய் அவளது மடியிலே உட்கார வைப்பார்கள். அதற்காக அம்மாவின் கண்ணீர் குறைவதில்லை; கூடத்தான் செய்யும். அப்பொழுது அவள் தன்னை அடக்கிக் கொள்ளப் படும் பாட்டைச் சொல்லி முடியாது. ராஜுவுக்கு அதைக் காணும்பொழுது, சாத்திய அறையிலே, புகை மூட்டத்துக்கு மத்தியிலே மூச்சுத் திணற நிற்பது போலும், கதவு திறக்கத் திறக்க, திறக்க முடியாமல் அறைந்து சாத்தப் பட்டிருப்பது போலும் தோன்றும்.

சதீஷின் விளையாட்டுச் சாமான்கள், ஸ்லேட்டு-புத்தகங்கள், கால் சட்டை-கைச் சட்டைகள் எல்லாவற்றையும் ஒரு மூட்டையாகக் கட்டி அம்மா எங்கேயோ வைத்து விட்டாள். ராஜுவுக்கு இந்த விஷயம் தெரியாது. 'சதீஷ் அண்ணனின் விளையாட்டுச் சாமான்கள், சட்டை-துணிமணிகள் புத்தகங்கள் எல்லாம் எங்கே போய்விட்டன?' என்ற நினைப்பு சிற்சில சமயங்களில் எழும். யோசித்து யோசித்துப் பார்ப்பான், 'எங்கே போய் விட்டன?' என்று! என்ன யோசித்தும் விளங்காது. இதென்ன ஜகஜ்ஜால மாயப் புரட்டோ, யார் கண்டார்கள்?

இரவு நேரங்களில், தூங்கும்பொழுது சிற்சில சமயம் அவனை அவளது அம்மா அருகில் இழுத்து அணைத்துக் கொள்வாள். ராஜு துணுக்குற்று விழித்துக் கொள்வான். ஆனால் வாய் திறந்து வார்த்தையாட மாட்டான்; வியப்புடன் அன்னையை நோக்குவான்.

ஒருவேளை சதீஷ் வந்து விட்டானோ?

அட! அம்மாவுக்கு அருகில் இருக்கிறான் போலிருக்கிறதே!

இதென்ன வேடிக்கை! அன்னையின் உடலிலிருந்து வந்தவன் அன்னையின் உடலுக்குள்ளேயே சென்று விட்டானே!

அதோ, அவனைப் பெயர் சொல்லிக் கூப்பிடுவது யார்? அண்ணன் தானோ?

'ராஜு! தெரியுமா, சமாசாரம்? நான் பகவானிடம் போகவில்லை. நமது அம்மாவிடமே திரும்பி வந்து விட்டேன்!'

சந்தேகமில்லை; சதீஷேதான்!

ராஜுவைக் கூப்பிட்டுச் சதீஷ் இன்னும் என்னவோ சொல்லுகிறானே!

'ராஜு, என்னோடு வா! எத்தனை ஆனந்தமாகப் பொழுது போக்கலாம், தெரி----?'



போகப் போக......இதென்ன வேடிக்கை! ராஜுவே அல்லவா சதீஷாகிவிட்டாற் போலிருக்கிறது! ஆழ் கடல், அலைகளின் சீற்றம். எட்டிய தூரம்வரை இடைவெளியே இல்லாத நீர்க் காடு. மங்கலான வெளிச்சம். அன்னையின் மடியைப் போன்று அழகான, மென்மையே உருவான, அவன் அடிக்கும் அவ்வளவு கொட்டத்தையும் தாங்கக் கூடிய, எல்லை காண இயலாத நீர்ப்பரப்பில் ராஜு மட்டுமே தனியாக மூழ்கிக் கொண்டிருக்கிறான். அக்கம் பக்கத்தில் அவன் பார்வை செல்லும் தூரம் வரை யாருமே இல்லை. நாற்புறமும் நீள் அமைதி நிலவி யிருக்கிறது. ஆனால் ராஜுவுக்குக் கொஞ்சம் கூடப் பயம் உண்டாகவில்லை. அன்னையின் அரவணைப்பிலே இடம் பொத்திக் கொள்ளப் பாயும் பாலகனைப் போல், தனது இரு கரங்களையும் விரித்து ஆத்ம சமர்ப்பணம் செய்ய முற்பட்டு விட்டான்! அவன் அப்

படித் தாவியது அன்னையின் மடிக்கா? இல்லை, இல்லை; அதைக் காட்டிலும் அந்தரங்கமான இடத்துக்கு. மேலே மங்கலான ஒளி—அன்னையின் அன்பு நிறைந்த முத்தம் போன்று எப்படி இனிக்கிறது!

அன்னையின் அரவணைப்புக்கு ஈடான நீர் நிலை; அன்னையின் அன்பு முத்தத்துக்கு இணையான ஒளி—இவ்விரண்டுக்கும் இடையே அவன் தன் நிலை இழந்து கொண்டிருந்தான்!

"சதீஷ், சதீஷ்!"

"அப்பப்பா! எதற்காக என்னைத் துன்புறுத்துகிறாய்? இனி நான் நினைத்தாலும் திரும்பி வரமுடியுமா? நான்தான் தன் நிலை அழிந்து கொண்டிருக்கிறேனே! நீங்கள் அழுதால், அதற்கு நான் என்ன செய்ய முடியும்?"

ராஜுவுக்கு விளங்கியது. அவன்தான் இப்பொழுது சதீஷாகி விட்டானே!

"சதீஷ்!"

அம்மா புரண்டு படுத்ததனால், ராஜு கண் விழித்துக் கொண்டு விட்டான். அவன் மீண்டும் அங்கே எப்படித் திரும்பி வந்தான்? சிந்தனையில் சிறிது நேரம் சென்று விட்டது. அவன் ராஜுவா, சதீஷா? புரிந்து கொள்ளப் பல கணங்கள் பிடித்தன.

தூக்கத்தில் அம்மா சதீஷைக் கூப்பிட்டுக் கொண்டிருந்தாள். எந்தச் சதீஷை? இறந்து போன சதீஷை! ராஜுவுக்கு ஒரே பயமாகப் போய் விட்டது. உரக்கக் கூவினான்:

"அம்மா!"

அம்மாவின் இரு கன்னங்களும், தலையணையும் கண்ணீரால் தெப்பமாக நனைந்துவிட்டன. அவள் கனவில் என்ன கண்டு கொண்டிருந்தாளோ, யார் கண்டார்கள்? ராஜுவின் அபயக் குரலைக் கேட்டதும், அவள் பரந்து போய் ராஜுவின் முதுகையும் தலையையும் தன் அன்புக் கரங்களினால் தடவிக் கொடுத்தாள். 'பயந்து விட்டாயா, ராஜு?' என்று ஆதரவுடன் கேட்டாள்.

"இல்லை, அம்மா! சதீஷ் அண்ணா இங்கே வந்திருந்தானே, உனக்குத் தெரியாது?"

"அட, நீயும் அவனைப் பார்த்தாயா? நானும் அவனைப் பார்த்தேனே!"

அப்புறம் இருவர் கண்களும் உறக்கம் கொள்ளவில்லை. அம்மா வாய் திறவாமல் கண்ணீர் பெருக்கிக் கொண்டிருக்கிறாள் என்பதை ராஜு புரிந்துகொண்டான்.

"ஏன் ராஜு! சதீஷ் அண்ணாவுக்கு உன்னிடம் கொள்ளை ஆசை; இல்லையா?"

"ஆமாம், அம்மா! என் காற்றாடி அறுந்து விட்ட பொழுது அவன் எனக்குத் தன்னுடைய காற்றாடியைத் தந்து விட்டான். இன்னும் நிறைய வாங்கித் தருவதாகவும் சொல்லியிருந்தான்!"

பிறகு இருவரும் மௌனமானார்கள். சிறிது நேரம் கழித்து, "ஏன், ராஜு! உனக்குச் சதீஷ் அண்ணாவின் நினைவு வருவதில்லை?" என்று மெதுவாகக் கேட்டாள் தாயார். அந்தச் சொற்களில்தான் என்ன துயரம்! என்ன விஷயம்! ராஜுவுக்கு எல்லாம் புரிந்தது. ஆயினும் என்ன பயன்?

"வருகிறது, அம்மா!" என்றான். கூடவே, "ஏன் அம்மா, சதீஷ் அண்ணா இனிமேல் வரவே மாட்டானா?" என்றும் கேட்டான். அப்படிக் கேட்டபின்தான் அவனுக்குத் தன் தவறு தெரிந்தது. முதல் முதல் தெரிந்து அவன் செய்த தவறு அது. அம்மாவின் நிலைமை தெரிந்திருந்தும், அவன் போய் அப்படிக் கேட்டிருக்கலாமா? கேட்டதோ கேட்டாயிற்று. இனி அந்தத் தவறைத் திருத்திக் கொள்ள முடியுமா?

அம்மா பதிலுக்கு அழுதுவிட்டாள். ராஜுவின் நெற்றியிலே கண்ணீர்த் துளி விழுந்தது. ஆனால் ராஜுவின் கண்ணிலே ஒரு பொட்டுக் கண்ணீர் வரவேண்டுமே! அவன் கண்ணீர் எல்லாம் அப்படிக் கல்லாகவா கெட்டித்துப் போயிருக்க வேண்டும்? என்ன கஷ்டம்! என்ன கஷ்டம்! அவன் அழ நினைத்தாலும் அவன் கண்களிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீராவது துளித்தால்தானே? தன் உள்ளத்துப் பொருமலைப் பொறுக்க மாட்டாமல் குழந்தையுள்ளம் துடித்தது.

ஆனால் அன்று அவன் உறுதியாயிருந்தான்; பிடிவாதமாயிருந்தான். மரணத்தின் ரகசியத்தை அறிந்தே தீருவது என்று தீர்மானமாயிருந்தான். அந்த ரகசியம்தானே, அவனை அவனது அன்னையிடமிருந்து பிரித்து வைத்திருந்தது! எனவே, "ஏன் அம்மா! சதீஷ் அண்ணா எங்கே போய் விட்டான்?" என்று அம்மாவிடம் மறுபடியும் கேட்டான் ராஜு.

"அவனை ஆண்டவன் அழைத்துக்கொண்டு விட்டார், என் கண்ணே!" என்றாள் தாயார்.

"அவன் புத்தகங்கள்-துணிமணிகள், விளையாட்டுச் சாமான்கள், பெட்டி எல்லாம்..."

"எல்லாவற்றையும் அவன் தன்னோடு எடுத்துச் சென்று விட்டான். கடவுளின் வீட்டுக்கு!" என்றாள் தாயார்.

"என்ன? எல்லாவற்றையும் எடுத்துச் சென்று விட்டானா? அப்படியானால் அவன் இனிமேல் திரும்பியே வரமாட்டானா?" உணர்ச்சி குமிழியிடக் கேட்டான் ராஜு!


கல்லிலே பெரும் பிளவு ஏற்பட்டது! மேகங்கள் படையெனத் திரண்டு வந்தன. ராஜுவின் குரலிலே நடுக்கம் எடுத்தது. அதைக் கண்ட அன்னையின் குரலிலே ஆச்சரியமும், வியப்பும் குமிழியிட்டன. "ஏன், ராஜு! உனக்கு என்ன வருத்தம்?" என்று கேட்டாள் அவள்.

"சதீஷ் அண்ணாவின் காற்றாடி....இங்கேயே தங்கி விட்டதே......!"

கல் உடைந்து விட்டது! பூவுடல் பதறியது; பொருமிப் பொருமி அழலானான் ராஜு; குழந்தையின் அழுகையைக் கண்ட அன்னை தனது வேதனையை மறந்தாள். உள்ளத்தை அழுத்திய சுமையைக் குறைத்துக் கொண்டாள். தனது அழுகையை நிறுத்திக்கொண்டு, பிள்ளையைத் தேற்ற முற்பட்டாள். இத்தனை நாளும் தாயாரைப் பிரிந்திருந்த பாலகனுக்கு மீண்டும் தன் தாயாரை அடைந்து விட்டதாகத் தோன்றியது. தாயாருக்கோ தன் துயரைப் பகிர்ந்து கொள்ளும் தோழன் தனக்குக் கிடைத்து விட்டதாகத் தோன்றியது. ராஜுவை அன்புடன் மார்புறத் தழுவிக் கொண்டு ஆறுதல் சொல்லலானாள்.

அப்படியும் மரணத்தின் ரகசியம் யாருக்காவது விளங்கியதா? மண்ணுலகத்தைச் சேர்ந்த இரு உயிர்களின் காலடிகளிலே மரணம் கிடந்தது. ஆயினும் அதன் கரைகாண இயலாத ரகசியம் புதைந்து ரகசியமாகவே கிடந்தது!

எழில் மிக்க
ரெய்ப்பூர் ஆடைகள்



பாப்லின்கள்

ஷர்ட்டிங்குகள்

மெர்ஸிரைஸ்டு
வேஷ்டிகள்

பிரிண்டட் வாயில்கள்
மற்றும் லான்கள்






ரெய்ப்பூர் மில்ஸ் லிட்.

அஹமதாபாத்

மெஸர்ஸ் அஜிட்பாய் ஜயந்திலால் & கோ.,
5, கிடங்கு தெரு, சென்னை

மெஸர்ஸ் கணேஷ்மல் பிரதாப்மல் & கோ.,
ரத வீதி, பெல்லாரி



கடிதம் 205/2ல் தொட்டணம்பட்டி நேயர்—[30 வயது] எழுதுகிறார். இவர் குடகு தேசத்தவரல்ல. பெயர் தன லட்சுமியுமல்ல, பால்...? ஆண்.

"...கடந்த பத்து ஆண்டுகளாக அதாவது என் வாழ்க்கையில் மூன்றில் ஒரு பகுதியை நோயாளியாகவே கழித்து விட்டேன். அதாவது எனக்குப் பசிப்பது கிடையாது. பசி என்ற உணர்ச்சியே கிடையாது...வயிறு ஒரே திதானமாக, மந்தமாக இருக்கும். வாயு அதிகமாக உற்பத்தியாவதும் கிடையாது...சில சமயங்களில் வாயில் நல்ல ருசியும் கிடையாது. ஜீரணம் சுமாராக ஆகிற நல்லதிடகாத்திரனும் அல்லாமல், நோஞ்சானுகவும் இல்லாமல் இரண்டுங் கெட்டான் என்ற நிலையில் இருக்கிறேன். 'வயிற்றில் கல்லைப் போட்டாற்போல்' என்கிருர்களே, அதேமாதிரிதான் இருக்கிறது. உடம்பு இளைப்பதும் ஏறுவதுமாக இருக்கிறது. இதனுல் எந்த வேலையும் திம்மதியாகச் செய்ய முடிவதில்லை. ஆங்கில வைத்தியம் நிறையப் பார்த்து விட்டேன். மாத்திரைகள், 'மிக்சர்கள், டானிக்குகள், ஊசி மருந்து இவை ஏராளமாகச் சாப்பிட்டு விட்டேன். உண்ணுவிரதப் போட்டி வைத்தால் அவசியம் நான் ஜெயித்து விடுவேன் என்ற நம்பிக்கை இருக்கிறது..." என்று எழுதி இதற்கு என்ன செய்யலாமென்று கேட்டிருக்கிருர்.

தாவால சூர்ணம் :— கடுக்காய்த் தோல், ஓமம், [வறுத்துப் பொடித்த]. துவர்ச்சீலை உப்பு ஆகியவற்றைத் தனித் தனி நுண் பொடியாக்கிச் சம எடையில் கூட்டி அரை அல்லது ஒரு ஸ்பூன் அளவில் தினம் இரண்டுவேளை சாப்பிட்டால் இவருக்கு நல்லது. என்ன அனுமானத்தில் என்று கேட்கிறீர்களா? நூல்கள் தெரிவிப்பதையேஎழுதிவிடுகிறேன். இது

"...வெந்நீரில் நன்று
புளியோரில் நீவநன்று
மந்தாக்னிகட் கேன்ப
புராண வைத்தியர்..." அல்லது

பஞ்ச தீபாக்னி சூர்ணம் :—சுக்கு, திப்பிலி, மிளகு, ஜீரகம், ஏலரிசி இவற்றைத் தனித்தனி பொடித்து எடுத்த நுண் துகள்களைச் சம எடையில் சேர்த்து எடுத்துக் கொண்டதில் மேற் சொன்ன அளவில் மேற்சொன்ன அனுபானத்தில் கொடுப்பதும் நல்லது. அல்லது பனை வெல்லத்துடன் சேர்த்துப் பிசைந்து இதே சூரணத்தை லேகியம் போலவேனும் உட்கொள்ளலாம்.

ஆர்திரக கிருதம் ;—இஞ்சியை இடித்துப் பிழிந்த சாறு. இதைச் சற்று நேரம் வைத்திருந்து அடியில் தங்கும் கன்னும்பை விட்டு மேலாக உள்ள நீரை மட்டும் இறுத்து எடுத்துக் கொள்ளவும். இதற்குச் சமன் பசுவின் நெய். நெய்யில் எட்டில் ஒரு பாகம் திப்பிலி வேர் என்றும் காட்டுத் திப்பிலி என்றும் மோடி என்றும் மோடிக் கட்டை என்றும் கண்டத் திப்பிலி என்றும் அழைக்கப்படும் சரக்கை வெண்ணெய் போல் அரைத்து இவற்றுடன் சேர்த்துக் கலக்கிக் காய்ச்சவும். கல்கம் மெழுகுபோல் கையில் ஒட்டாமல் வரும்போது, இறக்கி வடிகட்டி வைத்துக் கொள்ளவும். உள்ளங்கையில் இந்நெய்யில் 5—10 துளிகள் விட்டுக் கொண்டு சிறிது சர்க்கரையும் சேர்த்துக் குழைத்து நக்கவும். தினம் இரண்டு வேளை; ஆகாரத்துக்கு முன். முதலில் சொன்ன சூரணங்களால் கிடைக்கப் பெற்ற பசித் தீயை இம் மருந்தைச் சாப்பிடுவதால் நிலைநிறுத்திக் கொள்ளலாம். மேலும் விருத்தி செய்து கொள்ளவும் கூடும். எப்படியும் பழைய பசியில்லா நிலை திரும்பாது. நிச்சயம்.

கடிதம் 212/2ல் கோயமுத்தூர் நண்பர் [வயது 25] எழுதுகிறார்.

"...திற்க. எனக்குக் கொஞ்ச காலமாக மூத்திரம் போகும்பொழுது ஆரம்பத்திலோ, கடைசியிலோ மோர் மாதிரி போய்க் கொண்டிருக்கிறது. இது என்ன காரணம் என்று தெரியவில்லை. நான் இந்தக் காரணத்துக்காக அரசாங்க ஆஸ்பத்திரியில் மூத்திரத்தைப் பரிசோதனை செய்தேன். எந்தவிதமான கெடுதலும் இல்லை. இது மூத்திரப் பையில் ஊறல் ஏற்படுகிறது. அதற்குப் பார்லி வாட்டர் சாப்பிடு, சரியாகி விடும் என்று சொன்னுர்கள். ஆனுல் பார்லித் தண்ணீர் குடிக்கும்பொழுது தான் குணம் ஏற்படுகிறது. ஆகையினுல் தாங்கள் தயவுசெய்து இதற்கு ஏதாவது ஓர் மருந்து..." என்று அவர் எழுதுகிறார்.

ஆஸ்பத்திரியில் சொன்னதாக நண்பர் தெரிவிப்பதன் பொருள் எனக்கு விளங்கவில்லை. மூத்திரமே ஒருவகை ஊறல்தானே? அந்த ஊறலை அதிகப் படுத்தும் இயல்புள்ளது இந்தப் 'பார்லி வாட்டர்'. மூத்திரப் பையில் ஊறல் ஏற்படுவது சகஜந்தானே? அப்படி

யாயின் அதைக் குறை சொல்வானேன்? அந்த ஊறலை அதிகப்படுத்தவே பார்லித் தண்ணீரைக் குடிக்கச் சொன்னார்கள். ஆகவே இயற்கையாக ஏற்படும் ஊறல் குறைவாக உள்ளது. அதைப் பெருக்க வேணுமென்றல்லவா தெளிவாகிறது? அவ்வாறாயின் மூத்திர ஊறல் போதாது என்றல்லவா சொல்லி இருக்க வேண்டும்? அவர்கள் சொன்னதை நண்பர் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை போலும்! ஆயினும், மூத்திரத்தில் எந்தவிதமான கெடுதலும் இல்லை என்பது எவ்வாறு பொருந்தும்? கெடுதல் இல்லையானால் இந்த 'மோர்' போன்ற நீரை என்னவென்பது? பார்லித் தண்ணீரைக் குடிக்கும்படி சொல்ல வேண்டிய நிலையுள்ளபோது எந்தவிதமான கெடுதலும் இல்லை என்பது எவ்வாறு பொருந்தும்? ஏதோ ஒரு கெடுதல் இருக்கிறது. ஆனால் மூத்திரப் பரீட்சை மூலம் இன்னதென்று தெளியச் சாத்தியமில்லை. அல்லது அதைத் தெளிந்து சொல்லுமளவுக்கு மூத்திரப் பரீட்சை முறை பெருகவில்லை என்றாவது ஒப்புக் கொள்ள வேண்டும். இவ்வித விரிவுரைகளைப் பற்றி இங்கு நமக்கு வேண்டியது ஒன்றுமில்லை.

நிற்க. தேரையன் என்ற சித்தர் மூத்திரப் பரீட்சையினால் வியாதியை நிச்சயிக்கத் துணை புரியும் வண்ணம் 'நீர் நிறக்குறி நெய்க்குறி சாஸ்திரம்' என்று ஒரு நூலை நிறுவியுள்ளதைப்பற்றி முன்பு ஒருகால் தெரிவித்துள்ளேன். அதில் அன்னார் தெரிவிப்பதாவது

"தக்கிரம் பாலெனத் தனித்தனி பொழுகுமேல்
உக்கிர வெப்பத்து உதிக்கால நீரே!"

என்று தெரிவிக்கிறார்.

சிறுநீரிலிருந்து வேறுபட்டதாய் — மோரைப் போலவோ அல்லது பாலைப் போலவோ ஏற்படும் ஒழுக்கு, சரீரத்தில் மிகவும் அதிகரித்துள்ள உஷ்ணத்தைத் தெரிவிப்பதாகும் என்றே பொருள் படுகிறது.

ஆகாரப் பொருள்கள் ஜீரணமாகிப் பரிணாமமடையும் நிலையில் —ஓரளவு உஷ்ணம் ஏற்படுமல்லவா? உஷ்ணமில்லாமல் உடல் இயக்கமில்லை. ஆயினும் நாம் உட்கொள்ளும் பொருள்களில் சில இவ்வித உஷ்ணத்தை அதிகரிக்கும் இயல்பு பெற்றனவாக இருக்கின்றன. அதனால் ஆகாரம் பரிணாமமாகும்போது வழக்கத்துக்கு மாறான முறையில் சில புதிய அமில பௌதிகப் பொருள்கள் பிரிந்துண்டாக நேரிடும். இந்நிலையில் தான் சரீரத்தில் வெப்பம் அதிகரிப்பதும், உக்கிர வெப்பம் ஏற்படுவதும் உண்டு. அவ்வகையான பொருள்களை ஆகாராதிகளில் இந்நண்பர் சேர்க்கக் கூடாது. அதிகமான உப்பு, அதிகரித்த புளி, மிளகாய், வெங்காயம் போன்றவைகளை உதாரணமாகச் சொல்லலாம். தண்மை குணமுள்ள கலியாணப்பூசணி, வெள்ளரி, நெல்லிக்காய், பால், வெண்ணெய், நெய், பச்சைப் பயிறு போன்றவைகளைத் தேவையான மட்டும் ஏற்கலாம். தவிரவும், 'நீர்க்கடுப்பு' என்ற தலைப்பின் கீழ் சொன்ன தண்ணீர் விட்டான் கிழங்கு, சிறுபீளை ஆகியவற்றால் தயாரிக்கப்படும் மருந்துகளெல்லாம் இவருக்கு ஹிதமானவையாகும். சிறுநீர்ப் பெருக்கிகளான இளநீர் போன்ற பானங்கள் இவருக்கு மிகவும் நன்மையைப் பயக்கும். கோமூத்ர சிலாஜது சேர்ந்த சதாவரீ ரசாயனம் என்னும் மருந்து இவருக்கு மிகவும் நல்லது.


யாழ்ப்பாணத்துச் சகோதரியொருவர் கடிதம் 246/2ல் குடும்பக் கட்டுப்பாடு என்றும் கர்ப்பத் தடை என்றும் இக்காலத்தில் ஒருவகைப் பிரசாரம் மலிந்து வருகிறதில்லையா? இதைப் பற்றி நாட்டு வைத்தியத்தில் தெரிவிக்கப்படும் தகவல் ஏதாவது இருப்பின் எழுதும்படி கேட்கிறார்.

மனக் கட்டுப்பாடு, ஒழுக்கம், சீலம் இவற்றால் சித்தியாகும் பிரமச்சரியம் ஆகியவற்றை மிகவும் வற்புறுத்தி நம் சாஸ்திரங்கள் தெரிவிக்கின்றன. அப்பிரம்மசரியத்தை விளைவிக்க வல்ல ஆகார விகாரங்களைக் கட்டுப்படுத்தவும், மிருக இச்சையை அறவே ஒழித்துக் கட்டவும், சாத்விகமான ஆகாரங்களையே ஏற்பதும், சாத்விகமான விஹாரங்களை ஆசரிப்பதும், ஸத்துக்களுடன் பழகுவதும் அவசியமென்று நமது சாஸ்திரங்கள் வற்புறுத்திக் கூறுகின்றன. ராஜஸ, தாமஸ குணங்களை அதிகப்படுத்தி உணர்ச்சியை அதிகப்படுத்தும் இயல்புபெற்ற ஆகாரங்களைத் தவிர்க்கவும், கூட்டம், குழு கேளிக்கைகளில் பங்கெடுத்துக் கொள்வதைத் தவிர்க்கவும் வேண்டுமென்று வலியுறுத்துகின்றன. நமது வாழ்க்கையில் எவ்விதத்திலும் அதிகம், குறைவு என்பவை ஏற்படாமல் — ஆயினும் நிறைவுபெற்றநிலையில் நாம் சில கட்டுத் திட்டங்களை நிறுவி அவற்றை நமது தினசரி அலுவல் திட்டமாகச் செயலில் புகுத்திய வகையில் விளக்கியுள்ள அரிய விஷயங்கள்தான் இச்சகோதரி விரும்பும் பயனை அளிக்கவல்லவை. இவற்றைத் தினசரியை ஒழுக்கம் என்னும் தலைப்புகளின் கீழ் விஸ்தாரமாகவும் விளக்கமாகவும் எழுதியாயிற்று.

வாழ்க



நெய்வேலி நிலக்கரிச் சுரங்க நிர்வாக அதிகாரி திரு ஆர். ரங்காச்சாரியின் புதல்வி சௌ. கமலாவுக்கும் திரு கிருஷ்ண தேசிகனுக்கும் திருமணம் நடந்தது.




இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி உதவி மானேஜர் திரு கே. வி. எஸ். அய்யர் அவர்கள் புதல்வி சௌ. ஜனகத்தை திரு விசுவநாதன் மணந்து கொண்டார்.




வயலின் ஆர். கே. வெங்கட்டராம சாஸ்திரி அவர்களின் புதல்வி சௌ நிரஞ்சனிக்கும் திரு கிருஷ்ணமூர்த்திக்கும் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.



பாலசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம் மானேஜிங் டிரஸ்டி சந்திரசேகரன் அவர்களின் புதல்வன் பழனிக்கும் சௌ. சசிலாவுக்கும் திருமணம் நடைபெற்றது.



திரு சவுந்திரராஜனுக்கும் சௌ வசந்தாவுக்கும் சமீபத்தில் வெகு சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.



வாலாஜாபேட்டை கல்வி ஏஜண்ட் திரு டி. கே. கோபாலன் அவர்களின் புதல்வி சௌ. ஸ்ரீமதிக்கும் திரு பி. எஸ். வெராம னுக்கும் விவாகம் நடந்தது.

மணமக்கள்




வேலூர் சப் கோர்ட்சிரஸ்தார் திரு கே. ராமநாதய்யர் குமாரர் திரு ஆர் கிருஷ்ண மூர்த்திக்கும் சரோஜாவுக்கும் திருமணம் நடந்தேறியது.



கோவை விளம்பர ஆலோசகர் திரு பி. ஆர். விசுவநாதனுக்கும் பத்மாவதிக்கும் கோவையில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.




வழுத்தூர் திரு ஆத்மநாதனுக்கும் யோகாம்பாளுக்கும் சமீபத்தில் விவாகம் சிறப்பாக நடந்தது.



சென்னை ஜெனரல் ஸ்டோர்ஸ் திரு வி. கணேசனின் புதல்வர் திரு கிருஷ்ணமூர்த்திக்கும் சௌ லலிதாவுக்கும் கோயமுத்தூரில் திருமணம் நடந்தேறியது.



ஸ்ரீ டி. டி. கோவிந்தசாமி ரெட்டியாரின் புதல்வி அம்புஜாவுக்கும் திரு எஸ். ஆர். துரைராஜுவுக்கும் வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தது.



திரு வி. கே. ராஜகோபால அய்யரின் புதல்வர் திரு ஆர். சுப்பிரமணியனுக்கும் பிரேமாவதிக்கும் நன்னிலத்தில் விவாகம் வெகு விமரிசையாக நடந்தது.

ஆட்சி மொழி விஷயம் சூடு பிடிக்கிறது

எஸ். வி. எஸ்.

ஆந்திர ராஜ்யத் தலைநகரான ஹைதராபாத்திலே ஆட்சி மொழி மகாநாடு சென்ற மாதம் வெகு சிறப்பாக நடைபெற்றது. இப்படி நாம் சொன்னால் ஏதோ சம்பிரதாயமாகச் சொல்வதாக நேயர்கள் நினைக்கக் கூடும். அதிலும், ஹைதராபாத் ஆட்சிமொழி மகாநாட்டில் குழப்பம் விளைந்தது என்பதைக் கேள்விப்பட்ட பிறகும் ஹைதராபாத் மகாநாடு சிறப்பாக நடைபெற்றது என்று சொன்னால் சிலர் வியப்படையலாம். அந்தக் குழப்பமே மகாநாட்டுக்குச் சிறப்பாக அமைந்தது. மகாநாடு நடத்துவதின் நோக்கத்தை அது நன்கு வலியுறுத்திக் காட்டியது!

கல்கியில் இரண்டு வாரங்களுக்கு முன்பு 'புலி வந்துவிட்டது, ஜாக்கிரதை!' என்று தலையங்கம் வெளியாகியிருந்தது. இந்தியை மறைமுகமாகச் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் மீது பயமுறுத்தித் திணிக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டப்பட்டிருந்தது. இப்படிப் பல அக்கிரமங்கள் நடக்கின்றன. இவற்றை யெல்லாம் பொது ஜனங்களின் கவனத்துக்குக் கொண்டு வரவே சென்னையிலும், கல்கத்தாவிலும், மாயூரத்திலும் மகாநாடுகள் நடத்தப்பட்டன. இத்தனை மகாநாடுகள் கூட்டி இந்தி வெறியர்களின் கொடுமையை எடுத்துச் சொல்வதைவிட மிக வேகமாக, மிக வன்மையாக, மனத்தில் நன்றாகப் பதியும் வகையில், இதுவரை இவ்வியக்கம் சம்பந்தமாக ஏனோதானோ வென்று இருந்தவர்களும் விழித்துக் கொள்ளும்படியான முறையில் சிறந்த பணியை ஒரு சிறு கூட்டத்தார் ஹைதராபாத் மகாநாட்டில் செய்து விட்டார்கள்.

இந்தி ஆட்சிமொழியானால், கர்வம் பிடித்த இந்தி வெறியர்கள் எத்தமாதிரி நடந்துகொள்வார்கள் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டார்கள். ஆகவே, இத்தகைய மக்களிடம் தேசத்தை ஒப்படைப்பது எவ்வளவு பெரும் ஆபத்தாக விளையும் என்பது தெளிவாகிவிட்டது. இனி இந்தி தாய்மொழியாகப் பெறாதவர்கள் எச்சரிக்கையாக இருந்துஇந்தித் திணிப்பை எதிர்க்க வேண்டும். இப்பொழுது இருப்பது போலவே ஆங்கிலம் மத்திய ஆட்சி மொழியாகத் தொடர்ந்து இருந்து வருவதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டும்.

மகாநாடு நடந்த மறுநாள் பத்திரிகை நிருபர்கள் ராஜாஜியைப் பேட்டி கண்டார்கள். அதில் ஒருவர், "நேற்றைய மகாநாட்டுக் குழப்பம், தென்னாட்டில் பதில் குழப்பத்தை விளைவிக்குமா?" என்று கேட்டார்.

"குழப்பத்தை விட்டுத் தள்ளுங்கள். இந்த மகாநாடு தென்னாட்டில் பெரும் பயனை உண்டாக்கும். பெரும் செல்வாக்கைத் தேடித் தரும். இக்குழப்பம் சிறு விஷயம். தென்னக மக்கள் பதில் குழப்பம் விளைவிக்க மாட்டார்கள். அவர்கள் நல்ல பண்பாடுடையவர்கள்!" என்று கூறினார்.

இனி மகாநாட்டைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

ஹைதராபாத் மகாநாட்டுக்கு முன்னாட்களில் ஆந்திர சர்வகலாசாலையின் துணை வேந்தராக இருந்த ஸ்ரீ லெக்கராஜு சுப்பாராவ் அவர்கள் தலைமை வகித்துச் சிறந்த சொற்பொழிவாற்றினார். அவரது தலைமை உரையில் பண்டித ஜவாஹர்லால் நேருவிலிருந்து பலப்பல அறிஞர்களை மேற்கோள் காட்டி, இந்தி ஆட்சிமொழியாவதற்குத் தகுதி இல்லை என்பதையும், ஆங்கிலம் இந்நாட்டில் தொடர்ந்திருக்க வேண்டியதன் அவசியத்தையும் வற்புறுத்தினார்.

இந்த மகாநாட்டைப் பெங்களூர் பிரமுகர் ஸ்ரீ பி. கோதண்டராவ் திறந்துவைத்தார். வரவேற்புக் குழுத் தலைவர் ஸ்ரீ வி. ரங்காச்சாரியார் வரவேற்புரை நிகழ்த்தினார். இப்படி ஆரம்பமான முதல் நாள் மகாநாட்டில் ராஜாஜி ஒன்றேமுக்கால் மணிநேரம் பேசினார். உணர்ச்சி வேகத்தோடு உற்சாகமாகப் பேசினார். இவ்வளவு உற்சாகம், ஹைதராபாத் விமான நிலையத்தில் காட்டப்பட்ட கறுப்புக் கொடியே அளித்தது!


மறுநாள் மகாநாட்டில், காளா சுப்பாராவ் அவர்கள் பேசினார். அவர் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டார். "பல நூற்றாண்டுகளுக்கு முன் அமெரிக்காவுக்கு அடிமைகளாகச் சென்ற நீக்ரோக்கள், இன்று ஐரோப்பாவிலுள்ளஎந்த வெள்ளை இனத்தாரை விடவும் சௌகரியமாகவும் சந்தோஷமாகவும் சுதந்திரமாகவும் வாழ்கிறார்கள். 'இதை எங்களுக்கு ஆங்கில மொழி தான் தேடித் தந்தது!' என்று சொல்லுகிறார்கள். ஆங்கில மொழி அவ்வளவு சுதந்திர உணர்ச்சி நிரம்பிய மொழி. எப்படியோ சென்ற நூற்றைம்பது ஆண்டுகளாக அதை நாம் பெற்றிருக்கிறோம். அதன் மூலமாகவே தேசிய ஒற்றுமையையும் சுதந்திரத்தையும் பெற்றோம். அந்த ஆங்கில மொழியை இப்பொழுது தூர எறிந்துவிடக்கூடாது" என்றார்.

ஹைதராபாத் தமிழர்கள் எங்கள் 'வியாசர்' என்று பெருமிதத்துடன் போற்றும் திவான் பகதூர் ஆராவமுதய்யங்கார் பாரத சர்க்கார் ஆங்கிலத்தையும் அங்கீகரிக்கப்பட்ட பாரத மொழிகளுள் ஒன்றாகச் சேர்க்க வேண்டும் என்ற தீர்மானத்தைப் பிரேரேபித்தார். பிறகு இன்னும் சில தீர்மானங்கள் ஒவ்வொன்றாக விடப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன! மகாநாடு வெகு வெற்றிகரமாக முடிந்தது! இந்த மகாநாட்டைப் பற்றிய படங்களை அடுத்த பக்கத்தில் காணலாம்.

இந்தியை எதிர்த்து; ஆங்கிலமே ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்ற இயக்கத்தில் தமிழர்கள் மட்டுமன்றி, வங்காளிகளும் துணை நிற்கின்றனர் என்பதை கல்கத்தா மகாநாடு நிரூபித்தது. ஹைதராபாத் மகாநாடு, ஆந்திர மக்களையும் இந்த விஷயத்தில் தீவிர உணர்ச்சி கொண்டு எழச் செய்யும் என்ற நம்பிக்கையை ஊட்டியது.



ஹைதராபாத் மகாநா



1. ஹைதராபாத் விமான நிலையத்துக்கு ஆந்திர சட்டசபையின் சபாநாயகர் ஸ்ரீ ஏ. காளேசுவரராவ், கல்வி மந்திரி ஸ்ரீ பட்டாபி ராம ராவ் மற்றும் பல பிரமுகர்கள் மலர் மாலைகளுடனும் கதர் மாலைகளுடனும் வந்து ராஜாஜி அவர்களுக்கு அமோக வரவேற்பு அளித்தனர்.


2. மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீ லெக்கராஜு சுப்பாராவ் தலைமையுரை நிகழ்த்துகிறார்.


3. மகாநாட்டு மேடையின் ஒரு தோற்றம். இடது கோடியில் நின்று பேசுபவர்தான் ஸ்ரீ பெர்னாண்டஸ். ஆங்கிலோ இந்தியர் சார்பில் ஆங்கிலம் தேசிய மொழிகளில் ஒன்றாக இருக்க வேண்டும் என்று வாதாடுகிறார்.











4. மகாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர் ஸ்ரீ வி. ரங்காச்சார் வரவேற்புரை நிகழ்த்துகிறார்.

5. திவான்பகதூர் ஆராவமுதய் யங்கார் முதல் தீர்மானத்தைப் பிரேரேபித்துப் பேசுகிறார்.

6. ஸ்ரீ சிவராம சாஸ்திரி வாழ்த் துச் செய்திகளை வாசிக்கிறார்.

7. ஸ்ரீ எம். ரத்னசாமி பேசுகிறார்.

8. பெங்களூர் ஸ்ரீ கோதண்டராவ் திறப்புரை நிகழ்த்துகிறார்.

9. சென்னை ஆட்சிமொழிக் குழு வின் காரியதரிசி திரு அம்ருத கணேச னும் பங்கெடுத்துக் கொண்டார்.

10. ராஜாஜி பேசுகிறார்.

11. ஸ்ரீ காஸா சுப்பாராவ் மகா நாட்டில் பேசுகிறார்.





விருதுநகர் இண்டஸ்ட்ரியல் ஒர்க்ஸ் அண்டு கோவில்பட்டி ஜெனரல் மெட்டல் டிரேடிங் கம்பெனி கூட்டாளி' வி. ஏ. ஏ. லக்ஷ்மண நாடார் சகோதரர் வி. ஏ. ஏ. ராஜா நாடார் புதல்வி சௌபாக்கியவதி நாகரத்தினம், விருதுநகர் பிரபல வியாபாரி ஏ. கே. பி. சண்முகசுந்தர நாடார் அவர்கள் சகோதரர் ஏ. கே. பி. சிதம்பர நாடார் அவர்களின் புதல்வர் சிரஞ்சீவி ஜோசப், M. A. (I. L. C. Secretariat, Madras) இவர்களின் திருமணம் 13-7-58ல் விமரிசையாக நடந்தேறியது. வாழ்க மணமக்கள்!

பொங்கிவரும் பெருநிலவு



நான்காம் அத்தியாயம்

மலர் மாலையா?
மணமாலையா?

கி. ராஜேந்திரன்

மனோரம்யமான மாலை நேரம். சூரியன் மறைந்து விட்டான். தென்றல் இலேசாக வீசியது. தெருவோரத்தில் நின்ற அரச மரங்களின் இலைகள் காற்றில் அசைந்தாடிச் சலசலத்தன. கிழக்கு மேற்காக ஓடிய அந்தச் சாலையில் அதிக நடமாட்டம் இல்லை. தெருவில் ஓரிடத்தில் இடப்புறமாக மேற்குத் திக்கை நோக்கி நின்று கொண்டிருந்தது. ஒரு மோட்டார் கார்.

மல்லிகாவின் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த அந்தக் காருக்குள் கதிர்வேலன் உட்கார்ந்திருந்தான். மறைந்து விட்ட ஆதவனின் செம்பொற் கிரணங்கள் மட்டும் அவன் எதிரே பரவி நின்றன. மேற்குத் திசையில் வானம் முழுவதும் செக்கச் செவேல் என்று காட்சி யளித்தது. அதன் இடையே ஆங்காங்கே கரிய மேகக் குவியல்கள் காணப்பட்டன. அவற்றைச் சுற்றிலும் ஒரே ரத்தச் சிவப்பு. போர்க்களத்திலே உயிர் துறந்து குருதி வெள்ளத்தில் விழுந்து கிடந்த மத்தகஜங்களை நினைப்பூட்டியது வானத்தில் தோன்றிய அந்தக் காட்சி. செக்கர்வானம் தன்னைப் பார்த்துப் பயங்கரமாகச் சிரித்ததாகத் தோன்றியது கதிர்வேலனுக்கு.

இனந் தெரியாத ஒரு பயம் அவனைச் சூழ்ந்து கொண்டது. 'இதுஎன்ன அசட்டுத்தனம்? எதற்காக நான் இப்படிப் பயப்பட வேண்டும்?'

தனது திரண்ட தோள்களை ஒருமுறை பார்த்துக் கொண்டான். தன்னம்பிக்கையுடன் நிமிர்ந்து இப்போது வானத்தைப் பார்த்தான். மீண்டும் அதே குருதி வெள்ளம்! அதைப் பார்க்க விரும்பாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

மல்லிகாவின் வீட்டின் மீது அவன் பார்வை சென்றது. 'மாமா ஏன் இன்னும் திரும்பவில்லை? 'நீ காரிலேயே இரு. நான் சீக்கிரமாக மல்லிகாவை அழைத்து வந்து விடுகிறேன். ஷூட்டிங்குக்கு நேரமாகி விட்டது' என்று சொல்லி விட்டுச் சென்றாரே? ஏன் இவ்வளவு நேரம்?



'நேரமாவதற்குக் காரணம் அவராக இருக்காது. மல்லிகா கிளம்பியிருக்க மாட்டாள். பெண்களே இப்படித்தான். அதிலும் இவள் சினிமா நட்சத்திரம் அல்லவா! அலங்கரித்துக் கொண்டு கிளம்ப நேரமாகும். இன்னும் எவ்வளவு நேரம் அவர்களுக்காகக் காத்திருப்பது? முதல் நாள் 'எவ்வளவு நேரமாக உங்களுக்காகக் காத்திருக்கிறேன் தெரியுமா?' என்று அவள் கேட்டது நினைவுக்கு வந்தது கதிர்வேலனுக்கு. ஒருவேளை அதற்குப் பழி வாங்கத்தான் இன்று தன்னைக் காரில் காக்க வைத்து விட்டு உள்ளேயே உட்கார்ந்திருக்கிறாளோ?

அவள் கேட்ட அந்தக் கேள்வியில் இருந்த குழைவையும் நெளிவையும் நினைத்துப் பார்த்தான் கதிர்வேலன். முன்பின் தெரியாத என்னிடம் ஏன் அப்படிக் குழைந்தாள்? சுகுமாரனுடைய தூண்டுதலினாலா? எங்களுக்கிடையே ஒரு பிணைப்பை ஏற்படுத்த அவர் முயல்கிறாரா? அவளை நான் சந்திக்கும்படி செய்து இங்கு அழைத்து வந்ததும் அதற்காகத்தானா? சிறுமி சரஸ்வதியை வீட்டினுள் படுக்க வைத்து விட்டுத் திரும்பியதும், 'என்ன அப்பனே! அங்கேயே ஐக்கியமாகி விட்டாயே?' என்று சுகுமாரன் கேட்டாரே? அந்தக் குரலில் கடுமையில்லை; ஏளனமும் இல்லை; மகிழ்ச்சியல்லவா தொனித்தது?

சரஸ்வதியைச் சோபாவில் கிடத்தி விட்டுத் திரும்பியதும் பார்ப்பவர்கள் உடல் தளர்ந்துபோய் நிலைகுலையச் செய்யும் சௌந்தர்யத்துடன் மல்லிகா அங்கே நின்ற தோரணையில் நான் கூட ஒருநிமிஷம் தடுமாறித்தான் போனேன். ஆனால் சுகுமாரன் நினைப்பதுபோல் ஒரு நாளும் நடக்க முடியாது.

என்னுடைய முரட்டுக் குணத்துக்கும் சுயேச்சையான மன நிலைக்கும் குடும்ப வாழ்க்கை ஒத்து வராது. அதிலும் மல்லிகாவை மணந்து கொண்டு அவ



னுடைய புகழிலும் செல்வத்திலும், தான் பங்கு கொள்வது நினைத்துக்கூடப் பார்க்க முடியாத விஷயம். இரும்புத் தூண்களைப் போல் இந்த இரண்டு கரங்களை வைத்துக் கொண்டு அவனுடைய தயவில் வாழ்வதா, சீச்சீ!

ஆனால் உள்ளத்தை உறையச் செய்யும் அவள் அழகு...கருத்தைக் கவர்ந்து இழுக்கும் அவள் எழிலுருவம்...சிந்தனை செயலற்றுப் போகச் செய்யும் பொன்னிற மேனி! அதைப் பார்த்துக் கொண்டே இருந்தால் என் வைராக்கியமெல்லாம் தவிடு பொடியாகி விடும். அப்புறம் அவள் என்னை ஏற்றுக் கொள்ளும் வரையில் அவள் காலடிகளில் அடிமையாகக் கிடக்க வேண்டியதுதான். அதற்குச் சிறிதும் இடம் கொடுக்கக் கூடாது. உடலில் எனக்கு இருக்கும் வலிமை உள்ளத்துக்கும் உண்டு...

கதிர்வேலன் நிமிர்ந்து பார்த்தான். தொடுவானத்தில் ரத்த ஆறு ஓடியது.

அவன் உடல் சிலிர்த்தது. 'எனக்கு இன்றைக்கு என்ன வந்து விட்டது?'

அதற்கு மேல் உட்கார்ந்திருக்க முடியாமல் கீழே இறங்கி விடுவிடென்று வீட்டினுள் நுழைந்தான் கதிர்வேலன்.

"மாமா ஷூட்டிங்குக்கு நேரமாக வில்லையா? எவ்வளவு நேரமாக உங்களுக்காகக் காத்திருப்பது?"

இலங்கைப் பிரயாணத்தைப் பற்றிச் சுகுமாரனிடம் சர்ச்சை செய்து கொண்டிருந்த மல்லிகா திரும்பினாள். "நேற்று உங்களுக்காக மாமல்லபுரத்தில் மணிக் கணக்காகக் காத்திருந்தேனே? இன்று எனக்காகச் சில நிமிஷங்கள் நீங்கள் காத்திருக்கக் கூடாதா?" என்று கதிர்வேலன் முதல் நாள் சொன்னதையே திரித்துச் சொன்னாள்.

அப்போதுதான் அவளைக் கவனித்தான் கதிர்வேலன். அவள் அணிந்திருந்த புடவை... ஐயோ! பயங்கரமான ரத்தச் சிவப்பு! கதிர்வேலனின் உடலில் ரோமங்கள் குத்திட்டு நின்றன. அருகே இருந்த நாற்காலியில் 'பொத்'தென்று உட்கார்ந்தான்.

"முக்கிய விஷயமாகத்தான் பேசிக் கொண்டிருக்கிறோம், கதிர்வேலு. இலங்கைக்கு வரமாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கிறாள். உன்னுடன் சேர்ந்து ஈழத்துக்கு வர மாட்டாளாம்."

கதிர்வேலு ஒரு மாதிரியாகத் தன்னைச் சுதாரித்துக் கொண்டான். அவனுடைய பரிகாசப் பேச்சு மீண்டும் வெளிப்பட்டது. "ஏன்? என்னைக்கண்டு என்ன பயம்? உன்னை விழுங்கி விடுவேனா, என்ன?" என்று கேட்டுச் சிரித்தான்.

"என்னை மட்டுமா? அப்பாவையும் சேர்த்து விழுங்கி ஏப்பம் விட்டாலும் ஆச்சரியப்பட மாட்டேன். அப்பா! இவரை நம்பாதீர்கள்! ஏதேதோ சூழ்ச்சிகளில் இவர் ஈடுபட்டிருக்கிறார் என்று நினைக்கிறேன்."

கதிர்வேலனும் சுகுமாரனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"ஏனம்மா அப்படி நினைக்கிறாய்?" என்று கேட்டார் சுகுமாரன்.

"நேற்று மாமல்லபுரத்தில் நீங்கள் இறங்கிச் சென்றதும் அதிகாரக் குரல்களும் யார் யாரோ சண்டையிடும் ஓசையும் 'திபுதிபு' என்று ஓடும் சத்தமும் கேட்டன. அதிலெல்லாம் இவரும் ஈடுபட்டிருந்தார் என்று சந்தேகிக்கிறேன். இந்தச் சிக்கல்களிலெல்லாம் நீங்கள் மாட்டிக் கொள்ளாதீர்கள். மொத்தத்தில் இவருடைய நடை உடை பாவனை எதுவுமே எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. இவருடைய சகவாசம் உங்களுக்கு வேண்டாம்" என்றாள்.

"நீண்ட நேரமாக எனக்காகக் காரில் காத்திருந்தேன் என்றாயே, அப்போது தூங்கிப் போய்க் கனவு கண்டாயோ?" என்று கேட்டான் கதிர்வேலன்.

கண்களில் தீப்பொறி பறக்க அளவு கடந்த கோபத்தோடு கதிர்வேலன் பக்கமாகத் திரும்பினாள் மல்லிகா.

"திரும்பத் திரும்பத் துடுக்காகவும் ஏளனமாகவும் பேசி என் கோபத்தை அதிகரிக்கிறீர்கள். மரியாதையாகப் பேசத் தெரிந்தால் பேசுங்கள். இல்லையானால் இந்தக் கணமே இந்த வீட்டை விட்டு வெளியேறுங்கள்" என்றாள்.

"மரியாதை கொடுத்துத்தான் மரியாதை வாங்க முடியும். நீ மட்டும் என்னை அவமதித்துப் பேசலாம், அதைக் கேட்டுக் கொண்டு நான் உன்னை முகஸ்துதி செய்ய வேண்டும் என்று எதிர்பார்த்தால் ஏமாந்து தான் போவாய். திரைப்பட உலகில் வேண்டுமானால் அப்படியிருக்கலாம். நான் அந்த உலகைச் சேர்ந்தவனல்ல."

"அடாடா! எலியும் பூனையுமாக அல்லவா சண்டை போடுகிறீர்கள்? உங்களுக்குப் போய்க் கல்யாணம் வேறு செய்துவைக்கலாம் என்று நினைத்தேனே! என் மூளையை இன்ஷூர் செய்ய வேண்டியதுதான்" என்றார் சுகுமாரன்.

"கல்யாணமா? யாருக்குக் கல்யாணம்? என்னைக் கல்யாணம் செய்து கொள்ளலாம் என்று இவள் மனப்பால் குடித்து ஆனந்தப்பட வேண்டாம். பின்னால் இவள் பெருத்த ஏமாற்றத்துக்குள்ளாக நேரிடும்."

"ஐயோ! போதுமே உன் தற்பெருமை. ஏமாறவேண்டியவன் நீதான். உன்னைக் கல்யாணம் செய்துகொள்ள முடியாது என்று முன்பே இவள் தீர்மானமாகச் சொல்லி விட்டாள்."

"ரொம்ப நல்லதாகப்போயிற்று. இருவருக்குமே ஏமாற்றம் இல்லை என்று ஆகிவிட்டது."

"உண்மையில் ஏமாற்றம் எனக்குத்தான். என்னுடைய பேரன்புக்குப் பாத்திரமான இருவருக்கும் கல்யாணம் செய்து வைத்துக் கண் குளிரப் பார்த்து மகிழ வேண்டும் என்று நினைத்திருந்தேன். அந்தத் திட்டமெல்லாம் இப்பொழுது குலைந்து விட்டது."

"மாமா! உங்களுக்கு ஏமாற்றம் அளிப்பது குறித்து வருந்துகிறேன். ஆனால் நாங்கள் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து வாழ்க்கை நடத்துவது இயலாது. எங்களுடைய குணங்கள் ஒரு போதும் ஒத்துப் போகாது. மல்லிகாவின் எதிரிலேயே இதைத் தீர்மானமாக முடிவு செய்து விடுவதும் நல்லதுதான்."

"குணங்களைப பற்றி நான் எண்ணிப் பார்க்காதது தவறுதான். சந்தித்த இரண்டு நாட்களுக்குள்ளேயே ஒரே சண்டையும் பூசலும் கோபதாபங்களுமாக இருக்கின்றனவே. இன்னும் போகப்போக என்ன நடக்குமோ? உங்களுடைய உருவப்பொருத்தத்தை மட்டும் பார்த்து நான் தீர்மானித்து விட்டேன். நீயும் மல்லிகாவும் மலர் மாலைகளை அணிந்து அருகருகே நின்றால் எப்படி இருக்கும், தெரியுமா?"

"உங்களைத் திருப்திப்படுத்த வேண்டுமானால் அப்படி நின்று காட்டி விடுகிறோம். ஆனால் மலர் மாலைகளாகவே அவை இருக்கட்டும். மண மாலைகளாக வேண்டாம்" என்றான் கதிர்வேலன்.

இந்தப் பதில் உண்மையில் மல்லிகாவுக்குப் பெரிய ஏமாற்றத்தையே அளித்தது. தன்னுடைய அழகில் கதிர்வேலன் கட்டுப்பட வில்லை. தன்னை மணம் செய்து கொள்ள வாய்ப்பு இருந்தும் அதை அவன் விரும்பவில்லை. அதோடு மட்டுமா? தன்னை அலட்சியம் செய்யவும் துணிந்து துச்சமாகவும் பேசுகிறான். செண்பகபுரம் கிராமத்தை விட்டுச் சென்னைக்கு வந்த பிறகு அவள் அறியாத புது அனுபவம் இது. தன்னுடைய வாழ்வில் அதை ஒரு மாபெரும் தோல்வியாகவே கருதினாள் மல்லிகா.

திடீரென்று திரைப்பட ஷூட்டிங்கின் ஞாபகம் வநதது சுகுமாரனுக்கு. கைக் கடிகாரத்தைப் பார்த்து விட்டு, "மல்லிகா! ரொம்ப நேரமாகிவிட்டது. சீக்கிரம் கிளம்பு, போகலாம்" என்று சொல்லிக் கொண்டே அவர் எழுந்து வாசலுக்குப் போனார்.

"நான் இன்று ஷூட்டிங்குக்கு வரவில்லை, அப்பா!" என்றாள் மல்லிகா.

"ஏன் வரவில்லை?" என்று கேட்டார் வாசல் கதவு வரையில் சென்று திரும்பிய சுகுமாரன்.

"நான் இங்கு இருப்பதால் வரமாட்டேன் என்கிறாளோ என்னவோ? இலங்கைக்கு என்னுடன் வரப் பிடிக்காதது போல் ஷூட்டிங்குக்கும் என்னுடன் வர விரும்பவில்லை என்று நினைக்கிறேன்."

"இன்று ஒருநாள் போனால் போகிறது என்று வந்து விடு, மல்லிகா. அந்த ஹிந்திக்காரன் வேறு வந்து உட்கார்ந்து கொண்டு 'தேர் ஹோ கயி!' என்று கலாட்டா செய்வான்."

"அது யார் மாமா ஹிந்திக்காரன்?"

"இவளுடன் சேர்ந்து ஹிந்திப் படத்தில் நடிப்பதற்காக பம்பாயிலிருந்து தருவித்திருக்கிறேனே ஒரு சிடுமூஞ்சியை. அந்த மகானுபாவன் தான்."

"என்னுடன் சேர்ந்து மல்லிகா வர மாட்டாள், மாமா!"

"உண்மைக் காரணம் அதுவல்ல. எனக்கு உடம்பு சரியில்லை."

"உடம்பு சரியில்லையா? ஏன்? என்ன செய்கிறது?"

"கொஞ்ச நாட்களாகவே சரியில்லை. 'பார்த்துக் கொள்ளலாம்' என்று இருந்து விட்டேன். இப்போது ஷூட்டிங்குக்கு வருவது கூடக் கடினமாக இருக்கும் போல் தோன்றுகிறது. இந்த நிலையில் இலங்கைப்பயணத்தை என்னால் தாளவே முடியாது."

"கொஞ்ச நாட்களாகவே சரியில்லை என்றால் அதை மூடி மறைத்து வைப்பானேன்? உடனே சொல்லக் கூடாதா? என்னம்மா நீ!" என்று செல்லமாகக் கடிந்துகொண்டார் சுகுமாரன். பின்னர், "என்னுடைய மகன் மோகனுக்குக் கூட அப்படித்தான் நடந்தது. கடைசி நேரத்தில்தான் டாக்டர் நடராஜனைக் கூப்பிட்டேன். அவனுடைய திறமையால் தான் இன்று மோகன் நடமாடிக் கொண்டிருக்கிறான். நடராஜனையே இப்போதும் அழைக்கிறேன்" என்றார்.

ஸ்டுடியோவுக்கு டெலிபோன் செய்து ஷூட்டிங் கிடையாது என்று தெரியப்படுத்தினார். மல்லிகாவை வற்புறுத்திப் படுத்திருக்கச் செய்து விட்டு டாக்டர் நடராஜனுக்கு டெலிபோன் செய்தார்.

ஐந்தாம் அத்தியாயம்

மலர்முகமும் மதிமுகமும்

கார் வந்து நிற்கும் சத்தத்தைக் கேட்டு விட்டு டாக்டர் நடராஜனை வரவேற்க வாசலுக்குச் சென்றார்கள் சுகுமாரனும் கதிர்வேலனும்.

முதலில் நடராஜனும் அவனுக்குப் பின்னால் நர்ஸ் நிர்மலாவும் கடைசியில் மணிசேகரனும் இறங்கி வந்தார்கள். நிர்மலாவின் வலது கையில் மருந்துகள் அடங்கிய ஒரு தோல் பெட்டி இருந்தது. இலேசான பெட்டிதான். என்றாலும் மென்மையான உடலமைப்புக் கொண்ட அவளுக்கு அதைத் தூக்குவது கொஞ்சம் சிரமமாகத்தான் இருந்தது. வலப்புறமாகச் சற்று வளைந்து கொடுத்தது அவளுடைய கொடி உடல். அதைக் கவனித்தான் கதிர்வேலன்.

வேகமாகப் படிகளில் இறங்கிச் சென்று அந்தத் தோல் பையைத் தான் வாங்கிக் கொண்டான். பையைப் பற்றியபோது பலம்பொருந்திய அவனுடைய விரல்கள் நிர்மலாவின் ஒரு விரலையும் சேர்த்துப் பற்றி யிருக்க வேண்டும். இல்லையானால் அவள் அப்படித் துடிதுடித்துப் போவானேன்? சடாரென்று தன்னுடைய கையை இழுத்துக் கொண்டு அவள் ஒரு அடி பின்னால் நகருவானேன்?

அவள் அப்படிச் செய்தது கதிர்வேலன் அவளுடைய விரலைப் பற்றியதால் ஏற்பட்ட வலியினாலா? அல்லது அவனுடைய கரம் தீண்டியதாலேயே ஏற்பட்ட இன்ப உணர்ச்சியா?

அந்த வலக்கை விரலை இடது கை விரல்களால் அழுத்திப் பிடித்துக் கொண்டு நிமிர்ந்துபார்த்தாள் நிர்மலா. கதிர்வேலனின் கண்கள் அவள் முகத்திலேயே லயித்திருந்தன.

டைரக்டர் சுகுமாரன் வழிகாட்டி அழைத்துச் செல்ல உள்ளே சென்ற நடராஜன் கட்டிலில் சாய்ந்து படுத்திருந்த மல்லிகாவைக் கண்டான். உடல் நிலை சரியில்லாததால் அவள் முகம் சற்று வெளிறிப் போயிருந்தது. அதில் உற்சாகமோ, மகிழ்ச்சியோ இல்லை. இருந்தபோதிலும் அந்த முகத்தின் அழகு சிறிதளவும் குறைந்ததாகத் தெரியவில்லை. மல்லிகா உற்சாகம் இழந்து மகிழ்ச்சியற்று இருப்பதே ஒரு தனி அழகாகத்தான் இருந்தது.

நாடியைப் பார்ப்பதற்காக அவள் கரத்தைப் பற்றினான் நடராஜன். அவள் தன் கரத்தைப் பின்னுக்கு இழுத்துக் கொள்ளவில்லை. ஆனால் வெளிறிப் போயிருந்த முகம் அவன் ஸ்பரிசத்தால் குப்பென்று சிவந்து போயிற்று. நடராஜனின் உடல் சிலிர்த்தது. அவள் கரத்தை விடுவித்து விட்டு அருகே இருந்த நாற்காலியில் அமர்ந்தான். படுக்கையில் இடது கையை ஊன்றி எழுந்திருக்க முயற்சி செய்தாள் மல்லிகா.

நடராஜனின்கண்கள் பொற்பாவையெனத் திகழ்ந்த மல்லிகாவின் திவ்ய சௌந்தர்யத்தில் லயித்தன.

கதிர்வேலனைச் சுற்றியிருந்த பூந்தோட்டம் மறைந்து போயிற்று. அருகே நின்ற மல்லிகாவின் வீடு நகர்ந்து நகர்ந்து கண்காணாத தூரத்துக்குச் சென்று விட்டது. காரிலிருந்து இறங்கி அவர்களைக் கண்டு தயங்கி நின்ற மணிசேகரன் இப்போது அங்கே இல்லை.

நடராஜனுக்கு எதிரே மல்லிகா படுத்திருந்த கட்டிலும் அந்த அறையும், அதில் உள்ள பொருள்களும் எங்கேயோ மாயமாய் மறைந்து போய் விட்டன. அருகே நின்ற சுகுமாரனும் எப்படியோ அவன் கண்களுக்குத் தென்படாமல் சென்று விட்டார்.

கதிர்வேலன் நிர்மலாவின் எழிலுருவத்தை மட்டும்தான் கண்டான். வேறு எதுவுமே அவனுக்குத் தென்படவில்லை.

நடராஜன் மல்லிகாவின் திவ்ய சௌந்தர்யத்தை மட்டும்தான் பார்த்தான் வேறு எதைப் பற்றியும் சிந்திக்கவோ, பார்க்கவோ அவனால் இயலவில்லை.

அவர்கள் நின்ற பூமிகூட, சிறிதுநேரத்தில் இலேசாக அவர்கள் கால்களுக்குக் கீழே இருந்து நழுவிச் சென்று விட்டது!

நிர்மலாவின் முழு உருவம் மறைந்து போய் நிர்மலமான நீல வானத்தில் தோன்றும் முழு மதியைப் போல அவளுடைய மதிமுகத்தை மட்டும் கண்டான் கதிர்வேலன்.

தெளிந்த நீர்ப்பரப்பிலே அப்போது தான் மலர்ந்த செந்தாமரை மலரைப் போன்ற மல்லிகாவின் எழில் முகத்தை மட்டும் தான் இப்போது நடராஜனால் பார்க்க முடிந்தது.

வெண்மையான மேகக் கூட்டங்களின் மிருதுத்தன்மையை நிர்மலாவின் கன்னங்களிலே கண்டான் கதிர்வேலன். வெண்பட்டின் மென்மையைக் கண்டான் நடராஜன்.

பிறைநுதலை ரசித்தான் கதிர்வேலன். பால் நிலவை அநுபவித்து மகிழ்ந்தான் நடராஜன்.

செங்கனி வாயைப் பார்த்தான் கதிர்வேலன். மாதுளை மொட்டைப்போன்று குவிந்திருந்த செம்பவழ இதழ்களைக் கண்டான் நடராஜன்

நிர்மலாவின் பவழச் செவ்வாயில் புன்னகை தோன்றியது. மல்லிகாவின் செவ்விதழ்களில் மந்தகாசம் தவழ்ந்தது.

மல்லிகையின் மணம் கதிர்வேலனைச் சூழ்ந்துகொண்டு அவன் தலையைக் கிறுகிறுக்கச் செய்தது. மனத்தை மயக்கும் சந்தன மணம் கமழ்வதை நடராஜன் உணர்ந்து செயலற்று நின்றான்.

கயல் விழிகளை நோக்கினான் கதிர்வேலன். கருவண்டுகளை ஒத்த நயனங்களைக் கண்டான் நடராஜன்.

மல்லிகாவின் விழிச்சுடர்கள் நடராஜனைச் சுட்டெரித்துத் துன்பப்படுத்தின.

நிர்மலாவின் வேல்விழிகள் கதிர்வேலனைத் தாக்கி வேதனையை அளித்தன

விஞ்ஞான முன்னேற்றம், முன்னேற்றம் என்று மார் தட்டுகிறீர்களே? விஞ்ஞானத்தினால் சாதிக்க முடியாததே கிடையாது என்று பெருமைப் படுகிறீர்களே? விஞ்ஞானத்தினால் ஏற்பட்டிருக்கும் அற்புதங்களைப் பறைசாற்று

கிறார்களே? யாராவது ஒரு விஞ்ஞானி காதலுக்கு விளக்கம் கூற முடியுமா?

காதல் எங்கே முளைத்து, எப்படித் தளிர்விட்டுத் தழைத்து வளர்ந்து, அதில் ஈடுபட்டிருப்பவர்களுக்குத் தேனினும் இனிய கனிகளை வழங்குகிறது என்பதைச் சொல்ல முடியுமா?

காதலுக்கு உருவம் இல்லை. கண்களால் பார்க்க முடியாது. ஆனால் இந்த இடத்தில் காதல் தளிர்த்திருக்கிறது என்று சொல்ல முடியும்.

நெருப்பைப் போல் காதலர்களைச் சூழ்ந்து கொண்டு தகிக்கிறது. ஆனால் அந்த நெருப்பின் ஜுவாலை எங்கே? நெருப்பின் ஜுவாலை இல்லையானால் காதலர்களின் உடலும் உள்ளமும் வாடி வதங்குகின்றனவே. அது ஏன்?

அந்தத் தீயை அணைக்க நீரினால் முடியாது. தண்மையான தென்றல் அந்தத் தீயைக் கொழுந்து விட்டு எரியும்படி செய்கிறது.

கண்களுக்குத் தெரியாத அந்தக் காதல் நெருப்பில் புகையும் சேர்ந்திருக்க வேண்டும். இல்லையானால் காதலர்களுக்கு உள்ளப் புகைச்சல் ஏன்? கண்களில் கண்ணீரை வரவழைப்பது எப்படி?

பிரிவாற்றாமையால் கண்ணீர் விடும் காதலர்களின் கண்களில் கூடும்போதும் நீர் துளிப்பது எதனால்?

ஒரே சமயத்தில் அளவுகடந்த இன்பத்தையும் எல்லையில்லாத் துன்பத்தையும் அனுபவிக்கச் செய்யும் விநோதமான உணர்ச்சி அது. ரசாயனச் சேர்க்கைகளின் மூலம் காதலுக்கு விளக்கம் கூறட்டும் விஞ்ஞானிகள்!

உலகப் பிரசித்தி பெற்ற விஞ்ஞானிகளாலேயே முடியாத அந்தக் காரியத்தை நாம் செய்ய முற்பட வேண்டாம். கதிர்வேலனுக்கும் நிர்மலாவுக்கும், நடராஜனுக்கும் மல்லிகாவுக்கும் எழுந்த உள்ளக் கிளர்ச்சிகளை அலசி ஆராய்ந்து பார்க்க முற்பட வேண்டாம்.

சிந்தனையற்று, செயலற்று ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டே நின்றார்கள் அந்த இரு காதல் ஜோடிகளும்.

அவர்களுக்கு அருகே நின்ற மணிசேகரன் மெல்லத் தன் தொண்டையைக் கனைத்துக் கொண்டான். நடராஜனுக்கு அருகே இருந்த சுகுமாரன் இலேசாக இருமினார். கதிர்வேலனும் நடராஜனும் மந்திரத்திலிருந்து விடுபட்டவர்கள் போல் திடுக்கிட்டுத் திரும்பினார்கள்.

''நர்ஸ்! நர்ஸ்!!'' என்று அழைத்தான் நடராஜன். கதிர்வேலன் முன்னே செல்லப் பின்னால் விரைந்தாள் நிர்மலா.

பரிசோதனை முடிந்த பிறகு மல்லிகா படுத்திருந்த அறையைவிட்டு வெளியே வந்த நடராஜனிடம் ''என்ன டாக்டர்? அவளுக்கு என்ன உடம்பு?'' என்று கேட்டார் டைரக்டர் சுகுமாரன்.

''அவள் சொல்வதையெல்லாம் பார்த்தால் 'அல்ஸராக' அதாவது குடலில் புண்ணாக இருக்குமோ என்று ஊகிக்கிறேன். எக்ஸ்ரே எடுத்துப் பார்த்த பிறகு தான் நிச்சயமாகச் சொல்ல முடியும்.''

''அடுத்த மாதம் முதல் வாரத்தில் மல்லிகாவை அழைத்துக் கொண்டு இலங்கைக்குப் போக வேண்டும். அதற்குள் அவளைக் குணப்படுத்த வேண்டியது உங்கள் பொறுப்பு.''

''இன்னும் அவளை முழுவதும் பரிசோதிக்கவில்லை. நர்ஸிங்ஹோமுக்கு அழைத்துச் சென்று எல்லாப் பரிசோதனைகளையும் செய்து முடிப்பதற்கு முன்னால் நான் எந்தவிதமான பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள முடியாது.''

''நீங்கள் என்ன செய்வீர்களோ எனக்குத் தெரியாது. 'அவளை இலங்கைக்கு அழைத்துச் செல்லலாம்' என்பதுதான் நீங்கள் எனக்குக் கொடுக்க வேண்டிய பதில்'' என்றார் சுகுமாரன்.

''மிஸ்டர் சுகுமாரன்! நான் டாக்டர். உங்கள் ஸ்டுடியோவில் வேலை செய்யும் சிப்பந்தியில்லை. இனி என்னிடம் அப்படித் தூக்கி யெறிந்து பேசாதீர்கள்!''

''மல்லிகாவின் மீது அவருக்குள்ள அன்பினாலும் அவள் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என்ற ஆர்வத்தாலும் அப்படிப் பேசுகிறார்! நீ அதைப் பொருட்படுத்த வேண்டாம்'' என்று சமாதானம் செய்தான் மணிசேகரன்.

''என்னால் இயன்றதைச் செய்யக் காத்திருக்கிறேன். ஆனால் எத்தனை நாட்களில் குணப்படுத்த முடியும் என்றெல்லாம் உறுதி கூற முடியாது.''

''உன்னால் இயன்றதைச் செய்கிறேன் என்று சொன்னாயே, அதுவே போதும்.''

''மல்லிகாவை நர்ஸிங்ஹோமுக்கு அழைத்துச் சென்று விடுவது நல்லது. பரிசோதனைகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சௌகரியமாக இருக்கும். அவளுக்கென்று ஒரு தனி அறை ஏற்பாடுசெய்து நர்ஸ் நிர்மலாவையும் அவளுக்குப் பிரத்தியேகமாக ஒதுக்கி விடுகிறேன்.''

''ரொம்ப சரி. ஆனால் மல்லிகா அதற்குச் சம்மதிக்க வேண்டுமே?''

''சம்மதிக்கும்படி செய்ய வேண்டியது உங்கள் பொறுப்பு. இங்கு அவள் தனியாக இருந்தால் யார் கவனிப்பார்கள்? அவள் தங்கையைத் தவிர வேறு ஒருவரும் இல்லை என்று முன்பொரு முறை சொன்னீர்களே?''

''ஆமாம். அவளை வற்புறுத்தி அழைத்து வந்து விடுகிறேன்.''

"எனக்கும் தினந்தோறும் இங்கே வந்து கவனிப்பது இயலாது. அவன் உடல் நிலை அலட்சியம் செய்யும்படியாக இல்லை என்பதை முதலில் உணர்ந்து கொள்ளுங்கள். எப்போதும் கைதேர்ந்த நர்ஸ் ஒருத்தியின் மேற்பார்வையில் இருக்க வேண்டியது அவசியம் என்று நினைக்கிறேன். நர்ஸிங்ஹோமுக்கு வந்து விட்டால் நானும் அருகிலேயே இருப்பேன். எந்த நிமிஷமும் வந்து கவனிக்கச் சௌகரியமாக இருக்கும்."

"அப்படியே செய்து விடுவோம்" என்றார் சுகுமாரன். பின்னர் மணியைப் பார்த்து, "இன்னும் இரண்டு மாதங்களுக்கு ஷூட்டிங்கெல்லாம் கிடையாது. அந்த ஹிந்திக்காரனுக்கு வேண்டுமானால் ஊருக்குப் போக விமானத்தில் டிக்கட் வாங்கி அனுப்பு" என்றார்.

"ஆகட்டும்" என்று சொல்லி விட்டு டாக்டர் நடராஜனைப் பின்தொடர்ந்து வாசலுக்குச் சென்றான் மணி.

நர்ஸ் நிர்மலா தயங்கி நின்று திரும்பிப் பார்த்தாள். கதிர்வேலனுடைய அகன்ற மார்பிலே அவள் பார்வை ஒரு கணம் நின்று பின்னர் மேலே சென்று அவன் கண்களை நோக்கின.

'எனக்கு விடை கொடுங்கள். போய் வருகிறேன்' என்று அவளுடைய கண்கள் கூறியதா? 'மீண்டும் உங்களைச் சந்திக்கும் பாக்கியம் கிட்டுமா' என்று கேட்டனவா? அவளுடைய நயனங்கள் பேசிய மொழியைப் புரிந்து கொள்ளப் பெருமுயற்சி செய்தான் கதிர்வேலன்.

அவள் கையிலிருந்த தோல் பெட்டியை முன் போலவே தான் வாங்கிக் கொண்டு வாசலில் நின்ற காருக்கு அவளைப் பின்தொடர்ந்து சென்றான். 'கேட்'டின் அருகில் டாக்டர் நடராஜனும் மணிசேகரனும் அவர்களுக்காகக் காத்து நின்றார்கள்.

திடீரென்று பிரகாசமான முன் விளக்குகளுடனும் பயங்கரமான கர்ஜனையுடனும் ஒரு ஜீப் கார் சாலையில் வந்து நின்றது. அதிலிருந்து 'திபு திபு' வென்று மூன்று போலீஸ்காரர்களும் ஒரு இன்ஸ்பெக்டரும் இறங்கினார்கள். போலீஸ்காரர்களுக்கிடையே விலங்கு மாட்டப்பட்ட இருவர் திருதிருவென்று விழித்துக் கொண்டு நின்றார்கள்.

போலீஸ் வீரர்கள் அணிந்திருந்த சிவப்புக் குல்லாய்களைக் கண்டான் கதிர்வேலன். அன்று மாலை அவன் கண்ட செக்கர் வானமும், மல்லிகா அணிந்திருந்த சிவப்புப் புடவையும், இப்போது அவன் காணும் போலீஸாரின் குருதிச் சிவப்பான தலைப்பாகையும், ஒன்றோடொன்று இணைந்து அவன் இதயத்தை உலுக்கிப் பயமுறுத்தின.

'போலீஸாரிடம் மாட்டிக் கொண்டு விழிக்கும் இவர்கள் யார்? எதற்காகப் போலீஸார் இங்கே வந்திருக்கிறார்கள்?' என்று ஏககாலத்தில் நடராஜனும் மணியும் நிர்மலாவும் யோசித்தார்கள்.

முன்னால் 'டக் டக்' என்று பூட்ஸ் கால்கள் ஒலிக்க நடந்து வந்த இன்ஸ்பெக்டர் "எங்கள் சோதனைகள் முடியும் வரையில் இந்த வீட்டை விட்டு யாரும் வெளியேறக் கூடாது. எல்லோரும் உள்ளே போங்கள்!" என்று கடுமையாக உத்தரவிட்டார்.

நடராஜனும் மணியும் நிர்மலாவும் திரும்பினார்கள். தன் பின்னால் நின்று கொண்டிருந்த கதிர்வேலனைக் காணாமல் திகைத்து நின்றாள் நிர்மலா.

அவன் தூக்கி வந்த டாக்டர் நடராஜனுடைய மருந்துப் பெட்டி மட்டும் தரையில் விழுந்து கிடந்தது. விழுந்த வேகத்தில் திறந்து கொண்டு மருந்துப் புட்டிகள் எல்லாம் மூலைக்கொன்றாகச் சிதறிக் கிடந்தன.

இனந் தெரியாத மனக் குழப்பத்துடனும் பீதியுடனும் அவற்றைப் பொறுக்கிச் சரி செய்து வைத்தாள் நிர்மலா. அவள் மனம் 'பகவானே! அவரைக் காப்பாற்று' என்று வேண்டிக் கொண்டிருந்தது.


(தொடரும்)



முன்னறிவிப்பு...

புதிய மர்பி ரேடியோ மாடல் 0724 மற்ற இதர ரேடியோக்களைவிட மிக வும் போற்றப்படும். ஏனெனில்

- மிக அழகிய பெட்டியில் அமைக்கப்பட்டுள்ளது.
- பல்லாண்டுகளுக்கு மிகச் சிறந்த முறையில் சேவை அளிக்கும்.



மாடல் 0724

- 6-வால்வ்
- ஆல்-வேவ்
- 8" பாண்ட்," முழுதும் பாண்ட்ஸ்பிரெட்
- ஏஸி அல்லது ஏஸி/டிஸி (இரு மாடல்கள்)
- நிகர விலை ரூ. 495/-: உள்ளூர் வரிகள் தனி

murphy radio

மர்பி ரேடியோ

பல ஆண்டுகளுக்கு உங்களை மகிழ்விக்கும்!

இணைந்த துருவங்கள்

சி. பி. சுப்பிரமணியம்



தெருவிலே, நான் பெரிய மனிதன் என்று நிரூபிக்கவோ, அல்லது அமானுஷ்யமான காரியங்களைச் செய்து புகழ் பெறவோ எங்கள் தெரு சுப்பு ஒரு காரியம் செய்து விட்டான்! அதாவது வாயாடி என்று பலராலும் போற்றப் படும் அம்பிகா என்ற பெண்ணைத் தைரியமாகத் தோன்றியபடி திட்டிவிட்டான்!

எங்கள் தெருவோருக்கு அம்பிகா என்றாலே ஒருவித பயம். 'அவளா? நாம் மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்' என்று ஒதுங்கி விடுவார்கள் பெரியவர்கள். 'பெண்ணல்ல, காளியின் மறு உருவம்' என்று இளவட்டங்கள் பகிரங்கமாகத் தோல்வியை ஒப்புக் கொண்டு ஒதுங்குவார்கள். இப்படிப்பட்டவளைத் திட்டுவது என்பது சாதாரணமான செயலா?

களவு நடந்த இடத்தைத் தேடிப் போகும் சி.ஐ.டி.யைப் போல வேகமாகச் செய்தியை அறிய ஸ்தல விசாரணைக்கு ஓடினேன். சுப்பு வெற்றி பெற்ற வீரனைப் போல் நின்று கொண்டு அலட்சியமாக வானத்துக்கும் பூமிக்குமுள்ள தூரத்தைக் கணக்கு பண்ணிக் கொண்டிருந்தான். அம்பிகாவின் அலறல் சோக கீதம் பாடும் பாடகனையே அழ வைத்து நாம் இப்படிப் பாடுவோமா என்ற நிலையை ஏற்படுத்தி விடும்!

தெரிந்தோ, தெரியாமலோ சில அதிகாரங்களைத் தெருவார் 'பெரியவர்' என்ற மதிப்பில் எனக்குக் கொடுத்திருந்ததால் இக்கட்டான சமயங்களில் அந்த அதிகாரங்களை உபயோகப்படுத்துவேன். இப்போது சுப்புவைக் கேள்வி கேட்க வேண்டிய நிலையில் நின்றிருந்த நான், வேடிக்கை பார்க்கும் பெண்கள் ஆண்கள் எல்லோரையும் ஒரு தோட்டம் விட்டுக் குரலைச் சரி செய்து கொண்டு ஆரம்பித்தேன் கேள்விகளை.

"சுப்பு!"

"மாமா! நானே எல்லாவற்றையும் சொல்கிறேன்."

"இல்லை. நான் சொல்கிறேன்."—இது அம்பிகாவின் குரல்.

"ஒவ்வொருவராகச் சொல்லுங்கள்.... சுப்பு! சொல்லு!"

"மாமா! நான் நண்பன் கோபால் வீட்டில் சாப்பிட்டு விட்டு வெளியே தாம்பூலத்தைத் துப்பினேன். அது இந்த அம்மாள் மீது பட்டு விட்டது. இதற்குக் கோபித்துச் சண்டை போடுகிறாள் இந்த அம்மாள். நானாக வேண்டுமென்றே துப்பியிருந்தால் சண்டைக்கு வர நியாயம் உண்டு."

சுப்பு இப்படிச் சம்பவத்தை விளக்கிக் கொண்டிருந்தபோது அம்பிகா அடிபட்ட வேங்கையாகச் சீறி முன்னே வந்தாள்.

"பொய் ஏன் சொல்கிறாய்? என்னைக் கண்டால் உனக்குப் பிடிக்காது. நான் போகும் போது துப்பி அவமானப்படுத்தி யிருக்கிறாய். இதுவரை என்னை யாரும் திட்டியதில்லை; மரியாதைக் குறைவாக நீதான் பேசி அவமானப்படுத்துகிறாய்."

எனக்குத் தர்மசங்கடமான நிலை. குற்றம் யாருடையது என்று சொல்வது? 'கோழை' 'அப்பாவி' என்று அழைக்கப்பட்டவன் வீரகர்ஜனையாகப் பேசுவது எனக்குமட்டு மல்லாமல், தெருவாருக்கே ஒரு ஆச்சரியத்தைக் கொடுத்தது. வாயாடி அம்பிகாவுக்குச் சாதகமாக ஏதாவது சொல்லி வைத்தால் என்னையும் இளவட்டங்கள் கேலி செய்யும் என்று எனக்குத் தெரியும். என்ன செய்வது?

'தாம்பூலம் துப்பும்போது பார்த்தது யார்?' கேள்வியைக் கேட்டபோது சுற்றியிருந்தவர்கள் ஒருவரும் பேசவில்லை. அதாவது தாங்கள் சம்பவம் நடந்ததைப் பார்க்கவில்லை என்ற பொருளில் வாய் மூடி மௌனிகளாய், சிலையாய் நின்றிருந்தார்கள்.

"சரி! துப்பும்போது பார்த்தவர்கள் இல்லை. அவரவர் மனசாட்சியின்படி நல்லவர்கள். வீண் சண்டை எதற்கு?" என்று முடிவு கட்டினேன்.

அம்பிகா என்னைச் சரமாரியாகத் திட்டிக் கொண்டே போனாள். சுப்புவை வாழ்த்த ஓடி வந்தார்கள் சிலர். நான் மௌனமாக வீட்டையடைந்தேன். நல்லவேளையாகச் சுப்பு என்னை என்ன சொல்லித் திட்டினாள் என்று கேட்கவில்லை!

'இந்தச் சுப்புவுக்கு எப்படி இவ்வளவு தைரியம் வந்தது?' என்று பெரியவர்கள் பேசிக் கொண்டதை இந்தக் காதால் கேட்டேன். 'அடி இந்தச் சுப்பு அம்மாஞ்சி அப்பாவி இல்லை. பெரிய ஆள்' என்று பெண்கள் பேசிக் கொண்டு கும்பல் கும்பலாகப் போவதை இந்தக் கண்கள் கண்டு விட்டன.

'சுப்பு உண்மையிலேயே பெரியவன்தானா?' என்று எனக்குள் நானே பலதடவைகள் கேட்டுக் கொண்டு கண்ணை மூடியபோது, 'ஸார்!' என்ற குரல் கேட்டது.

'சே...சே...! விசுவாமித்திரன் தவத்தைக் கெடுக்க வந்த மேனகை போல் என் அழகான தூக்கத்தைக் கெடுப்பதற்குக் கங்கணம் கட்டிக் கொண்டு அல்லவா வருகிறார்கள்' என்று சொல்லிக் கொண்டே படுக்கையிலிருந்து மெதுவாக எழுந்தேன்.

என்னை அழைத்தவர் திருவாளர் நிஜபந்து என்ற பெயரைக் கொண்டவர், அகில உலகப்

பிரச்னைகள், தெருப் பெண்கள் வம்பளப்பு, தெரு நாய்களின் உபத்திரவங்கள்—இவைகளைப் பற்றி அழகாகச் சொல்லி மனத்தைக் கவர்ந்து விடுவார். ஒரு கல்யாணத்தில் அவரை எனக்கு அறிமுகம் செய்து கொள்ளும் பாக்கியம் ஏற்பட்டது.

"ஐயா! என்னை என் மாமாவும், வீட்டுக்காரியை அவள் வீட்டாரும் தோளின்மீது போட்டுக் கொண்டு கல்யாணத்தை நடத்தினார்கள். அவள் வாழைப்பழம் வைத்திருந்ததை. வெடுக்கெனப் பிடுங்கிக் கல்யாணப் பந்தலிலேயே அழ வைத்தேன். உம்...இப்போதெல்லாம் கல்யாணம் அரைநாளில் முடிந்து போய் விடுகிறது!" என்றார் அன்று.

வந்தவரை, "வாருங்கள்! வாருங்கள்!" என்று வரவேற்றேன்.

"கப்புவின் துணிச்சலைப் பற்றிக் கேள்விப் பட்டேன். சாதுவான மாடு கூடச் சில சமயம் எதிர்க்கும். கப்புவின் நிலையும் அதுமாதிரி!"

"உம்!"

"கப்பு, 'நீ பெண்ணா?' என்று அம்பிகாவைப் பார்த்துப் பேசியது நம் தெருவாருக்கே சவால் விடுவது போல் இருக்கிறது."

"ஓஹோ!"

"தேசிங்குராஜன் முரட்டுக் குதிரையை அடக்கியதைப் போல் கப்பு அம்பிகாவின் வாயை அடக்கினான் என்று எழுத்தாளன் ஏகாம்பரம் எழுதி வருவதாகக் கேள்வி!"

"அவ்வளவு தூரம் பரவிவிட்டதா செய்தி?"

"செய்தி சாமானியமானதா? அலை உலக சமாதான தூதுகோஷ்டி நம் தெருவையே பார்க்க வந்தாலும் ஆச்சரியமில்லை...என்ன நான் சொல்வது சரியா?"



திருவாளர் நினைபந்து கப்புவைப் பற்றி அற்புதமாக வர்ணித்துக் கொண்டு வந்த சமயம், பாழும் தூக்கம் வந்து தொலைந்தது. 'ஹா' என்று வாய் விரிந்தது. கண்கள் மேலும் கீழும் சுற்றின. உலகம் ஆடுவது போன்ற பிரமை ஏற்பட்டது.

"மயக்கமா?"

"ஆமாம்!"

"அடடா! கப்புவின் தம்பியைப் பற்றிச் சொல்ல வந்தேன். சரி, தூங்கு!"

அவர் போகும்போது கடைசிச் செய்தியை அம்பாக இதயத்தில் தைத்துவிட்டுப் போனது மனத்திலே மீண்டும் சிந்தனைகளை எழுப்பியது.

என் கண்முன் கப்புவின் தம்பி சந்திரன் நின்றான். அழகைப் பொழியும் நிலவுதானோ என்று பார்க்கும்படி முகம் அமைந்திருந்தது. சுருள் சுருளான கேசம் காற்றில் அலைவது, அதை அவன் ஒய்யாரமாக ஒதுக்குவது எங்கள் தெருப் பெண்கள் காணும் திருக்காட்சி. நடப்பதிலேகூட ஒரு லாவகம். எனக்கே சந்திரன் நடக்கிறானா, நாட்டியமாடுகிறானா என்று ஐயம் ஏற்பட்டு விடுமானால் அவன் நடையைப் பார்த்துப் பெண்களின் கமலக் கண்கள் வியப்பது விந்தையல்லவே!

தாம்பூலச் சம்பவம் நடந்து ஐந்து நாட்களுக்குப் பிறகு, ஒருநாள் என் எதிரிலே அம்பிகா ஆஜரானபோது நடுங்கியே விட்டேன். மனம் என்ன பாடுபட்டது என்பது ஆண்டவனுக்கே தெரியும். விரல்கள் தந்தியடித்தன. சாபத்தைக் கொடுக்கும் முனிவனைக் கண்டு அஞ்சும் பாமரனைப்போல் நான் இருந்தேன்.

"இந்தக் கப்பு என்னை அவமானப்படுத்தி அனுப்பியது போதாது என்று, அவனது தம்பி வேறு எங்களுடைய குடும்பத்தையே கெடுத்து விடுவார் போலிருக்கிறது" என்று பீடிகையுடன் ஆரம்பித்தாள் அம்பிகா.

'சந்திரன் வேறு அம்பிகாவின் கோபத்துக்கு ஆளாகி விட்டானா?' என்ற கேள்விக் குறியுடன் பார்த்தேன்.

"என்ன விஷயம்?"

"பாருங்கள், இந்தக் கடிதத்தை. எனக்குத் தலையை வெளிக் காட்ட முடியவில்லை" என்று சொல்லிக் கொண்டே அவள் ஒரு கடிதத்தைக் கொடுத்தாள்.

கடிதம் சந்திரனுடையது! அதுவும் காதல் கடிதம்!! அம்பிகாவின் தங்கை ரோகிணிக்குத் தானா எழுத வேண்டும்?

கண்கள் எழுத்துக்களின் மீது ஓடின. இடையே சில வார்த்தைகள் ....அடடா! என்ன கற்பனை! என்ன கற்பனை!

"ரோகிணி! நீ கறுப்பு என்று ஒதுக்குவேனோ என்ற பயம் உனக்கு வேண்டாம்! திராட்சை கறுப்பாக இருந்தாலும் இனிப்பு இல்லாமலா போய் விடுகிறது? உன்னைப் பழைய பல்லவியில்—அதாவது அன்பே, அழகே, ஆடிவரும் மயிலே, அன்னமே என்று அழைப்பது எனக்குப் பிடிக்கவில்லை. உன்னைப் புதுமையாக அழைக்க நான்கு நாட்களாகத் தேடி வருகிறேன் பெயர்களை!

"வானத்துச் சந்திரனுக்கும் ரோகிணிக்கும் இருக்கும் அன்பு போல் நம் அன்பு இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் உன் அக்காள், என் அண்ணா நம்மை விடமாட்டார்கள் போலிருக்கிறது!

"வடதுருவமும் தென்துருவமும் சேர்வதில்லை என்று நாம் அறிவோம். என் அண்ணா சமீப காலமாக உன் அக்காள் பேச்சை எடுத்தாலே ஒதுங்குகிறார். உன் அக்காள் நிலை உனக்குத்தான் நன்றாகத் தெரியுமே!

"பகை நடுவிலேதான் அன்புமலர் பூக்குமோ! நாம் அடிக்கடி சந்திக்கும் நிலை பந்து மலர் சோலை நீண்ட நாள் இருக்க வேண்டும்! சேவபந்து என்ற திவ்யமான பெயர் கொண்ட ஆண்டவன் நமக்கு என்றைக்கு ஒரு வழியைக் காட்டுவானோ......"

"பார்த்தீர்களா! இந்த அநியாயத்தை" அம்பிகா உறுக்கியபோது திணறிவேன்.

"கண்டிக்க வேண்டியதுதானே இதற்கு?"

மீண்டும் கேள்வி வருவதைக் கண்டு 'உம்' என்று சொல்லித் தப்பினேன்.

"மானமாக வாழ விடமாட்டார்கள் போலிருக்கிறது அண்ணனும் தம்பியும்" என்று சொல்லிவிட்டு வீராங்கனை போன்று அம்பிகா தெருவில் நடந்தாள்.

அன்று காலை எட்டு மணி இருக்கும்.

"இந்தக் கப்பு அம்பிகாவைத் திட்டுவதும், தம்பி சந்திரன் ரோகிணியை நேசிப்பதும் வேடிக்கையாக இல்லையா?" என்று கேட்டுக் கொண்டே வந்தார் நிலபந்து.

"ஆமாம். உங்கள் பெயரும் கடிதத்தில் அடிபடுகிறதே. ஆண்டவனாக இருந்து சுமுகமான சூழ்நிலை ஏற்படுத்துங்களேன்!"

"ஊஹூம். நம்மால் முடியாது" என்று கையை விரித்து விட்டார் நிலபந்து!

இதற்கு மறுநாள் கப்பு என்னிடம் வேகமாக ஓடி வந்தான்.

"மாமா! என் தம்பி சத்தியாக்கிரகம் செய்கிறான்" என்று ஆரம்பித்தான்.

"ஆஹா! உன் தம்பி சந்திரனா? பேஷ்! பேஷ்! வெற்றி கிடைக்க என் வாழ்த்து!"

"ஐயோ! புதுமையான சத்தியாக்கிரகம் இது" என்றான்.

"என்னது?"

"ஆமாம், மாமா! ஒரு பெண்ணுக்காக இந்த வீரன் செய்யும் காரியம்! சரியாகச் சாப்பிடுவதில்லை; பேசுவதில்லை."

"சுதந்திரம் வாங்கச் சத்தியாக்கிரகம் செய்த வீரர்கள் பரம்பரையல்லவா? இப்போது காதல் சுதந்திரம் கேட்கிறான் பக்தன். கப்பு! ஆங்கிலேயரைப் போல் இல்லாமல் அவனுக்கு உடனே கொடுத்துவிடு. ஆனந்தப் பள்ளு பாடட்டும்" என்றேன் நான்.

"அம்பிகாவின் தங்கைக்காகத் தம்பி உருகுவது! சே......சே......மானம் போகிறது!"

"சண்டை கல்யாணத்திலே முடியலாம்." என் வார்த்தைகளை அவன் கேட்டதாகத் தெரியவில்லை. நெருப்பு புகைகிறது என்று தெரிந்து விட்டது. விளைவு எப்படியிருக்குமோ என்ற கவலையால் வெளியே பார்த்தேன்.

ஒரு வாரம் ஓடி மறைந்தது.

மனைவி "தெரியுமா சேதி?" என்று ஆரம்பித்தாள். "என்ன?" என்று அவள் முகத்தைப் பார்த்துக் கேட்டேன்.

"சந்திரனையும் ரோகிணியையும் காணவில்லையாம். ஒரே ரயிலில் அவர்கள் போனதாகப் பேசிக் கொள்கிறார்கள்."

செய்தி பிரமிப்பைக் கொடுத்தது! அதே சமயம் பிறர் கேலி செய்யும்படியான காரியங்கள் நடந்துவிட்டனவே என்ற வருத்தம் மனத்தில் எழுந்தது. நான் என்ன செய்ய முடியும்?

அம்பிகாவைத் தெருவிலே காண முடியவில்லை. ஒருவேளை வீட்டுக்குள் அடைந்து வேதனைப்படுகிறாளோ! உயிருக்கு உயிராய் நேசித்தவர்களை விட்டுப் போக அவர்களால் முடியுமானால் அன்பின் சக்தியை - காதலின் சக்தியை என்னவென்று கூறுவது?

ஒருநாள் செய்தித் தாளில் திடீரென்று ஒரு விளம்பரம் வந்தது!

'அன்பு மிக்க சந்திரா, ரோகிணி!

உங்கள் திடீர் மறைவு எங்களுக்குப் பெரும் அதிர்ச்சி! நீங்கள் கோரியதைச் செய்யச் சித்தமாக இருக்கிறோம். எங்கள் உள்ளத்திலே இன்ப விளக்கை ஏற்றுங்கள். உடனே எங்கிருந்தாலும் வாருங்கள்.

கப்பு, அம்பிகா.'

ரஷ்யா பறக்க விட்ட ஸ்புட்னிக் செய்தியை விட இந்த விளம்பரம் தெருவைக் கலக்கியது. 'பாம்பும் கீரியும் ஒன்றாக இருக்கும் நிலை போன்றல்லவா இருக்கிறது!' என்று பேசிக் கொண்டார்கள் சிலர்.

மனைவியை அவள் பிறந்த ஊருக்கு அனுப்புவதற்காகப் போயிருந்த நான், ரயிலடியில் கப்புவையும் அம்பிகாவையும் ஒன்றாகப் பார்த்தேன். சந்திரன், ரோகிணி இருவரும் வரப் போகிறார்களாம் அந்த வண்டியில்!

டானிக் என்பது என்ன?

அது

★ நரம்புகளுக்குப் புத்துயிர் அளிக்கிறது

★ பசியை அதிகரிக்கச் செய்கிறது

★ ஜீரண சக்தியை அதிகப்படுத்துகிறது

★ மலப் போக்கைச் சுலபமாக்குகிறது

★ இரத்த ஓட்டத்தை ஒழுங்கு செய்கிறது

★ சுரப்பிகளுக்குப் புது சக்தி அளிக்கிறது

★ மனதும் உடலும் இணைந்து செயல்புரியச் செய்கிறது


★ ஆரோக்ய உணர்ச்சியைத் தருகிறது

ஒன்பது ரத்தினங்களின்

சேர்க்கையாலான

நவரத்ன கல்பம்

இவற்றையெல்லாம் செய்கிறது



கவிராஜ்
பண்டிட்
துர்க்காதத்த சர்மா
வைத்திய வாசஸ்பதி
அவர்களால்
கண்டுபிடிக்கப்பட்டது

இதர விவரங்களுக்கு எழுதவும்

NAVRATNA KALPA PHARMACY

JULLUNDUR CITY (India)

Grams: NAVARATNA Phone: 401

Bleeding Gums

இரத்தம் கசியும் ஈறுகள்

பயோரியா நோயின் பயங்கர அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்தவுடன் சீழ் பிடித்தல், உமிழ்நீர் ஊறுதல், வாய் நாற்றம், பற்கள் ஆடுதல் முதலியவைகளும் ஏற்படுகின்றன. உடலில் கலந்து விடும் இந்தச் சீழ் வயிற்று வலி, தலை வலி, முடக்கு வாதம், பலவீனம் முதலிய உபாதைகளை உண்டாக்கி விடுகின்றன. லைகால் என்னும் ஈறுகளைக் கழுவும் மருந்து பல் சம்பந்தமான எல்லா ரோகங்களையும் தீர்க்கும் சக்தி வாய்ந்ததாகும். விஞ்ஞான முறையில் தயாரித்தது. பிரபல டாக்டர்களின் அங்கீகாரம் பெற்றிருப்பதுடன் ஆஸ்பத்திரிகளில் உபயோகப் படுத்தப்பட்டு வருகிறது.

விலை ரூ. 2/-

உங்கள் மருந்து வியாபாரியிடம் கேளுங்கள் அல்லது கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதுங்கள்

அப்பா & கோ., மதராஸ்



சகிக்க முடியாத உபாதை: தூக்கமும் கிடையாது: கடுமையான இந்த இரைக்கும் உபாதை நிவர்த்திக்கும்

எப்ரிலைம்

EPHRILIME

நீண்ட நாள்பட்டதும், மிக்க உபாதை தரக்கூடியதுமான மார்ச்சளி, ஆஸ்த்மா முதலிய நோய்களுக்கு ஓர் சிறந்த ஹானியற்ற மருந்து.

யூனியன் டிரக் கம்பெனி லிமிடெட்.

மதராஸ் டிப்போ

2, ஜோன்ஸ் லேன் :: மதராஸ்-1

இன்பமாய்ப் பொங்கினள் காவிரியாள்

★

ஆடிப் பதினெண் தேதியிலே—பொன்னி
ஆற்றங் கரையின் மருங்கினிலே
சூடிய முல்லைச் சிரித்திடவே—பெண்கள்
கூடியே மங்கல நூலணிந்தார்!

காவிரி அன்னை கருணையிலே—எங்கும்
கன்னலும் செந்நெலுமே—விளைந்து
பூவிரி சோலைக் கனிமரங்கள்—நன்கு
பூத்துக் குலுங்கிடவே பணிந்தார்!

முக்கனி சர்க்கரை காப்பரிசி—மஞ்சள்
முஞ்சூறு வாகனன் முன்னிலையில்
வக்கணை யாகவே தான்படைத்து—மக்கள்
வாழ்வு உயரக் கரங் குவித்தார்!

தண்டமிழ் நாட்டின் தவத்தினிலே—வந்த
தாயவள் நல்கும் திரைவளத்தால்
கண்டவர் வியக்கும் நெற்கழனி—கோடி
காணவே வேண்டினர் ஆடவர்கள்!

சித்திரம் நிறைந்த சப்பரங்கள்—அங்கு
சீருடன் வரிசை யாயிழுத்து
பத்திரமாக ஆற்றில் குளித்து—தெய்வப்
பாடல்கள் பாடினர் பையன்களும்!


கன்னியர் அடிக்கும் கும்மியிலே—இளங்
காதலர் செல்லும் படகினிலே
இன்னிசை செந்தமிழ் கீதத்தையும்—கேட்டு
இன்பமாய்ப் பொங்கினள் காவிரியாள்!

பெற்றவள் உற்றவளு மவளே!—தமிழ்
பேரின்பம் தந்தவ ளுமவளே!
கற்றவர் சிற்பிக் கவிஞர்களை—நாடு
கண்டிடப் பூத்தவ ளுமவளே!





உமையாள்புரம் சுப்பிரமணியம்



தனி அழகு!

திரு நா. பார்த்தசாரதி அவர்களின் 'பாண்டிமாதேவி' தென்பாண்டிய நாட்டுச் சரித்திரத்தை அழகாகச் சித்திரிக்கிறது. தக்க சான்றுகளுடன் அவர் அக்கதையைச் சுவைமிக்க காவியமாக்குகிறார். பாத்திரங்களின் படைப்பும் கதையும் கட்டுக்கோப்பாகச் செல்வதே ஒரு தனி அழகு! படிக்கப் படிக்கத் தெவிட்டாத இன்பமாக இருக்கிறது. சொற்சுவையும், பொருட்சுவையும், வீரச்சுவையும், அன்புச் சுவையும், அழகுச் சுவையும் மிகுந்த இத்தொடர்கதையை நாங்கள் பிரதிவாரமும் ஆவலோடு எதிர்பார்க்கிறோம்.

கொழும்பு
18-7-58

இ. செல்லையா

தீ அணைக்கும் படை

இவ்வூரில் நடந்த பெரிய தீ விபத்தில் கடைத் தெருவிலுள்ள மாம்பழ, வளையல் கடைகளும், முப்பது வீடுகளும், துணி ஆலையும் சேதத்துக்குள்ளாயின. அதனால் பல லக்ஷக் கணக்கான ரூபாய்கள் நஷ்டம். நெருப்புப் பிடித்தது, காலை பதினொரு மணி சுமாருக்கு. காற்றுக் காலம் வேறு. அது சமயம் விழுப்புரம் தீ அணைக்கும் படைக்கு டெலிபோன் செய்தபோது அங்கு படையினர் இல்லை. திருவண்ணாமலை, செங்கல்பட்டு, கடலூர் போன்ற பல இடங்களுக்கு டெலிபோன் செய்து தீ எரிந்து அணைந்த பிறகு மாலை மூன்று மணி சுமாருக்குத் தீ அணைக்கும் படை வந்தது. இதைப் போல் இந் நகரில் பல விபத்துக்கள் நடந்துள்ளன. விரைவில் ஒரு தீ அணைக்கும் படையை இந் நகரில் அமைப்பதுடன், வீடு இழந்து நிற்கும் குடும்பத்துக்கு நிவாரணம் வழங்க முன்வர வேண்டும்.

திண்டிவனம்
17—7—58

நா. முத்துசாமி
செ. ப. சுப்ரமணியன்

கமிட்டித் தீர்மானம்

தேவகோட்டை நகர காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டி கூட்டம் ஜூலை 21ந் தேதி நடைபெற்றது. கீழ்க்கண்ட தீர்மானம் அதில் ஏக மனதாய் நிறைவேற்றப்பட்டது.

"பாரத நாட்டின் இன்றையப் பொருளாதார நிலை பற்றிப் பொருளாதார நிபுணர்களின் கருத்துக்களைப் பொதுமக்கள் அறியும்வண்ணம் 'கல்கி' வார இதழில் பிரசுரிப்பதற்கு ஏற்பாடு செய்து பிரசுரித்துவரும் கல்கி ஆசிரியர் அவர்களுக்கு இக்கமிட்டி தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறது. அத்துடன் இன்னும் தொடர்ந்து இது போன்று பல துறைகளிலும் அரிய கருத்துக்களைத் தெரிவிக்கும் பற்பல கட்டுரைகளைப் பிரசுரிக்குமாறு இக்கமிட்டி கேட்டுக் கொள்ளுகிறது."

தேவகோட்டை
22—7—58

ஈ. எல். சுப்பையா,
தலைவர், நகர இளைஞர் கா. கமிட்டி

மனமார்ந்த வாழ்த்து!

'கல்கி' கடந்த 17 ஆண்டுகளாகச் சீரும் சிறப்புடனும் தமிழுக்குப் பணியாற்றி வருகிறது. 27-7-58 கல்கி தலையங்கம் தமிழர்களைத் தட்டி எழுப்புகிறது.

தமிழர்களின் மன நிலையைப் பிரதிபலிக்கிறது. "புலி வந்துவிட்டது, ஜாக்கிரதை" என்ற அந்தத் தலையங்கம்.


கல்கியின் பதினெட்டாவது ஆண்டு பிறப்புக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.


தாரமங்கலம்
24—7—58

ஏ. நடராஜன்

விறுவிறுப்பான கதை

திரு நா. பார்த்தசாரதி அவர்கள் தொடங்கியிருக்கும் புதிய சரித்திரத் தொடர்கதை ஆரம்பத்திலேயே விறுவிறுப்பாக இருக்





கிறது. கன்னியாகுமரிக் கோயில், ஊர், கடல் முதலியவற்றின் வர்ணனைகளைப் படிக்கும்போது நேரே பார்த்து அனுபவிப்பதைப் போல் இருக்கிறது. தவிர கதையின் முக்கிய பாத்திரங்கள் அநங்க விலாசினி, பகவதி இருவர்களின் வர்ணனைகளும் "வினு" அவர்கள் வரைந்திருக்கும் சித்திரங்களும் உள்ளத்தைக் கவருகின்றன. நேயர்கள் அனைவரும் இத்தகையதொரு விறுவிறுப்பு வாய்ந்த தொடர்கதையை ஆவலுடன் வரவேற்பதுடன் ஓவியரையும் கதாசிரியரையும் பாராட்டத் தவற மாட்டார்களென்று நம்புகிறேன்.

திருச்சி-8
5—7—58

பி. வி. குப்புசாமி

குழந்தை பட்டினி

குழந்தைகள்தான் இந்நாட்டின் வருங்காலச் செல்வங்கள். போதிய தாய்ப்பால் இல்லாத காரணத்தினால் என்னுடைய குழந்தைக்குச் செயற்கைப் பால் அதாவது டுமெக்ஸ் கொடுத்து வந்தேன். கடந்த இரண்டு மாதங்களாக அதன் விலை 1 பவுண்டின் விலை ரூ. 3.75ல் இருந்து ரூ. 6 ஆக உயர்ந்து விட்டது. இந்த வாரத்தில் ஒரு கடையிலும் இது ஸ்டாக் இல்லை. வேறு வகைப் பால் டின்களும் கிடைக்கவில்லை. இந்நிலை நீடித்தால் குழந்தைகளின் கதி என்னவாகிறது?

கீழச்சிவல்பட்டி
2—7—58

ஜி. சுப்பிரமணியன்

அறிவூட்டும் கட்டுரைகள்

பாண்டிமாதேவி தொடர்கதை விளம்பரத்தைக் கண்டவுடன் கல்கி வாங்க வேண்டும் என்ற ஓர் ஆர்வம் ஏற்பட்டு, சென்ற மூன்று வாரங்களாக வாங்கி வருகிறேன். கதையின் போக்கும் அதற்கென்றே ஏற்பட்டது போல் படங்களும் இயற்கையாகவே அமைந்துள்ளன.

13-7-58 முதல் 'இன்றையப் பாரதத்தின் பொருள் நிலை' என்ற தலைப்பில் வந்துள்ள ஆராய்ச்சி அரங்கக் கட்டுரைகள் அறிவூட்டுவனவாக அமைந்துள்ளன.

திருச்சி
17—7—58

ஆர். சுப்பிரமணியன்

தப்பு அபிப்பிராயம்!

இந்தியாவை ஆளும் கட்சியாகிய காங்கிரஸ் அந்நிய நாடுகளில் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கும் போது மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியது அவசியம்.

தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் ராஜாராம் நாயுடுவின் கூற்றுக்கள் இலங்கை அரசினர் நடத்தும்பிரசாரப்பத்திரிகையான 'ஸ்ரீலங்கா' ஜூன் 25ந் தேதி இதழில் வெளிவந்துள்ளன. இலங்கைத் தமிழருக்கு அவை எத்தகைய மனவருத்தத்தை அளித்துள்ளன என்பதை அதிகார பீடத்தில் வீற்றிருக்கும் ராஜாராம் அவர்கள் அறிந்து கொள்வாரா?

இலங்கை
17-7-58


ஆ. சபாரத்தினம்

சாலை மரங்கள்

சாலைகளில் தரநிலை இல்லாத, வலுவற்ற மரங்களை நட்டு வளர்ப்பதால் அம்மரங்கள் கனத்த மழை, காற்றுக்குத் தாங்க இயலாது ரஸ்தாக்களில் நடந்து செல்லும் பிரயாணிகள் மேலும், பல வண்டிகள் மேலும் வீழ்ந்து விடுகின்றன. அதனால் உயிர்ச் சேதமும் நஷ்டமும் ஏற்படுகின்றன. ஒவ்வொரு ரஸ்தாவிலும் புளியம் விதைகளை நட்டு மரமாக்கினால் பிரயாணிகளுக்கும், வண்டியில் செல்பவர்களுக்கும் இத்தகைய இன்னல் ஏற்படாது.

சென்னை
28-7-58

எம். முனிசாமி



பாலர் மலர்

தாகமும் தியாகமும்

அஜயம்

அன்று சுதந்திரத் திருநாள். 'வீரத் தியாகிகளை வணங்குவோம்!' என்ற தலைப்பில் தேசத் தலைவர் பலரின் படங்கள் அன்றையச் செய்தித் தாளை நிரப்பியிருந்தன. 'பாழ்பட்டு நின்றதாமோர் பாரத தேசந் தன்னை வாழ்விக்க வந்த மகாத்மா' அந்தத் தியாக புருஷர்களின் வரிசையிலே நடுநாயகமாக விளங்கினார். 'சுதந்திரம் நமது பிறப்புரிமை. அதை அடைந்தே தீருவோம்' என்று வீர கர்ஜனை புரிந்த தீரர் திலகர் ஒரு புறம் காட்சி அளித்தார். தென்னாட்டுத் திலகர் என்றும் கப்பலோட்டிய தமிழர் என்றும் பல்லோராலும் போற்றப்பட்டு, தியாக வேள்வியில் குதித்துச் சிறைத் தண்டனை பெற்றுச் செக்கிழுத்த வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் ஒரு புறம் கம்பீரமாகத் தோற்றம் அளித்தார். 'பஞ்சாப் சிங்கம் எனப் புகழ்பெற்ற லாலா லஜபத்ராய் என்ன? வங்கத்து வீரர் எனப் பெயர் வாய்ந்த விபின்சந்திரபால் என்ன? தேசத்துக்காகத் தமது சுகபோகமனைத்தையும் துச்சமாகக் கருதிய மோதிலால் நேரு என்ன? சுதந்திர இந்தியச் சேனையை நிர்மாணித்து, 'நேதாஜி' என்று பட்டப் பெயர் பெற்ற சுபாஷ் சந்திரபோஸ் என்ன? எல்லோரும் தியாக சிகரங்களாகக் காட்சி அளித்தனர். இவர்களைத் தவிர, வீரத் தியாகங்கள் பல புரிந்து புகழுடம்பு அடைந்திருந்த இன்னும் எத்தனையோ பெரியார்களின் படங்களும் பிரசுரமாகியிருந்தன. அவற்றுக்குக் கீழே அவர் அவர்களுக்கு உகந்த அடைமொழி கொடுத்து அஞ்சலி செலுத்தப்பட்டிருந்தது. சுதந்திரத் திருநாளை முன்னிட்டுத் தியாகிகள் மலராக வெளிவந்திருந்ததால், அன்றையச் செய்தித்தாளில் தியாகம் என்னும் சொல் அதிகமாகக் கையாளப்பட்டிருந்தது.

செய்தித் தாளை விரித்து வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்த பரசுராமன், 'தியாகம், தியாகம்' என்னும் சொல்லை உரக்கப் படித்துக் கொண்டிருந்தான்.

"'தாகம், தாகம்' என்கிறாயே, தண்ணீர் கொண்டு வந்து தரட்டுமாடா, பரசுராமா?" என்று கேட்டுக்கொண்டே வந்தாள் பாகீரதிப் பாட்டி.

"தாகம் இல்லை, பாட்டி! தியாகம்!" என்று சிரித்தவாறே திருத்தினான் பரசுராமன்.

"தியாகமா? அது என்ன அது?" என்றாள் பாட்டி.

"உனக்குத் தெரியாதா? நம்நாடு அடிமைப் பட்டுப் பல இன்னல்களுக்கு இலக்காகியிருந்தபொழுது, எத்தனையோ பேர் என்னவெல்லாமோ தியாகங்கள் செய்திருக்கிறார்களாமே! திருப்பூர் குமரன் என்னும் இளைஞன்கூடத் தேசியக் கொடிக்காக உயிர் துறந்தானாமே?"

"ஆமாம்; அது அந்தக் காலம். இந்தக் காலத்தில் யார் எதற்குத் தியாகம் செய்யப் போகிறார்கள்? எல்லோரும்தான் சுயநலப் பேய்க்கு அடிமையாகிக் கிடக்கிறார்களே! கிடைத்ததைச் சுருட்டிக் கொண்டு தன்னலம் பேண முற்பட்டு விட்டார்களே! அந்த நாளை இன்று நினைத்தாலும்..."

"மயிர் சிலிர்க்கிறது. உள்ளம் பூரிக்கிறது. இல்லையா, பாட்டி?" என்று குறுக்கிட்டான் பாட்டிக்குப் பேரனாகிய பரசுராமன்.

"ஆமாமடா, கண்ணு! சுதந்திர தாகம் கொண்டு எத்தனை இளைஞர்களும், பெரியார்களும், பெண்களும் தியாகம் செய்திருக்கிறார்கள், தெரியுமா? அவர்கள் அன்றைக்கு அத்தனை தியாகம் செய்திருக்காவிட்டால், இன்று நமது சுதந்திர தாகம் தீர்ந்திருக்குமா?" என்றாள் பாட்டி.

"என்னமோ, தாகம் என்கிறாய், தியாகம் என்கிறாய்! என்ன பாட்டி இது?"

"தாகத்துக்கும் தியாகத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு என்பதனால்தான் அப்படிச் சொல்கிறேன். சுதந்திரத் தாகம் உண்டானதனால்தானே, நம் நாட்டுப் பெரியார்கள் பலர், தியாகங்கள் பல புரிந்து நாட்டுக்கு விடுதலை வாங்கித் தந்தார்கள்! அவர்களுக்கு ஆண்டுதோறும் என்ன, நாள்தோறும் அஞ்சலி செலுத்த வேண்டும்!" என்று கூறிய பாட்டி "நமக்குத் தண்ணீர்த் தாகம் எடுக்கிறது. அந்தத் தாகத்தைத் தீர்க்க ஒருவர் தியாகம் செய்ய வேண்டியிருக்கிறது. அப்படி அவர் தியாகம் செய்யவில்லை என்றால் நமக்கு வாழ்க்கை இல்லை, மகிழ்ச்சி இல்லை! இது உனக்குத் தெரியுமோ?" என்றாள்.

"சொன்னால்தானே தெரியும்? என்ன பாட்டி இது? நீயும் வர வர இப்பொழுது புதிர் போட ஆரம்பித்து விட்டாயே!" என்றான் பரசுராமன்.

"புரியாமல் சொல்லுவேனாடா கண்ணு! நான் உனக்கு அந்தக் கதையைச் சொல்லியிருக்கிறேனாக்கும் என்று எண்ணி விட்டேன். சொல்லவில்லை என்றால் கேளு,



சொல்லுகிறேன்!'' என்றாள் பாட்டி. பரசுராமன் பத்திரிகையை மடித்து வைத்து விட்டுப் பாகீரதிப் பாட்டியின் கதையைக் கேட்கத் தொடங்கினான்.

"அந்த வருஷம் ஒரே தண்ணீர் கஷ்டமாகப் போய்விட்டது. வெய்யில் 'கொளுத்து, கொளுத்து' என்று கொளுத்தத் தொடங்கி விட்டது. ஆற்றில் நீர் இல்லை. அருவியில் நீர் இல்லை. குளத்தில் நீர் இல்லை. குட்டையில் நீர் இல்லை. ஆழமான கிணறுகளில் கூட அடி வறண்டு விட்டது. ஆடுமாடுகள் தண்ணீருக்குத் தவியாய்த் தவித்தன, பசு பட்சிகள் ஆலாய்ப் பறந்தன. மனிதர்களும் மிடறு நீர் கிடைக்காமல் மாய்ந்தார்கள். புல் - பூண்டு, பச்சை - பயிர் எல்லாம் வெய்யிலில் கருகி மடிந்தன. வயல் - வாய்க்கால்கள் எல்லாம் தாறு மாறாக வெடித்து வாயைப் பிளந்தன. பூமி முழுவதையும் தண்ணீர்ப் பஞ்சம் வாட்டி எடுத்தது. நீல வானம் நெருப்பாகக் காய்ந்தது. வானத்தில் மேகமென்ற பேச்சையே காணோம்! ஏண்டா, பரசு! மேகக் குஞ்சுக்கு அம்மா அப்பா யார் தெரியுமோ உனக்கு?'' என்று கேட்டாள் பாட்டி.

"என்ன பாட்டி! வேடிக்கை பண்ணுகிறாய்? மேகக் குஞ்சுவுக்கு அம்மாவாவது, அப்பாவாவது!'' என்றான் பரசுராமன்.

"நீ விஞ்ஞானம் படிக்கிற லட்சணம் இவ்வளவுதான் போலிருக்கிறது! மேகம் எப்படி உற்பத்தியாகிறதாம்?'' என்று மடக்கினாள் பாகீரதிப் பாட்டி.

"அதுவா? சூரிய வெப்பத்தின் காரணமாகக் கடல் நீர் ஆவியாக மாறி......''

"நீ சொன்ன இந்த வாக்கியத்துக்குள்ளேயே பதில் இருக்கிறதே! மேகம் பிறக்கிற இடம் கடல். எனவே அது அன்னை. வெப்பத்தை அளிக்கும் ஆதவன் அப்பா. புரிந்ததா?'' என்றாள்.

"இன்றைக்கு நீ என்னவோ புதிர் புதிராகப் போட ஆரம்பித்து விட்டாய். எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை!'' என்று அலுத்துக் கொண்டான் பரசுராமன்.

"இல்லை, இல்லை. இனிமேல் புதிர் போட மாட்டேன். கேளு.—இப்படிச் சுள்ளென்று வெய்யில் உறைத்த காலத்தில்தான் ஒரு நாள் கடல் அன்னை ஒரு மேகக் குஞ்சைப் பெற்றெடுத்தாள். இறக்கை முளைத்துவிட்ட மேகக் குஞ்சு கருநீல வானத்தை அண்ணாந்து பார்த்தது. நீலவானத்தை யொத்த கடல் அன்னையைத் திரும்பிப் பார்த்தது.

ஆகா! நீல வானத்துக்கும் நீலக் கடலுக்கும்தான் என்ன ஒற்றுமை!

உருவத்தில் அன்னையைப்போலிருக்கும் வானத்தைக் கண்டு வரவேண்டுமென்ற ஆவல் உந்தித் தள்ளவே, வானுயரப் பறந்தது மேகக் குஞ்சு.

அன்னை அதன் ஆசையைத் தடுக்கவில்லை. அதன் நலனுக்கான உபதேசத்தை மட்டுமே செய்தாள்.

'அதோ ஒளிப்பிழம்பாகத் தெரிகிறாரே, அவர்தான் உன் தந்தை ஆதவன். அம்மா பெற்ற பிள்ளையாக மட்டும் இராமல், அப்பாவுடன் வளைய வா. அவரது புகழில் நீயும் பங்கு பெற முயற்சி செய். ஆனால் தப்பித் தவறிக்கூடக் கீழே இறங்கி விடாதே. இந்தப் பூமி இருக்கிறதே, இது மிக மிகப் பொல்லாதது. உன்னை உறிஞ்சி விட்டுத்தான் மறுகாரியம் பார்க்கும்!' என்றாள்.


'சரி, அம்மா! உன் சொற்படியே ஜாக்கிரதையாகப் போய் வருகிறேன்! நான் வரட்டுமா, அம்மா?' என்று கூறி விடை பெற்றுக் கொண்டது மேகக் குஞ்சு.

வான வீதியிலே வளர்ந்து பெரிதாகிப் பவனி வரும் மேகக் குஞ்சைக் கண்டார்கள் மாநிலத்து மக்கள். ஆடுமாடுகள், பசு - பட்சிகள் ஆர்வத்துடன் அண்ணாந்து பார்த்தன. 'மழையே! வாராயோ?' என்று பெண் குழந்தைகள் கும்மி, கோலாட்டம் அடித்து வேண்டினார்கள்.

வானத்திலேயே விழி வைத்துத் தன்னை வரவேற்கத் துடிக்கும் மக்களைக் கண்டது வளர்ந்து விட்ட மேகக் குஞ்சு. அவர்களது அன்பும் ஆசையும் அதைக் கொஞ்சம் தாழ்ந்து கீழே இறங்கி வரச் செய்து விட்டன.

அனல் பறக்கும் வெய்யிலை மறைத்து மேகம் குடை பிடிக்கத் தொடங்கி விடவே, மக்களின் மகிழ்ச்சிக்கு ஓர் கங்குகரையில்லாமற் போய் விட்டது. மிருகங்கள், மரம் - மட்டைகள் எல்லாம் வானத்தை நோக்கின. புவித் தாயும் மேகத்தை 'வா, வா' என்று வருந்தி அழைத்தாள்.

உலகம் முழுவதும் தன்னை இப்படி வருந்தி வருந்தி அழைக்கவே, மேகக் குஞ்சு ஒரு சுற்று என்ன, ஒன்பது சுற்று பருத்து விட்டது. அதன் மேனி கருமையிட்டுத் தளதளத்தது. எனவே, அது மேலும் தாழ்ந்து வந்தது. அப்பொழுது அன்னை சொன்ன சொல் அதற்கு நினைவு வந்தது. 'கீழே இறங்கினால் அழிந்து



போவாய்' என்று சொன்னுனே!—சிந்தனை சிறைப்படுத்தவே சிறிது தயங்கி நின்றது.

மேகம் காற்றில் கலையாமல் நின்று விட்டது. கட்டாயம் மழை பொழியும் என்று மக்கள் மேலும் நம்பிக்கை கொண்டனர். 'வா, வா—மழையே!' என்று குஞ்சுக் கரங்கள் கையை ஆட்டி ஆட்டி வரவேற்றன.

குழந்தைகளின் அழைப்புக்கு இரங்கா தவர்களும் உண்டா? 'பிறப்பு எடுத்து விட்டால் இறப்பு நிச்சயம். இறப்பது என்று ஏற்பட்டு விட்டபின் என்றைக்கு இறந்தால் என்ன? இத்தனை மக்களுடைய இன்னலை யும் தீர்ப்பதற்காக நான் ஒருவன் மாய்ந்து மடிந்தால் ஒன்றும் குடிமுழுகி விடாது. எல்லோரும் இன்புற்றிருப்பதுவே பிறவியெடுத்த பயனுயிருக்க வேண்டும். அம்மாவுக்கு என்ன? அருமைக் குழந்தை யிடம் அன்பு மேலிட்டால் அப்படிச் சொல் கிருள்! நான் மாரியை வாரி வழங்கிவிட்டே மறுகாரியம் பார்ப்பேன்!'

இப்படி எண்ணிய மேகம் தியாகத்துக்குத் தயாராகி விட்டது. தூய தியாகத்தின் மகிழ்ச்சி அதன் உடல் முழுவதும் மின்னி யது; இதயத்திலே எழுந்த பேருவகை பேரிடியாகப் 'படபட'வென்று ஒலித்தது.

அப்புறம் என்ன? வானமே பொத்துக் கொண்டு விட்டாற்போல மழை கொட்டியது. கடைசித் துளி நீர் தன் உடலில் இருக் கும் வரையில் கொட்டித் தீர்த்தது மேகம். மக்கள் மகிழ்ச்சியுற்றனர். மிருகங்கள் மகிழ்ச்சியுற்றன. மண் மகிழ்ந்தது. மலர் சிரித்தது. பயிர் பசுமையிட்டது. நெற் கதிர்கள் நிறைமனத்துடன் சலசலத்தன.


உலகுக்கெல்லாம் உவகை அளித்து நீராக ஓடித் தன்னைச் சரணடைய வந்த தன் மகனைக் கண்ட கடல் அன்னை மனங் குமுறினாள். 'அட, அசட்டுப் பிள்ளையே! படித்துப் படித்துச் சொன்னேனே! இப்படி உயிரைக் கொடுத்து விட்டு வந்திருக் கிருயே!' என்று அங்கலாய்த்தாள்.

'அம்மா! எதற்காக வீணில் வருந்து கிருய்? உயிருக்கு எல்லாம் உயிர் கொடுக்க என்னை மீண்டும் மேகமாக்கி அனுப்பு. எல்லோரும் இன்புற்றிருக்கச் சிறிதும் தயக்கமின்றித் தியாகம் செய்ய வேண் டாமா?' என்றது மேகக் குஞ்சு."

கதையைக் கூறி முடித்த பாகீரதிப் பாட்டி, "ஜீவராசிகளின் தாகத்தைத் தணிக்க மேகக்குஞ்சு செய்த தியாகத்தைப் பார்த்தாயா, பரசுராமா?" என்றாள்.

"மேகத்தைப்போலவே, பாரததேசத்தின் சுதந்திர தாகத்தைத் தீர்க்கத் தியாகம் செய்த பெரியார்களின் வாழ்க்கையை வழி படத்தான் வேண்டும்" என்று பெரியவனைப் போலப் பேசினான் பரசுராமன்.

பாகீரதிப் பாட்டிக்குத் தன் பேரன் பரசு ராமன் பேச்சிலே பெருமை தொனித்தது.



செல்லம் அழுதது ஏன்?

பிற்பகல் வேளை; பித்தான்கள் உடைந்து காலரிலும் கைகளிலும் கிழிந்திருந்த என் கணவரின் சட்டைகளை நான் தைத்துக்கொண்டிருந்தேன். அந்த சமயம் பக்கத்து வீட்டுப் பப்பியுடன் விளையாடிக் கொண்டிருந்த என் குழந்தை செல்லம் திடீரென வீரிட்டு அழுதாள்; அந்த அதிர்ச்சியில் தையல் ஊசியே என் கையில் ஏறிவிட்டது. கோபத்துடன் திண்ணைக்கு ஓடிவந்தேன். அதே சமயம், பப்பியின் தாயார் கண்ணம்மாவும் அங்கு ஓடிவந்து செல்லத்தை வாரியெடுத்து சமாதானம் செய்ய முயன்றாள்: "ஆரு அடிச்சாம்மா என் செல்லக் குழந்தையை?"

"மாமி, ப...ப...பப்பி என் பொம்மையோட கவுனை அழுக்காக்கிட்டா, மாமி!" என்று விசித்து விசித்துக் கூறினாள் செல்லம்.

"அவ்வளவுதானே. பப்பியை ரொம்ப நல்லா அடிச்சுட்டு, உன் பொம்மைக்கு புதுசா ஒரு கவுன் வாங்கிப் போட்டுடலாம். வா!" என்று தேற்றிவிட்டு, இரு குழந்தைகளையும் தன்னோடு அழைத்துச் சென்றாள் கண்ணம்மா. கண்ணம்மாவிடம் காணப்படும் தங்கமான குணங்களில் ஒன்று, தன் குழந்தைகளைப் போலவே பிறர் குழந்தைகளையும் அரவணைத்துக்கொள்ளும் தன்மை. தன் தந்தை பணக்காரர் என்ற கர்வம் எள்ளளவும் அவளிடம் கிடையாது.-இவ்வாறு எண்ணமிட்ட வண்ணம் அப்படியே கண்ணயர்ந்து விட்டேன். அப்புறம் செல்லம் வந்து என்னை எழுப்பினாள். கண்விழித்துப் பார்த்ததும், செல்லத்தின் கையிலிருந்த பொம்மைக்குப் புதுக்கவுன் போட்டிருந்தது தென்பட்டது—முன்பிருந்ததைப் போலவே இருந்தது இந்தக் கவுனும். இந்த ஏற்பாடு எனக்குப் பிடிக்கவில்லை. இதை ஆட்சேபிக்க கண்ணம்மாவின் வீட்டுக்கே சென்றேன்.

கண்ணம்மாவோ "புதிதாகக் கவுன் ஏதும் வாங்கவில்லையே. சில துணிகளை நான் துவைக்க வேண்டியிருந்தது. கையோடு கையாக அந்தக் கவுனையும் அலசினேன்" என்றாள். அழகாயிருக்கிறதே பேச்சு! வீட்டில் துணிகளைத் துவைத்துக் கொள்ளும் வழக்கம் எங்களுக்கே கிடையாது; சலவை செய்ய வெளியே அனுப்புகிறோம். அப்படியிருக்க, மோதிரக் கையினால் துணி துவைப்பதாகக் கூறினால், நம்புகிறவள் நானா? "அதெப்படியம்மா துவைத்தீர்கள், அடித்துத் துவைக்கும் சத்தங்கூடக் கேட்காமல்?" என்றேன்.

S. 238A-50 TM



மலையருவி

இது ஒரு நாடோடிப் பாடல்களின் தொகுப்பு நூல்.

பாமர மக்களின் உள்ளத்தைப் பிரதிபலிப்பவை, நாடோடிப் பாடல்கள். எழுத்து வாசனை, படிப்பு வாசனை அற்றவர்கள் நாவிலிருந்து வெளிப்படும் இத்தகைய பாடல்கள் அற்புத கற்பனைகளும் ரஸங்களும் பொருந்தியிருப்பதைக் காண்கிறோம். இந்தப் பண்பை ஒவ்வொரு நாட்டு நாடோடிப் பாடல்களிலும் காணலாம். ஆனால் தமிழ் நாட்டு நாடோடிப் பாட்டில்தான் தமிழன் அச் சுவைகளை நன்கு உணர்ந்து துய்க்க முடியும்;

அன்ன நடையழகி
அலங்கார நகையழகி
பின்னல் சடையழகி—என் ஆசைக் கண்ணாட்டி
பொறப்படடி தேர்பார்க்க—என் நேசக் கண்ணாட்டி

இதிலுள்ள எதுகையையும் மோனையையும் தொனிக்கும் பாவனையையும் தமிழர்களைப் போல் வேறு யாரால் துய்க்க முடியும்?

இதைப் போல் பலப்பல ரஸமான நாடோடிப் பாடல்கள் இந்தத் தொகுப்பிலிருக்கின்றன. திருநெல்வேலிச் சீமையில் ஜம்புலிங்க நாடார் என்று பிரசித்திபெற்ற கொள்ளைக்காரன் இருந்தான். ஆனால் பணக்காரர்களிடம் கொள்ளையடித்து ஏழைகளுக்கு வாரி வழங்கியமையால் ஜம்புலிங்க நாடார் பாமர மக்களின் பேரன்புக்குப் பாத்திரமாய் விளங்கினான். அந்தக் கள்ளனைப் பற்றி இதில் வரும் பாடல்கள் தமிழ்ச் சுவையும் பெருமிதமும் கொண்டு விளங்குகின்றன. இதைத் திரு கி. வா. ஜகந்நாதன் அவர்கள் ஒரு நீண்ட முன்னுரையுடன் வகைப்படுத்திக் கொடுத்திருக்கிறார். ஆனாலும் இப் பாடல்களை முதன் முதலில் தொகுத்தவர் காலஞ் சென்ற பார்ஸிமக்ளின் ஐ. ஸி. எஸ். என்று தெரிவித்திருக்கிறார்கள். இதைத் தவிர இப் பாடல்களை முதன் முதலில் தொகுத்த இவர் எந்த ஊர்க்காரர், இங்கு என்ன செய்து கொண்டிருந்தார், அவருக்கு எப்படி இப்பாடல்களில் ஆர்வம் ஏற்பட்டது—இவை ஒன்றும் தெரியவில்லை. பெயரிலிருந்தும், பெயரோடு ஒட்டியிருக்கும் பட்டத்திலிருந்தும் இவர் ஒரு ஆங்கிலேயராக இருக்க வேண்டும் என்றும், சென்னை ராஜ்யத்தில் கலெக்டராக இருந்திருக்க வேண்டும் என்றும் ஊகிக்க வேண்டியிருக்கிறது. ஆங்கிலேயர் நம்மைப் பல ஆண்டுகள் அடிமைப்படுத்தி ஆண்டிருந்தாலும் இவரைப் போல் ஒரு சிலர் தமிழ் மொழிக்குச் செய்துள்ள சேவையைக் காணும் போது ஆங்கிலேயருக்கு நன்றி தெரிவிக்கத் தோன்றுகிறது.

காலஞ்சென்ற பார்ஸி மக்ளின் ஐ. ஸி. எஸ் தாம் தொகுத்த இப் பாடல்களைச் சென்னை சர்வகலாசாலைக்குக் கொடுத்து விட்டுச் சென்றிருக்கிறார். அவை தஞ்சை சரஸ்வதி மகால் வெளியீடாக மலையருவி என்ற பெயரில் வெளியாகியிருக்கின்றன.

பிரசுரம்: சரஸ்வதி மகால் நூல்நிலையம், தஞ்சாவூர். விலை: ரூ 5—50

பெருநாள் பரிசு

மனித உள்ளம் எத்தனையோ விசித்திரமானது. கடலின் ஆழத்தையும், கார்மேகங்களின் குமுறலையும், இமயத்தின் உயரத்தையும், கதிரவனின் தாபத்தையும், முழுமதியின் தண்மையையும், புயலின் வேகத்தையும், பூமியின் விஸ்தாரமான பரப்பையும் அதன் உள்ளே காணலாம். மொழியும் மக்கள் பழகும் வழியும் வேறுபட்டிருக்கலாம். ஆனால் மனித உள்ளமும் அது உணரும் உணர்வும் என்றும் வேறுபடுவதில்லை.

இந்தத் தொகுதியில் அடங்கியிருக்கும் சிறு கதைகள் பதினொன்றும் பலவிதமான உணர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டவை. ஒவ்வொரு கதையும் தனித்தனியான ருசியைத் தருகிறது.

கதைக்குச் சுவை ஊட்ட வேண்டுமானால் வெறும் நிகழ்ச்சிகளைக் கோவையாகச் சொல்லி விடுவதில் பயனில்லை. கனியின் சுவையும், கற்பனை வளமும், தெளிவான கதைப் போக்கும் கொண்டு அது நல்ல நடையிலும் அமைய வேண்டும். அப்பொழுதுதான் ஒரு கதைக்கு முழு உருவம் ஏற்படுகிறது. அத்தகைய லட்சணங்கள் அமைந்த கதைதான் வாசகர்களின் உள்ளங்களை ஈர்க்கும் சக்தியைப் பெறுகிறது.


இந்நூலை இயற்றிய ஜமீலா புதுக் கற்பனைகளைக் கதை எழுதுவதற்காகத் தேடி அலையவில்லை. தமக்குக் கிடைத்த சின்னச் சின்ன நிகழ்ச்சிகளையெல்லாம் மனத்தில் வைத்துக் கொண்டு அழகு அழகான கதைகளாகப் புனைந்துவிடும் ஆற்றல் மிக்கவர். அதனாலேயே அவருடைய கதைகள் பல தமிழ்ப் பத்திரிகைகளிலும் இடம் பெற்று விடுகின்றன.

தெளிவும் கவர்ச்சியும் கொண்ட இவரது தமிழ் நடை தங்கு தடையில்லாமல் செல்கிறது. ஆனால் இடையிடையே 'ஜனாஸா' 'நமாஸ்' 'துனியா' 'நிக்காஹ்' போன்ற உருதுப் பதங்கள் தலைகாட்டினாலும் கதைப் போக்கைக் கொண்டு மேற்படி பதங்களையும் புரிந்து கொள்ள முடிகிறது.

பிறையையும் விண் மீன்களையும் நீல வானத்தில் தீட்டி ஓவியர் மணியம் இந்தப் புத்தகத்தின் அட்டையைக் கவர்ச்சிகரமாகச் செய்து விட்டார்.

பேராசிரியர் மு. வரதராசனாரின் கருத்துரை கருத்துப் பொதிந்த கருவூலமாக விளங்குகிறது.

எழுதியவர்: ஜமீலா; பிரசுரம்: கலைமகள் பிரசுரம், சென்னை — 4; விலை: ரூ. 2-50.



காரையடி நீ எனக்கு!

ஸோமாஸ்

அந்த மாடி வீட்டில் மேலே ஒரு அறை இருந்தது. மாடித் தாழ்வாரத்தில் தெரிந்த மூடிய கதவுகளிலிருந்து அந்த அறையில் யாரும் குடியிருக்கவில்லை என்று தெரிந்தது. ஒரு அறையின் கதவுகள் சாத்தியிருந்தால் அதில் யாரும் இல்லை என்று எப்படி முடிவு கட்ட முடியும் என்கிறீர்களா?

அந்த மாடியறையில் மனிதர் யாராவது இருந்தால், அவர் கீழே இறங்கி வராமலே இருக்க முடியாதல்லவா? கதவைக்கூடத் திறக்காமல் இருக்க முடியாதல்லவா? அத்துடன் அந்தத் தெரு வழியாக இருநூறு தடவைகளுக்கு மேல் நடந்தும் மாடியில் குடியிருப்பவர்கள் யாரும் என் கண்ணில் படவேயில்லை. ஒரு வேளை அறையைப் பூட்டிக் கொண்டு அவர் ஊருக்குப் போயிருந்தால்!... இந்தக் கேள்வியை என் அந்தராத்மா நம்ப மறுத்து விட்டது. தனியாக ஒரு அறையை எடுத்துக் கொண்டிருப்பவன் அதை மாதக்கணக்கில் பூட்டிப் போட்டு விட்டு எங்கேயும் போய் விட மாட்டான் என்று ஒரு எண்ணம் தோன்றியது.

நான் விசாரித்ததில் அந்த வீட்டின் சொந்தக்காரரே கீழ்க்கட்டில் இருக்கிறார் என்று தெரிய வந்தது.

அன்று நேரில் விசாரித்து விடுவது என்ற எண்ணத்துடன் அந்த வீட்டுக்குச் சென்றேன்.

"ஸார், ஸார்!" என்று மிகவும் விநயமாகவும்; ஆனால் சற்றுப் பலமாகவும் ரேழியில் நின்றபடி குரல் கொடுத்தேன்.

மூக்குக் கண்ணாடியணிந்த ஒரு வழுக்கைத் தலைப் பெரியவர் ஒருவர் வெளியே வந்தார். அவர் கையில் ஒரு ஆங்கிலப் புத்தகம் இருந்தது.

"யார், என்ன வேண்டும்?" என்று கடுமையான குரலில் கேட்டார்.

"இந்த வீட்டு மாடியில் ஒரு அறை காலியிருக்கிறதாகக் கேள்விப்பட்டேன்."

"நீர் எப்படி அந்த மாதிரி கேள்விப்பட முடியும்? அறை காலியாயிருப்பதாகவோ, அதை வாடகைக்கு விடப் போவதாகவோ நான் இதுவரையில் யாரிடமும் சொல்லவில்லையே!" என்றார்.

"வாஸ்தவம். அது சதா பூட்டிக் கிடப்பதிலிருந்து அந்த அறையில் யாரும் இல்லை என்ற முடிவுக்கு வந்தேன். ஆகவே உங்களைக் கேட்கலாம் என்று வந்தேன்."

"அது பூட்டிக் கிடக்கிறது என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"நான் இந்த வழியாக இரண்டு மாத காலமாக அலைந்து கொண்டிருக்கிறேன். ஒரு நாள்கூட மாடியறை திறந்து பார்த்ததில்லை. அதனால் அதில் யாரும் இல்லை என்று நீர் மானித்து விட்டேன்."

"நீர் அநாவசியமாகப் பொய் சொல்லவில்லையென்பது தெரிகிறது. நீர் எங்கே வேலை செய்கிறீர்?"

"ஒரு பத்திரிகைக் காரியாலயத்தில் உதவி ஆசிரியராக வேலை பார்த்து வருகிறேன்."

"பத்திரிகைக் காரியாலயம் என்றால் பாதி ராத்திரியில் வந்து பிராணனை வாங்குவீரா?"

"இல்லை. அநேகமாகச் சீக்கிரம் திரும்பி விடுவேன். அப்படிக் கொஞ்சம் சென்று வருவதாயிருந்தாலும், உங்களுக்கு ஒரு சிறிதும் தொந்தரவு இல்லாமல் நான் நடந்து கொள்வேன்."

"உம்.. சரி.. இரவு நேரங்களில் கண்ட சிநேகிதர்களை அழைத்து வந்து.."

"...சீட்டாடி, வம்பளந்து ஒன்றும் செய்ய மாட்டேன்."

"பேஷ்! புரிந்து கொண்டு பேசுகிறீரே! நாய் ஏதாவது..."

"இல்லை. நான் வளர்க்கவில்லை. இனி மேலும் வளர்க்க மாட்டேன்."

"ரேடியோ, கிராமபோன் இவைகளெல்லாம் வைத்து..."

"என்னிடம் கிடையாது. வாங்கும் உத்தேசமும் இல்லை."

"மாடி அறையை நான் வாடகைக்கு விடுவதாயில்லை. மேலே நிறைய இடம் இருக்கிறது. மூன்று அறைகள் இருக்கின்றன. குடும்பத்தோடு ஒருவர் சௌகரியமாகக் குடியிருக்கலாம். ஸ்நான வசதிகளுக்கெல்லாம் குழாய் வசதிகள் இன்னும் நான் செய்யவில்லை."

"அதைப் பற்றிப் பரவாயில்லை. எனக்குக் காற்றோட்டமுள்ள ஒரு அறை கிடைத்தால்

போதும். ஆபீசுக்குச் சீக்கிரமாகப் போய் அங்கேயே ஸ்நானம் செய்து கொள்ளுகிறேன்.''

''இல்லை, நீர் கீழே பின்கட்டிலுள்ள ஸ்நான அறையை உபயோகித்துக் கொள்ளலாம். ஆனால் எனக்கு இடைஞ்சலாக அதிகாலையில் எழுந்து...''

''...ஸ்நானம் செய்ய மாட்டேன். நான் காலையில் எழுந்திருப்பதற்கே மணி ஏழாகி விடும். நிச்சயம் உங்களுக்கு இடைஞ்சலாக இருக்க மாட்டேன்.''

''சரி. ஒரு முக்கியமான விஷயம். எனக்குச் சத்தமே பிடிக்காது. இரவில் சின்னச் சத்தம் கேட்டால்கூட விழித்துக் கொண்டு விடுவேன். நீர் பாட்டு பாடுவது உண்டா?''

''இல்லை! நீங்கள் அது பற்றிக் கவலைப்பட வேண்டாம். ஆனால் ஒரு சின்ன வேண்டுகோள். மன்னிக்க வேண்டும்.''

''என்ன அது?''

''என் பேனா எழுதும்போது 'கிர் கிர்' என்று இலேசாகச் சத்தம் போடும்....''

''அது பற்றிப் பரவாயில்லை!''

கிழவர்முகத்தில் இப்பொழுது ஒரு திருப்திக் களை உண்டாகியிருந்தது. முதன் முதலில் நான் பார்த்தபோது இருந்த கடுகடுப்பு சிறிது மாறியிருந்தது.

''மாடிக்குப் போய் அறைகளைப் பார்க்கலாமா?'' என்று கேட்டார் கிழவர்.


''பார்க்க வேண்டும் என்பதுகூட இல்லை. நீங்கள் அறையை வாடகைக்கு விடுவதாயிருந்தால் சரிதான். ஒரு நண்பன் வீட்டில் என் பெட்டி படுக்கைகளை வைத்திருக்கிறேன். இப்பொழுதே போய் அவைகளையெல்லாம் எடுத்து வந்து விடுகிறேன்'' என்று கூறினேன்.

இந்தச் சமயத்தில்தான் நான் கொஞ்சமும் எதிர்பாராத அந்தச் சம்பவம் நடந்தது.

''தாத்தா!'' ஒரு கிளிமொழி கொஞ்சியது. நான் திரும்பிப் பார்த்தேன். மலர்ந்த செந்தாமரையைப் போன்ற ஒரு முகம் தெரிந்தது. நான் செயலிழந்து அதையே நோக்கிக் கொண்டிருந்தேன்.

''என்னம்மா, தாரா! இங்கே வா. என்ன வேண்டும்?'' என்று கேட்டார். அந்தப் பெண்மணி தாத்தாவின் அருகில் வந்து நின்றாள். தன் மயக்கும் விழிகளினால் என்னை ஒரு பார்வை பார்த்தாள். பிறகு தாத்தாவைப் பார்த்து, ''ஏன் தாத்தா, மாடியறையை வாடகைக்கு விடப்போகிறீர்களா?'' என்று கேட்டாள்.

அப்பொழுது அவள் குரலிலிருந்த கடுமை எனக்குக் கண்ணிலை நினைவூட்டியது.



''நல்ல மனிதராய்த் தெரிகிறார். நமக்கும் துணையாயிருக்கும்...'' என்றார் கிழவர். அப்பொழுது அவர் குரலிலிருந்த குழைவிலிருந்து பேத்தியிடம் அவருக்கு இருந்த அன்பின் ஆழம் நன்றாய்த் தெரிந்தது.

''எனக்கென்னவோ தாத்தா, மாடியில் யாரையும் குடித்தனம் வைப்பதில் இஷ்டமில்லை. உங்களுக்குத் தொந்தரவு. என் சுதந்திரமும் மாடியைப் பொறுத்த வரையில் தீர்ந்து போய்விடும்!'' என்றாள் தாரா. ஆகா! கோபத்தில்தான் அவளுக்கு என்ன அழகு!

இந்தச் சந்தர்ப்பத்தில் அவளது அழகை ரசித்துக் கொண்டு மௌனமாக என்னால் எப்படியிருக்கமுடியும்? முற்றிலும் என்னைப் பாதிக்கும் விஷயமாக அல்லவா இருக்கிறது, அவள் சொல்லுவது!

''மன்னிக்க வேண்டும். நான் ஆபீசுக்குப் போய் விட்டால் இரவுதான் திரும்புவேன். ஆகையினால், காலை 9-மணிக்குமேல் மாடியை உங்களுடையதாகவே உபயோகப்படுத்திக் கொள்ளலாம்!'' என்றேன் நான், மிகவும் பணிவான குரலில்.

தாரா என்னைப் பார்த்த பார்வையில் நான் சாம்பலாகிப் போகாதது அதிசயம்தான்.

''தாரா! அவர் சொல்லுகிறதைக் கவனித்தாயா? அவர் காலையில் ஆபீசுக்குப் போய் விட்டால், மாடியில் யார் இருக்கப் போகிறார்கள்?'' என்றார் கிழவர்.

''தாத்தா! அது என்னவோ எனக்குத் தெரியாது. மாடியறையை வாடகைக்கு விடுவதில் துளிக்கூட எனக்குச் சம்மதமில்லை!'' என்று தன் அகன்ற விழிகளை உருட்டி, மலர் முகத்தை ஆட்டினாள் அவள்.

அப்போது எனக்கு அவள் மீது கோபம் இவ்வளவு அவ்வளவு அல்ல. இருந்தாலும் நான் பதில் ஒன்றும் சொல்ல முடியாமல், தீனமாக அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு, கிழவரையும் ஒருதடவை பரிதாபமாகப் பார்த்தேன்.

''ஸார்! உங்களுக்குச் சிரமம் தந்துகொண்டு நான் வீட்டில் குடியிருப்பதுகொஞ்சம்கூட நியாயம் ஆகாது. என்னை மன்னித்து விடுங்கள்...'' என்று மிகவும் பணிவுடன் அவரைக் கை கூப்பி வணங்கினேன்.

'பரவாயில்லை. நீர் போய் உம்முடைய பெட்டி, படுக்கைகளைக் கொண்டு வாரும். மாதம் ரூபாய் பதினைந்து வாடகை. குழந்தை சொன்னதை மனதில் வைத்துக் கொள்ளாதீர். உமது பெயர் என்ன?'' என்றார் கிழவர்.

சிலைபோல் நின்று கொண்டிருந்த தாராவை ஒரு வெற்

திப் பார்வை பார்த்து விட்டு, "சரி! இந் தாருங்கள். ஒரு மாச வாடகை முன்பணம். என் பெயர் சந்திரன். இதோ போய் என் பெட்டி படுக்கைகளைக் கொண்டு வருகிறேன்!" என்று சொல்லிவிட்டு உடனே அவ்விடத்தை விட்டு நகர்ந்தேன்.

* * *

நான் அந்த வீட்டு மாடியறைக்குக் குடி வந்து பத்து நாட்களாகி விட்டன. அறை நல்ல காற்றோட்டமாக இருக்கது. என் னுடைய வேலைக்குத் தேவையான அமைதி அங்கு அளவுக்கு மீறி இருந்தது. என் நண்பன் வீட்டில், பலவிதமான அசௌகரியங்களுக்கு இடையில் அவதிப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு இந்த அறை மிகவும் சௌகரியமா யிருந்தது. மேல்கட்டில் இருந்த ஸ்நான அறை மிகவும் வசதியாக இருந்தது.

ஆனால் இவ்வளவு இருந்தும் என் மனத்தில் மட்டும் ஏனோ அமைதியில்லை. காலை ஏழு மணிக்கு எழுந்து பல் துலக்கி, காலைக் கடன் களை முடித்துக்கொண்டு, குற்றாலம் அருவி மாதிரி 'தடதட' வென்று பொழியும் குழாய் ஜலத்தில் ஆனந்தமாக ஸ்நானம் செய்து விட்டு, ஹோட்டலுக்குப் போய்க் காப்பி சாப்பிட்டு விட்டு வருவேன். பிறகு பத்து மணி வரையில் தினப்பத்திரிகைகள் படித்து விட்டு, காரியாலயத்துக்குரிய உடையுடன் புறப்பட்டு ஓட்டலில் சாப்பாட்டை முடித்துக் கொண்டு போய் விடுவேன்.

நான் அந்தப் பத்திரிகையில் சினிமா ஆசிரியரா யிருந்தபடியினால், அடிக்கடி சினிமா பார்த்துவிட்டு இரவு நேரங்களில் நேரம் சென்று வருவேன். ஹோட்டல், என் காரியா லயம் எல்லாம் அந்த வீட்டுக்குச் சமீபமாகவே இருந்தபடியினால் எனக்கு அங்கு வசிப்பது மிகவும் சௌகரியமாகவே இருந்தது.

பின் என்னுடைய மனத்தில் ஏன் இந்த அமைதியின்மை!

ஆம், தாராதான் காரணம். இத்தனைக்கும், நான் அவளைப் பார்த்தது ஒரே ஒரு தடவை தான். அதுவும் வீடு பார்க்கப்போன அன்று பார்த்ததுதான்.

ஆனால் அவளுடைய எழில் உருவம் என் மனத்திரையில் 'க்ளோஸப்' காட்சியாகப் பதிந்து விட்டது.

குங்கும வர்ணத்தில் 'கிரேப் ஸில்க்' புடவை அவள் தாமரைப் பூ மேனியை அணைத்துக் கொண் டிருந்தது. தங்கநிறப் பட்டு 'சோளி' அவள் சரீரத்தோடு ஒட்டியிருந்து அழகுக்கு அழகு செய்தது. விசேஷ நகை எதுவும் இல்லாமலே சுடர் ஒளியாய்த் திகழ்ந்தாள், தாரா.

அந்த வீட்டில், அவள் எங்கே தான் ஒளிந்து கொண்டிருந் தாளோ! என் கண்ணில், பிறகு படவேயில்லை. நான் தான் அவளை என் கண்களாலேயே துருவித் துருவித் தேடிக்கொண் டிருக்கிறேனே!

வனதேவதை மாதிரி அன் றொருநாள் என்கண்முன் தோன் றிய அந்த எழிலரசி அப்புறம் ஏன் எதிரில் வரவேயில்லை? ஓகோ! ஒருவேளை, நான் அவள் விருப்பத்துக்கு மாறாக மாடி யறைக்குக் குடிவந்ததில் அவளுக்குக் கோபமா யிருக் குமோ? அப்படியானால் அறையைக் காலி செய்து விடுவோமா...? அவளிடம் சொல்லிக் கொள்ளாமலேயா ஓடி விடுவது? மேலும், ஒரு பெண்ணுக்குப் பயந்து கொண்டு அறை யைக் காலி செய்வதா? சை, அது தவறு!

சர்வ ஜாக்கிரதையாக, பெரியவர் அன்று சொன்னபடி, கொஞ்சங்கூடச் சத்தம்போடா மல் என் அறையில் புழங்கி வந்தேன். நான் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் கவனமா யிருந்தேன். இதற்குக் காரணம், வெகுநாட் களாக இடம் கிடைக்காமல் தவித்ததுமட்டும் அல்ல. அதைத் தவிர ஒன்று, ஏதோ இன்ப மயமான எண்ணம் ஒன்று என் உள்ளத்தில் இருந்து கொண்டு, அந்த அறையைக் காலி செய்ய முடியாதபடி தடுத்தது. அந்த எண்ணத்துக்கு இடையில் சதா ஒளிவிட்டது தாராவின் தாமரை முகம்.

தாராவை அடிக்கடி பார்த்துப் பேசியிருந் தால்கூட என் மனம் அவ்வளவு வேதனைப் பட்டிராது. கனவில் கண்ட பொருள் நினை வெழுந்ததும் மறைந்து விடுவதுபோல் அன்று ஒரே ஒருநாள் எனக்குத் தரிசனம் தந்த தாரா அப்புறம் என் முன்னால் வரவேயில்லை. ஆகவே அவள் முகம் என் நினைவில் சதா இருந்துகொண்டு வேதனையில் ஆழ்த்தியது. ஒருவேளை ஊருக்குப் போயிருப்பாளோ! இதை அவள் தாத்தாவிடமே கேட்டு விட் டால்! சரிதான். வேறு வினையே வேண்டாம். அப்புறம் இந்த அறையை உடனே காலி செய்துவிட வேண்டியதுதான்.

ஸ்நானம் முடிந்து மாடிக்கு வந்தேன். அன்று இரண்டு மூன்று இடங்களுக்குப் போக வேண்டியிருந்ததால், நான் காரியாலயத் துக்குப் போகவில்லை. மாடியில், அறையில் போய் உட்கார்ந்ததும் தாராவின் நினைவு என்னை வேதனைப்படுத்த ஆரம்பித்தது.

அவள் யார்? நான் யார்? நான் என்னத் துக்காக அவளை நினைத்து ஏங்க வேண்டும்? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் எனக்கு ஒரு பதிலும் கிடைக்கவில்லை. ஆனால் இதையெல் லாம் மீறி, தாராவின் தாமரை முகம் மட்டும் தெளிவாகத் தோன்றிக் கொண்டிருந்தது.





பயணம் சென்னை, ரசாயனத் தொழிற் கம்பெனியின் தலைவர் திரு எம். ஏ. மெர்ச்சண்ட், தொழில் நிமித்தமாக ஐரோப்பாவுக்கு விமானமேறினார். விமான நிலையத்தில் போலிஸ் கம்பெனியின் மானேஜிங் டைரக்டர் ஸ்ரீ டி.எம். மெர்ச்சண்ட் அவரை வழியனுப்பி வைத்தார்.

இதுவரையில் என்னுள் அடங்கிக் கிடந்த உத்சாகம் திடீரென்று பீறிட்டுக் கொண்டு பாட்டாகக் கிளம்பியது.

"தாரையடி நீ எனக்கு
தண்மதியம் நான் உனக்கு
வீரமடி நீ எனக்கு
வெற்றியடி நான் உனக்கு
தாரணியில் வாழுலகில்
சார்ந்திருக்கும் இன்பமெல்லாம்
ஒருருவமாய்ச் சமைந்தாய்..."

என்று பாடிக் கொண்டிருக்கும் போதே, "நிறுத்துங்கள், போதும்!" என்ற அழகிய பெண் குரல் கேட்டுப் பாட்டை 'டக்'கென்று நிறுத்தி விட்டுப் பார்த்தேன்.

தாரா என்னெதிரில் நின்று கொண்டிருந்தாள். அவளது உருண்டை முகத்திலிருந்த அகன்ற விழிகள் என்னை விழுங்க முயன்றன.

"தாரா! நீ...எப்படி இங்கே வந்தாய்? இத்தனை நாட்களாக எங்கே போயிருந்தாய்? தாத்தா இல்லையா?" என்று கேள்விகளைப் படபடவென்று கேட்டேன்.

"தாத்தா பென்ஷன் வாங்கப் போயிருக்கிறார். இருபது நாட்களாக ரொம்ப ஒழுங்காக இருந்த உங்களுக்கு இன்றைக்கு என்ன வந்து விட்டது? நீங்கள் இங்கு குடிவந்த அன்று தாத்தாவிடம் சொன்னபடி ரொம்பவும் சமர்த்தாக இருப்பதைப் பார்த்து நான் எவ்வளவு சந்தோஷப்பட்டேன், தெரியுமா? கடைசியில் ஒரு பாட்டுப் பாடி அதையெல்லாம் கெடுத்துக் குட்டிச் சுவராக்கிவிடப் பார்த்தீர்களே! நல்ல வேளை! தாத்தா இல்லாமற் போனார்......!" என்று கூறும் போதே தாராவின் கண்களில் கண்ணீர் நிரம்பிவிட்டது.

இதைக் கண்டதும் என்னுடைய தேகம் புளகாங்கிதம் அடைந்தது. தாரா என்னை வெறுக்கவில்லை என்கிற எண்ணம்தான் அதற்குக் காரணம். "தாரா! என் பாட்டு உனக்குப் பிடிக்க வில்லையா?" என்று கேட்டேன்.

"பாட்டு நன்றாய்ப் பாடுகிறீர்கள். நல்ல வேளை. இது தாத்தா காதில் விழாமல் இருந்ததே. அவர் எதிலும் தீவிரமான போக்குள்ளவர். ஒழுக்கத்தில் உயர்ந்தவர். அதே போல் பிறரிடமும் ரொம்ப நல் ஒழுக்கத்தை எதிர்பார்ப்பவர். பிரம்மசாரி என்றால் பெண்ணைத் தலை நிமிர்ந்தும் பார்க்கக்கூடாது என்று கருதுபவர். நீங்கள் இந்த அறைக்குக் குடி வந்த அன்று தாத்தாவைப் புரிந்து கொண்டு ரொம்ப அழகாக அவர் கேள்விகளுக்குப் பதில் சொன்னீர்கள். அதைக் கேட்டு நான் சந்தோஷப் பட்டேன்."


"தாரா! அப்படியானால் அன்றைக்கு ஏன் எனக்கு மாடியறையை வாடகைக்கு விடவேண்டாமென்று யோசனை கூறினாய்?" என்று படபடப்போடு கேட்டேன்.

"ஐயையோ! நான் மட்டும் அன்று தாத்தாவிடம் அப்படிச் சொல்லியிரா விட்டால், நீங்கள் இந்த மாடியறைக்குக் குடி வந்திருக்கவே முடியாது. அதற்காகத்தான் அப்படிச் சொன்னேன் ... சரி! நேரமாகி விட்டது. தாத்தா வந்து விடுவார். தயவு செய்து தாத்தாவிடம் அன்று சொல்லியபடி நடந்து கொள்ளுங்கள்!"

"தாரா! உன்னைப்பற்றித் தவறாக நினைத்து விட்டேன். மன்னித்துவிடு. ஒரு சந்தேகம்... முன்பின் பார்த்தறியாத என்னிடம் உனக்கு இத்தனை பரிவு எப்படி உண்டாயிற்று...?" என்று இளைறித் திக்கிக் கேட்டேன்.

அவள் முகம் நாணத்தினால் சிவந்துவிட்டது.

"உங்களுக்கு வேண்டுமானால் என்னைத் தெரியாமல் இருக்கலாம். உங்களை எனக்கு இரண்டு மாதங்களுக்கு மேலாகவே தெரியும். இந்தத் தெருவழியாக எத்தனை தடவைகள் போயிருக்கிறீர்கள்? அதுவும் இந்த வீட்டு மாடியறையை நோக்கியபடி அன்றைத்தனோடே பரிதாபமான பார்வையுடன் போவீர்கள். உங்கள் கதர் ஜிப்பா, கதர்வேஷ்டி, தோள்பை இவைகளை யெல்லாம் பார்த்து நீங்கள் ஒரு பத்திரிகை ஆபீசில் வேலை பார்க்கிறவரா யிருக்கலாம் என்று நான் ஊகித்தேன். நீங்கள் என்னைப் பார்க்க முடியாதபடி ஜன்னல் வழியாக நான் உங்களைப் பார்ப்பது வழக்கம். நீங்கள் பார்த்து விடுவீர்களோ என்று எனக்குப் பயம் இல்லை. ஆனால் இது தாத்தாவுக்குத் தெரியக் கூடாதே! மாடி அறைக்கு நீங்கள் குடி வர விரும்புகிறீர்கள் என்று ஊகித்தேன். தாத்தாவுடன் தனியே யிருக்கும் எனக்கு நீங்கள் மாடியறைக்குக் குடி வருவதில் திருப்திதான். அதிலும் தாத்தாவுக்குப் பிடித்த லட்சணங்களுடன் நீங்கள் இருப்பதில்தான் மிகவும் திருப்தி. கூடவே ஒரு கவலையும் என்னைத் துளைத்தெடுத்தது. யம காதகரான என் தாத்தாவின் கேள்விகளுக்குத் திருப்திகரமான முறையில் பதிலளித்து அவரிடம் நல்ல அபிப்பிராயம் பெற வேண்டுமே என்று வேதனையாயிருந்தது. மேலும், தாத்தா உடல் நலம் சரியில்லாதவர், திடீரென்று ஜுரமாய்ப் படுத்து விடுவார். அப்பொழுது நான் தனியாயிருந்து ரொம்ப அவஸ்தைப்பட்டிருக்கிறேன். அண்டை அயல் வீட்டாரின் உதவியை நாடவும் அவர் சம்மதிக்க மாட்டார். தாத்தா


என் மனைவி மிகுந்த
அவாவுடன் உண்ணும்
சிற்றுண்டிகளைச்
செய்கிறாள்!
Tushar
5lbs
துஷார்
வைடமின் நிறைந்த வனஸ்பதி
துஷார் வனஸ்பதி சமையலுக்கு ஏற்ற சாதனம் மட்டுமல்ல. இதில் ஏ. டி. வைடமின் சத்துக்கள் நிறைந்து, சமையலின் ருசியையும் வாசனையை ஊட்டமளிக்கும் சக்தியையும் அதிகரிக்கச் செய்கின்றன.
துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிட், கர்நூல்









வுக்கு உங்களிடம் பரிபூரண திருப்தி ஏற்பட்டு விட்டது. நீங்கள் நான் எதிர்பார்த்ததற்கு மேலாக மிகவும் சாமர்த்தியமாக நிலைமையைச் சமாளித்து விட்டீர்கள். சரி! ஒரு முக்கியமான விஷயம். இரண்டு நாட்களாக நீங்கள் இரவு பத்து மணிக்கு மேலே வந்து கம்பியைப் பிடித்துக் கொண்டு மாடிக்கு ஏறிக் கைப்பிடிச் சுவரில் காலை வைத்து உள்ளே குதிக்கிறீர்கள் போலிருக்கிறது. உங்களைப் பிடித்த நல்ல காலம் தாத்தா அந்தச் சத்தத்தைக் கவனித்துக் கேட்கவில்லை. இனிமேல் வாசல் கம்பிக் கதவை நான் திறந்து வைத்து விடுகிறேன். நீங்கள் உள்ளே வந்து சத்தப்படுத்தாமல் மாடிக்குப் போங்கள். உங்கள்மேல் உண்டான அளவு கடந்த அனுதாபத்தினால் நான் இதைத் தாத்தாவுக்குத் தெரியாமல் செய்கிறேன்...!'' என்றாள் தாரா. முத்துச் சுடர் போல் அவள் கண்களில் கண்ணீர் துளித்து நின்றது.



சென்னை இந்திய மருத்துவக் கல்லூரியில் பட்டம் பெற்ற வி. சாவித்திரி ஸ்வீடனில் மருத்துவக் கலையில் ஏழு மாதப் பயிற்சி பெற்று வெற்றியுடன் திரும்பியிருக்கிறார்.

''தாரா! என்னை மன்னித்துவிடு. நீ ரொம்பவும் புத்திசாலி. நான் எதிர்பார்த்ததைவிடச் சாமர்த்தியசாலி. சேர்ந்தாற்போல் சினிமாப் படங்கள் வந்திருக்கின்றன. சினிமா விமரிசனம் எழுதுவதற்காக அவைகளைப் பார்த்துத் தொலைக்க வேண்டியிருக்கிறது. அதனால்தான் அந்தச் சிரமம்...'' என்று கெஞ்சும் குரலில் கூறி அவளைக் கனிவோடு பார்த்தேன்.

''அதைப் பற்றி எனக்கு ஒன்றும் இல்லை. ஆனால் தாத்தா .....! சினிமாப் படங்கள் என்றால் எனக்கு உயிர். சினிமா என்றாலே தாத்தாவுக்குப் பிடிக்காது. ஆகவே, நான் பத்திரிகைகளில் வரும் பட விமர்சனங்களையெல்லாம் படித்து சந்தோஷப்படுவேன். இங்கே எனக்குத் தெரிந்தவர் ஒருவர் வீட்டில் எல்லாப் பத்திரிகைகளும் வாங்குகிறார்கள். 'இளமதி' என்ற புனை பெயரில் நீங்கள் எழுதும் பட விமர்சனங்கள் ரொம்ப ஜோர். நீங்கள்தான் ''இளமதி'' என்பதை உங்களுக்கு வரும் கடிதங்களிலிருந்து தெரிந்து கொண்டேன்!''

''......தாரா! நீ..... என்......!'' என்று உளறினேன்.

அந்தச் சமயம் தாரா, சட்டென்று மாடிப் படியண்டை சென்று, ''அதோ தாத்தா வருகிறார். நான் போக வேண்டும்!'' என்று கூறி விட்டு மின்னலென மறைந்தாள். போகும்போது அவள் என்னைப் பார்த்த பார்வை உலகத்து மொழிகளையெல்லாம் என்னிடம் ஒரு நொடியில் பேசி விட்டது. தாத்தாவிடம் சர்வ ஜாக்கிரதையாயிருக்கும்படி அந்தப் பார்வை எச்சரித்தது எனக்குப் புரியாமல் இருக்குமா, என்ன?

அன்றைய தினத்திலிருந்து நான் சர்வ ஜாக்கிரதையாகி விட்டேன். இந்தப் பக்கம் அந்தப் பக்கம் திரும்பாமல், நேர்ப்பார்வையுடன் பின்கட்டுக்குச் சென்று ஸ்நானம் செய்து விட்டு அந்த பாணியில் மாடியறைக்குத் திரும்பி விடுவேன். குளிப்பதிலும் எனக்கு இப்பொழுது துளியும் சிரமம் இருக்கவில்லை. தாராதான் முன்னதாக நிறையத் தண்ணீர் நிரப்பி வைத்து விடுகிறாளே! தாராவின் தாமரை முக நினைவுடன், அவள் தாமரைக் கரங்கள் நிரப்பிய தண்ணீரில் குளிப்பது எனக்கு விவரிக்க முடியாத இதத்தை அளித்து என் இதயத்தையே குளிர வைத்தது.

அன்று தாரா சொன்னதைத் தாரக மந்திரமாகக் கொண்டு விட்டேன். வாசல் கம்பிக்கதவு திறந்திருக்கும். நான், வீட்டு வாசற்படியை நெருங்கியதுமே கையிலே என் 'காபூல் ஷூ'வைக் கழற்றிக் கொண்டு விடுவேன். பிறகு மெதுவாகக் கதவைத் திறந்துகொண்டு பூனையைப் போல் மாடிப் படி ஏறிச் சென்று அறைக் கதவை ஓசைப் படாமல் திறந்து உள்ளே செல்லுவேன்.

* * *

அன்று இரவு நான் வழக்கம்போல் வீட்டு வாசற்படி அருகில் வந்து ஷூவைக் கழற்றும் போது, ''மிஸ்டர் சந்திரன்! தொந்தரவு செய்வதில்லை யென்று சொல்லிவிட்டு, இப்பொழுது தினசரி தொந்தரவு கொடுக்க ஆரம்பித்து விட்டீரே!'' என்று கடுமையான குரலில் கேட்டவாறே பெரியவர் வாசற்படியில் நின்று கொண்டிருந்தார்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.

''இப்பொழுதெல்லாம் கொஞ்சம் நேரம் ஆகிவிடுகிறது.. நான் மிகவும் ஜாக்கிரதையாக ஓசைப்படாமல்தான் மாடிக்குச் செல்கிறேன்'' என்று மிகவும் தாழ்ந்த குரலில் கூறினேன்.

''நான் அதைச் சொல்லவில்லை. இரவு பத்து மணிக்குமேல் வந்து மாடியில் ஏறி, கைப்பிடிச் சுவரைத் தாண்டிக் குதிப்பதற்கு முன்பு உம்முடைய ஷூவை 'லொடக்' கென்று உள்ளே போடுவீர். இந்த இரண்டு நாட்களாக அந்தச் சத்தம் நின்று விட்டது. சில நாட்களாக அந்தச் சத்தத்தைக் கேட்டுப் பழகிய எனக்கு அது கேட்காவிட்டால் தூக்கம் வரமாட்டேன் என்கிறது. ஏன் அநாவசியமாகப் பூனை வேஷம் போடுகிறீர்?'' என்று பெரியவர் கேட்டார்.

எனக்கு வார்த்தையே வாயில் வரவில்லை. எனக்காக யாராவது இரவல் குரல் கொடுக்க மாட்டார்களா என்றிருந்தது.

''மன்னித்துக் கொள்ளுங்கள் நான் இனிமேல் அந்தச் சத்தம் ஒழுங்காகத் தவறாமல்

படைகுமபடி கவனமாய்ப் பார்த்துக் கொண்டு இருந்தேன்...!" என்று கூறியதும் பெரியவர் முகம் சாந்தமடைந்ததை நிலா வெளிச்சத்தில் நன்றாய்க் காண முடிந்தது.

"முன்பு பாடிய அந்தப் பாட்டை இப்பொழுது நீங்கள் அச்சம் இல்லாமல் பாடலாம்!" என்றாள், என் அருகில் அமர்ந்து கொண்டிருந்த தாரா.

"தாரா! அப்பொழுது அந்தப் பாட்டைப் பாட அச்சமாயிருந்தது. 'இப்பொழுது சற்று நாணமாயிருக்கிறது.' தாரையடி நீ எனக்கு, தண்மதியம் நான் உனக்கு...' என்று உன்னிடம் எப்படிப் பாடுவது? உன் பெயர் தாரா. உன் முகம் தண்மதி! அப்பொழுது... நான் யார்?" என்று அவள் கரங்களைப் பற்றியபடி கேட்டேன்.

"...அந்த இரண்டுக்கும் உரியவர்!" என்று கூறிய தாரா நாணத்துடன், 'நீங்கள் மிகவும் பொல்லாதவர். அன்றிரவு தாத்தா உங்களை மிரட்டியபோது நீங்கள் என்ன பதிலைக் கூறிச் சமாளிக்கப் போகிறீர்களோ என்று தவியாய்த் தவித்தேன். ஆனால் நீங்கள் மிகவும் சாமர்த்தியத் துணிச்சலுடன், அவருடைய போக்கை அறிந்து பளிச்சென்று பதில் அளித்து, எனக்கும் வாழ்வை அளித்தீர்கள்...!" என்று தாரா கிளி மொழியில் கொஞ்சினாள்.

"இல்லை, உங்கள் இருவருடைய போக்கையும் சாமர்த்தியமாக அறிந்து கொண்டு உங்களைச் சேர்த்துவைத்த நான்தான் சாமர்த்தியசாலி." என்றார் அங்கே வந்த பெரியவர்.

நான் உடனே எழுந்து பழைய தாழ்மையான குரலில், "ஆமாம், ஆமாம்! நீங்கள் தான் சாமர்த்தியசாலி!" என்றேன்.

தாராவின் மலர்ந்த முகம் முழுமதியை வென்றது.

"மிஸ்டர் சந்திரன், எங்கே அந்தப் பாட்டை ஒரு முறை பாடும்!" என்றார் தாத்தா.

"எந்தப் பாட்டு ?" என்று கேட்டு நான் அதிர்ச்சியோடு நிறுத்தினேன்.

"அதுதான் 'தாரையடி நீ எனக்கு...!' என்ற பாட்டு. அதற்குள்ளாகவா மறந்துவிட்டீர்?" என்று கேட்டார் தாத்தா.

உடனே நான் அந்தப் பாட்டைப் பாடினேன். தாராவின் தாமரை முகம் மலர்ந்தது. தாத்தாவின் முகமும் மலர்ந்துதான் இருந்தது.

தமிழ் கூறும் நல்லுலகம்

மோரட் ஜில்லாவைச் சேர்ந்த மோதிநகரில் ஏராளமான தென்னிந்தியர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களில் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய நாலு மொழிகள் பேசக்கூடியவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் பொதுவாக இங்கு ஒரு சங்கம் அமைக்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

சங்கத்தின் சார்பாக நூல் நிலையம் ஒன்று நடத்த வேண்டும் என்றும் முடிவு செய்தனர். திரு டி. எஸ். சுப்பையா அவர்கள் சங்கத்துக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

சங்கத் திறப்பு விழா சைக்கிள் தொழிற்சாலை உதவி மானேஜர் திரு ஏ. எஸ். ராஜு அவர்களின் தலைமையில் நடந்தேறியது. திரு மணி ஐயர், திரு தியாகராஜா, திரு லக்ஷ்மண ராவ், திரு சின்னசாமி, திரு சைமன் முதலியவர்கள் விழாவில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினார்கள். செயலாளர் திரு சுந்தரராஜ் அவர்கள் நன்றி கூறினார். சிறுவர்களுக்கு மிட்டாய் வழங்கப்பட்டு, தேநீர் விருந்துடன் திறப்பு விழா இனிது நிறைவேறியது.

★

ஜெய்ஜவார் நகர் காலனிக்குச் சமீபத்தில் ராஷ்டிரபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத் விஜயம் செய்தார்.

ராஷ்டிரபதி அவர்களை, காலனித் தலைவர் ஸ்ரீ எம். ஆர். கிருஷ்ண எம். பி. அவர்கள் வரவேற்றார். இருபது வருஷங்களாகக் குடிசையில் வாழ்ந்து கொண்டிருந்த ஏழை ஹரிஜனங்களுக்கு 150 வீடுகள் கட்டிக் கொடுத்து, அவர்களுடைய முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டு வரும் ஸ்ரீ கிருஷ்ண அவர்களை மிகவும் பாராட்டினார்.

இந்தோர் தென்னிந்திய கலைச் சங்கத்தின் ஆதரவில் இம்மாதம் 6-ம் தேதி திரு பூர்ணம் விசுவநாதன் எழுதிய "என்ன மறதி?" என்ற ஓரங்க நாடகமும், திரு 'நாடோடி' எழுதிய "அப்பா டியூஷன்" என்ற ஓரங்க நாடகமும் நடிக்கப்பட்டன. இவ்விரு நாடகங்களை டைரக்ட் செய்ததோடு, 'அப்பா டியூஷன்' நாடகத்தில் தகப்பனாராக வேஷம் தாங்கிச் சபையோரைச் சிரிக்கச் சிரிக்கச் செய்துவிட்டார் திரு "அரவரசன்" அவர்கள். இதே நாடகத்தில் பிள்ளையாக நடித்த மாஸ்டர் கிட்டுவும், 'என்ன மறதி' நாடகத்தில் செவிட்டு மாமனாராக நடித்த திரு என். கிருஷ்ணமூர்த்தியும், ராக்கம்மாவாக நடித்த திரு சாரங்கபாணியும் நன்றாக நடித்து எல்லோரது பாராட்டுதலையும் பெற்றனர். இவ்விரு நாடகங்களுக்குமிடையே திரு ஆர். ரவீந்திரனின் ஒரு மணி நேர வீணைக் கச்சேரி கச்சிதமாக அமைந்தது.

★

ஸ்ரீகோலா தக்ஷிண பாரத் சமாஜத்தினர் தங்கள் ஆண்டு விழாவை ஜூலை 13ல் வெகு விமரிசையாகக் கொண்டாடினர். ஸ்ரீகோலா இரும்புத் தொழிற்சாலையின் டைரக்டர் திரு எம். கணபதி அவர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார். ஒருவருக்கொருவர் பிரிவு பாராட்டாமல் ஒற்றுமையுடன் கலந்து தொண்டில் ஈடுபடவேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். தேநீர் விருந்துக்குப் பிறகு ஸ்ரீமதி வசந்தி அப்புராவ் அவர்களின் ஹிந்துஸ்தானி சங்கீதமும், குமாரி ஞானவி சுப்பிரமணியத்தின் நடன விருந்தும், கட்டபொம்மன் நாடகத்தில் ஒரு காட்சியும் இவ்விழாவில் இடம் பெற்றிருந்தன.

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor : T. Sadasivam

உங்கள் அழகே உங்களுக்கு ஆபரணம்...
உங்கள் முக சருமத்தை மென்மையாயும் அழகாயும் வைக்க

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்

உபயோகியுங்கள்

மிருதுவானதும், குளுமையானதுமான பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உங்கள் சருமத்திற்குப் பாதுகாப்பு அளித்து, அதை அழகுடனும், இளமையுடனும் வைக்கும்! இது எண்ணெய்ப் பசை யற்றது. மற்றும் முகத்தில் தடவிய சிறிதே விநாடிகளில் மறைந்து விடுகிறது. பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் தடவி பவுடர் போட்டுக் கொண்டால் பவுடர் மணிக்கணக்கில் படிந்திருக்கும்.



சருமத்தை சுத்திகரிக்கும் அற்புதமான க்ரீம்

தினமும் இரவில் பாண்ட்ஸ் கோல்டு க்ரீமை உங்கள் முகத்தில் தடவுங்கள். அது சருமத்தை சுத்தம் செய்து, சருமம் மிருதுத்தன்மையற்றுப் போவதையும், சருமத்துவாரங்கள் வரண்டு போவதையும் தடுக்கிறது. அன்றாடம் பாண்ட்ஸ் கோல்டு க்ரீம் உபயோகித்து, உங்கள் அழகுக்கு தகுந்த பாதுகாப்பு அளியுங்கள்.



இலவச புத்தகம்

"LOVELIER WITH POND'S" என்ற எமது இலவச புத்தகத்தை வரவழையுங்கள். இதில் அழகு பராமரிப்பு பற்றி உபயோகமான குறிப்புகள் அடங்கியுள்ளன. பி. ஓ. பாக்ஸ் 1612, டிபார்ட்மெண்ட் நெ. 25V, பம்பாய்-1 என்ற விலாசத்திற்கு 25 நயா பைசா ஸ்டாம்புடன் எழுதவும்.

செஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பரேட்டட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பெற்றது)

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



RP. 152-50 TM